213

213

வைத்திய அட்டவணை

(சிகிச்சை போதினி)

உ.

ஆட்சும

சிகிச்சா போதினி.

முதற் பாகம்.

உ

சூட்சுமம்.

சிகிச்சா போதினி.

முதற் பாகம்.

அட்டவணை.

முதலதிகாரம்.

இ

இஞ்சித் தைலம்
இந்து மாத்திரை
இரத்தமதிசாரத்து இலட்சணம்,
இருவங்கச்சூரணம்
இலகு பேதித் திரிபலாதி
இலவணாதித் தைலம்
இன்கர்ப்பியா மாஜின்

உ

உன்மத்த நோய் சிகிச்சை — —

ஊ

ஊறற் யோகம் (தீச்சுழற் றலுக்கு—
மேற் படர (வேறு)

க

யோகங்கள் (தீ நோய்க்கு)
கடுக்காய் சர்பத்து —— —
கடமதிசாரத்து இலக்கணம் ---.

கா

காவற்ற தைலம் (அர்த்திரா பங்கத்திற்கு)
காக்கைவலி அக்கிராணங்கள்,
காக்கைவலி கோரகிளாதி மாத்திரை.

காக்கைவலி நிறியக்கள்
காக்கைவலிப் புகை
காக்கைவலிப் பொதுச்சிகிச்சை
காக்கை வலி மாத்திரை
காக்கைவலி பதிகங்கள்,

கை

கைந்தி மாத்திரை ... ---
வெக்தராயன்றும் மகா மேச்சை
சிகிச்சை தகியம்
சேர்ப்பாறுவேறு
சதாப் தைலம்.

சா.

சாமந்தித் தைலம்

இ

இரல் நாணம் ---
இருகோட்டத் தைலம் ---
இரு சதாவ் தைலம் . ---

ஈ.

ஈமைக் காலங்கிப்புத் தைலம்.

உ.

உக்கு மாத்திரை.
உறைக்கா வெண்ணெய்

ஊ.

ஊரணம் (தேவ அழற்றுக்கு)

4

தே.

தெ

தெய்வத் தலம் ——

தொ

~~தொண்டைத் தலம்.~~

தீ

தீவிர இருதயப் பாதிப்புற்றவர் ஆய்வு (
வைத்தியச் சிகிச்சை.)

தீநோய் ஆக்கிரமணம், ——

தீநோய் உதிரம்.

தீநோய்க்கான நியமங்கள்.

மேற்படி (வேறு)

தீநோய்க்கு ஆவி.

தீநோய் சிகிச்சை

தீநோய் மேற்புறத் தலம்

மேற்படி (வேறு)

தீர்க்கத் தலம்.

தனிப்பால் நியமம் (தொவரட்சிக்கு)

மேற்படி (வேறு)

தனிக்குளிர்ச்சியதிகாரத் தலட்சணம், ——

தனிக் கொழுமையதிகாரத் தலட்சணம் ——

தனிச் சூடதிகாரத் தலட்சணம்

தனி வரட்சியதிகாரத் தலட்சணம் ——

தா

தாமரைப்பூ வெண்ணெய் ——

துடி

துடிநோய் சிகிச்சை —
~~தேன் சாபத்.~~

தே

தேன் சாபத்

ந

நடுக்கல் நோய்சிகிச்சை -
நவசாதி சர்பத்

நா

நாரணத் தைலம் -
நாபி மாத்திரை —

நி

நித்திரபங்க நோய்கள் —
நித்திராபங்க தாராக்குளியல்
நித்திரா பங்க நோய் சிகிச்சை

ப

பச்சிலைத் தைலம்.
பத்தையாசுத் திலா (நித்திரா பங்கத்திற்கு)
(மேற்படி வேறு)
பட்சவாத அக்கிரணம்
பட்சவாத அதவி
பட்சவாத உதிதங்கள்
பட்ச வாத நதியம்
பட்டவாதம், முகவாதம் ஆகியவைகளின் சிகிச்சை,
மேற்படி யொதுச் சிகிச்சை -

பற்பங்கள் (க்ஷயநோய்க்கு)
பற்பமாத்திரை (க்ஷயநோய்க்கு)
பணப்சா குல் கந்து
பணப்சா சர்பத்து

பா.

பாகப் பகுத்தும் இயாழும்
பாதக் குளியல்
பாதக் குளியல் விதி.

பி

பித்தமதிகரித்த இலட்சணம்

பு

புஷ்ப மாத்திரை
மேற்படி (வேறு)

பூ.

பூண்டு மாஜூன் --- 68

பை

பைத்திய உசிதங்கள்
பைத்திய தைலம்

போ

போரசித் தைலம்

~~ெ~~ம.

மகா கோஷ்டத் தைலம்
மணித் தைலம்
மல்லித் ~~[illegible]~~ லாதி —
மல்லித் சூரணி —

மறதி உதிரம்
மேற்படி (வேறு)
மறதித் தூள்
மறதி மாத்திரைகள்
மறதி நோய் சிகிச்சைகள் -

மூ

மூர்ச்சை உதிரம்
மேற்படி (வேறு)
மூர்ச்சை நசியங்கள்
மூர்ச்சை பாதக்குளியல்
மூர்ச்சை நோய் சிகிச்சை -
மோஹா பலகாரா -

மே

மேனித் தைலம்.

லா

லாலா சர்பத்து

வ

வசம்புச் சுட்டுணி
வசம்பு மாத்திரை
மேற்படி (வேறு)
வண்டல் அல்லது வாதமுதிர்ந்த இலட்சணம்

வா

வாயுசங்காரத் தூள்
வாயு நவைத் தைலம்

ஸ்ரீ 1.

ஷித்த்ராதி த்தைலம் (நேத்திரபலங்களுக்கு)

வியாதிகளைத் தொடர்ந்து கொள்ளப் } பொது லட்சணைகள். —

முதலதிகார அட்டவணை முற்றிற்று.

உ

மூன்றதிகார அட்டவணை.

அ.

அகர் ஜுவாளவத்தி
அசாத்திய கண்டமாலை
அசாத்திய சுவாச நோய் இலட்சணம்.
அநூவத்தாரு என்னும் சேந்திரன் லேகம்
அரசம்பட்டை புசிதம்.
அருவருத்தல், குமட்டல், வாந்தி } ஆகியவைகளைச் சிகிச்சை —
அர்க்கன் மாத்திரை
அள்ளு நோயி சிகிச்சைகள் —
அள்ளு நோய் லட்சணம்
அண்ணன் ஜுவாரிஷ்
அண்ணன் பக்குவம்
அன்னபி பழசப்பத்து —

உ.

ஆ.

ஆமலக ஜவாரிஷ்
ஆமலகாதி மாத்திரை
ஆமலை சர்பத்து
ஆமலை பேதம்
~~ஆமலை~~
ஆலம் விழுதுப் பிரயோகம்
ஆவாரை மாத்திரை
ஆவாரை இளகம்.

இ.

இஞ்சிவாதி மாத்திரை -
இசபகோல் உதிரம்
இசபகோல் விதைக் கோழை
இஞ்சி ஜவாரிஷ்
இரத்தங் கக்கல்
இரத்தங் கக்கல் நோய் மாத்திரை.
இரத்தங் கக்கல் நோய் வேறு சிகிச்சைகள் -
இருதய உற்சாக சர்பத்து
இருதயத் துடிப்பு நோய் சிகிச்சைகள் -
இருதயத் துடிப்பு நோய்
இருமல் சர்பத்து
இருமல் தூள் -
இருமல் பாயசம்
இருமல் மாத்திரை
இருமலீ நோய் .

இ

இரைப்பை தொடர்பான நோய்களின் சிகிச்சை -
இரைப்பையில் பால் அல்லது இரத்தம்
சேர்ந்திருப்பின் சிகிச்சை -
இரைப்பை நோய் தைலம்
இலத்தையாதி மாத்திரை -
இலவண பற்படம் (வயிற்று நோய்க்கு)
இலவண மாத்திரை -
இலவணாதித் தைலம்
இலவணாதி மாத்திரை -

உ

உத்தணகஸ்தூரப் பிரயோகம் -
உண்ணாக்கு வளர்ச்சி சிகிச்சை
உழுந்து கிருதம்.

எ

எருக்கு உப்பு விளக்கம்.

ஏ

ஏரண்டத் தைலம் -
ஏலக்கியாழம்
ஏலாதி ஜவாகாரம்

ஐ

ஐம ஜவாகாரம் -
ஐம மாத்திரை.

க

கக்கோபாலின் மாத்திரை -
கரகசான் பற்பு

கடவியாதிப் புகை
கடுகுப் பிரயோகம்
கடுக்காய் மாத்திரை
கடுவாதித் தூள்,
கண்ட மாலை-
கண்டமாலைச் சிகிச்சை
கணை ஜுவாரிஷ்
மேற்படி வேறு
கஸ்தூரிப் புகை
கருஞ்சீரக உதிரம்.
கருஞ்சீரக ஜுவாரிஷ்
கருசீர் உதிரம்
கரியாதித் தூள்
கன்னத் கனன் வீக்கச் சிகிச்சை
கன்னத் கனன் வீக்கம்

கா

காசினிப் புகை
காடி சர்பத்
காட்டெருப் பிரயோகம்
காய உதிரம்
காவ மாத்திரை
காவு ஸ்பான் சர்பத்து

கி.

கிச்சிலிக் கியாழம்
கிச்சிலி மாத்திரை-

12

கிருட்டிண வவணைத்தான் -

கு

குந்திரிக்க ஜவாரம்
குந்திரக்க பில் பொத்திரை
குங்கிறாக் கடம் முதல்
குறக்கம் மெதாற் பிச்சை
குல் கரத்து

கொ

கொண்டைக்கடலை உசிதம்

கோ

கோடக அமுரி மாத்திரை -
மேற்படி (வேறு)
கோண புசிதம்.

ச

சதுப்பை வெண்ணெய்
சதாப் புசிதம்
சதுர் சாவ்கத்தாள்
சந்தன பானம்
சண்ணாரவட்ட ஜவாரம்
சறமாதித் தாள்

தி

திருபின்ன பிரு மெழுக்கு
திருவவ ஜதி கிளகம்
திற்றுமணக் கெப் பருப்புத்தாய்லம்

உ

சீ

சீதகஞ்சாரப் பிரயோகம்.
சீரகாதிக் கியாழம்.
சீல யுசிதம்

சு

சுக்கு ஜுவனாஷ்
சுவாசநோய்த் தாங்கள்
சுவாசநோய்க்கு வேறு உசிதமுறைகள்.
சுவாசநோய் இலட்சணம்.

சோ

சோம்புக் கியாழம்

த.

தம்பல சர்பத்து

தா.

தாகநோய் சிகிச்சை
தாமரை யுசிதம்
தாமரை சர்பத்து

தி.

திப்பிலி ஜுவாஷ்
திராட்சாதி மாத்திரை
திராட்சைப் பிரயோகம்
திரிகடுகு அரன்
திருகு கள்ளி யுப்பு.

தி.

தீ.

தீபாக்கினி சர்பத்

து.

துருஞ்சி ஜவாரிஷ்

துனாபி சர்பத்

தெ

தேங்காயுதிரம்

தேங்காய்நார் உதிரம்.

தொ

தொண்டையால் அட்டை கடித்துக்கொள்ளல் —

தொண்டையால் அட்டை கடித்துக் கொண்டதற்கு சிகிச்சை —

தொண்டை நோய் சிகிச்சை —

நா

நாயுருவியுப்பு

நாவின் நோய் சிகிச்சை -

நி

நிம்மை யுதிரம்

நிலஆவரைத்தூள்

நிலா. ஒலிகந்து

உ

நீ

நீலாம்பர உதிரம்

நொ

நொவாதைத் தூய்மை

ப

பக்கநோவு, பக்கசூலை
பக்கநோவு பக்கசூலைக்குப் பற்றுகள்.
பக்கநோவு பக்கசூலைச் சிகிச்சை
பசித் தீபன உதைமுறை
மேற்படி (வேறு)
பஞ்சகோலத் தூள்
பட்டு சர்பத்து-
பசலைக்கீரை உதிரம்
பழ சர்பத்து

பு

புணுகியாதி சர்பத்து

பூ

பூங்காவிப் பிரயோகம்
பூசண உதிரம்
பூவத்திக் கொட்டை உதிரம்

பே

பேதிச் சிகிச்சை-

உ

பொ

பொதினா உசிதம்.
பொதினா ஜவாரிஷ்
பொதினா சர்பத்
பொதினா மாத்திரை
பொன்னுருக் கொட்டை புசிதம்

ம

மகாதிர்பாலவாதி-
மணல் புற்றிடம் (வயிற்று நோய்க்கு)
மஞ்சேர ஜவாரிஷ்
மண் விளைக்கிப் பிரயோகம்
மயாவிறைகு சிதம்.

மா

~~மாதி~~
மாஞ்சிஞ் கியாழம்,
மாங்கில் சர்பத்து
மாதுளம் பழச்சர்பத்து
மாதுளைத் தாள்
மாதுளைப் பல் மாத்திரை
மாதுளா லேகம்
மார்போதவுக் கிக்கிசைகள்
மாவிலைப் புகை.

உ

ளி

ளைகாய் உசிதம்

வ.

வயிற்று நோய்ப் பற்று

வா.

வாய்நீரொழுகல்

வி

விக்கல் நோய் சிகிச்சை

வெ.

வெண்கார மாத்திரை
வெற்றிலைத் திராவகம்.

வே

வெப்பிலை யுசிதம்
வேல்முள் கொழும்
வேளை மாத்திரை

ஹா

ஹாமிமஸ்தகி ஜவாரிஷ்

ஜ

ஜ[illegible]க் சர்பத்து

ஜீ

ஜீரணத் திப்பிலாதி லேகம்-
ஜீரண பில்லை மாத்திரை

18

உ

ஊரணை மாதத்திரைக் கொண்டான்,
ஊரணைப் பெருக்கத்திற் கொண்டான்,

ஊற.

ஊறப்பூஸ்குஸ் சா

முன்றுகம் அதிகார அட்டவணை
முற்றுப் பெற்றது-

உ

முகவுரை

மருத்துவ நண்பர்களே!

இந்த அருமையான நூல் வெளிப் படுத்த நேரிட்ட காரணம் பின் வரும் செய்திகளால் வெள்ளிடை மலைபோலத் தெளிவாய் விளங்கும். நம்மால் இதுவரையில் வெளிப் படுத்தப் பட்ட பல நூற்களையும் படித்து அவற்றின் படி அவற்றிலுள்ள முறைகளைச் செய்து அவற்றினுண்டாகும் பல நன்மைகளை அநுபவித்து நம்மைப் பலவிதத்தாலும் பெருமைப் படுத்தி வரும் நண்பர்கள், இக்காலத்தில் அனேகர்க, ஆங்கிலேய மருத்துவர்கள் ~~கூறிய~~ எல்லோரும் இந்திய மருத்துவமானது மிக மேன்மையானதெனவும், அது எந்த விதத்திலும் கெடுதி தோட ஏதுவில்லாததெனவும் அங்கீகரிக்கப் பட்டு வருகிறதென்றும், அதனால் அம் மருத்துவம் இந்நாட்டில் எங்கும் பரவ வேண்டுமென்றும், இந்திய மருத்துவ நூற்கள் தமிழ்மொழியிலும் பிறமொழிகளிலும் பல விருக்கும், அவைகளை

யெல்லாம் தக்க ஆசிரியர்களைப் பலநாள்
அடுத்துக் கற்றுக் கொள்ள வேண்டியவை
களாயிருப்பதோடு அந்தந்த மொழிகள் தெரிந்
தவர்கட்கே யன்றி மற்றவர்களுக்குப் பயன்
படக்கூடாதவைகளாயிருப்பதால், தமிழ் பழக்கத்
தெரிந்த அனைவரும் தமிழ் ~~[illegible]~~ மருத்துவர்
களின் உதவி அதிகமில்லாமல் தாமே தாமே
இந்திய மென்ற மருத்துவத்தை முறைக் கிரமத்
தோடு ஆரம்பமாகத் தெரிந்து கொள்ளும்
படி இந்த மருத்துவநூலை வெளிப்படுத்த
வேண்டுமென்றும், அதில் நோயின்
காரணம், இலட்சணம், சிகிச்சை முதலிய
வைகளெல்லாம் அதிக விரிவாகவில்லாமலும்,
சுருக்கமாகவும், விளக்கமாகவும், இருக்க
வேண்டுமென்றும் பலவகைக் கடிதங்களித்
தாலும் நேரிலும் விரும்பிக் கேட்டு
வற்புறுத்தி வந்தார்கள்.

ஆகவே, அதற்கு அதிக ஆற்
பயாற் றியும், அதை விளக்கமாய் வெளிப்

படுத்த அதிகக் கல்வித் திறமையும் வேண்டும்.
அடியேன் அவ்வளவு தோற் பயிற்சியும், ஆற்றலும்
~~[illegible]~~ இல்லாதவனேயாயினும் நமது நண்பர்
களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டு
மென்னும் கருத்தால் பலவிதத்திலும்
முயன்று கடவுளது அருளாலும், பெரி
யோர்களின் வாழ்த்துக்களினாலும் நமது
மருத்து நண்பர்களின் உதவியாலும்.
மேற்கண்டபடி ஒரு மருத்துவ நூலை
எழுதி முடித்து, "மருத்துவ பால போதினி" யைப்
பெயரிட்டு அச்சிட்டு வந்தேன். அப்படி
அச்சிட்டு வருகையில் அதில் சில செய்தி
களைச் சேர்க்க வேண்டிய காரணத்தால்
அது அச்சிடத் தாமதமாகிவிட்டது.
அஃதப்படியிருக்க, வேறொரு வகையால்
மனிதருக்கு ~~[illegible]~~ த்தலைமுதல் ~~[illegible]~~
பாதமீறாகவுள்ள நோய்களுக்காம்
மருத்துவ நுணுக்க முறைகள், அப்புதமுறைகள்

அருமையான வைத்திய நூல்களைப் பல
நூற்களிலிருந்தும் சேகரித்து அவைகள்
இலவற்றைத் தனிப் பதிப்புகளாக அச்சிட்டு
சிலவற்றை எழுதியும் புதுப் புத்தகத்திற்கு
அநேகம் படி ஒழுங்கு செய்து வந்தேன்.
அப்படி ஒழுங்கு செய்து வந்தவை
களுள் இப்போது சில பதிப்புகள் நீங்கி
பகுதிக்குப் போதுமானவைகளா
யொழுங்கு படியால் இவற்றை மட்டுமே
வரு இப்போது இன்னும் வெளிப்படுத்து
வோமெனக் கருதி, அவற்றையெல்லாம்
தொகுத்து "அநுபவ சிகிச்சா போதினி"
(~~[illegible]~~ (நுணுக்கமுறை
மருத்துவ விளக்கம்) நூற்பாகம்" என்னும்
~~[illegible]~~. இந்நூலாக வெளிப்படுத்தி
இருக்கின்றேன். ~~இந்நூலானது~~
~~அதிக அநேகமான பேறுகளையுடையது~~.

உ.

இந்த நூலானது அதிக அருமையான ~~[illegible]~~
முறைகளடங்கியது. மேலுங்கண்ட "மருத்துவ
பால போதினியும்" இந்த "சுட்சும
சிகிச்சா போதினியும்," இரண்டு புத்த
கங்களுக்குச் சமமானவை. ஆகையாலும், இந்த
~~[illegible]~~ சுட்சும சிகிச்சா போதினி, இந்த
மாசக்கையிலிருந்த பழையாலிருந்த முன்னர்
வெளிப்படுத்தினேன். ~~[illegible]~~ மருத்துவ பால
~~[illegible]~~ போதினியும் அச்சிலிருக்கின்ற
பழையால் கூடிய விரைவில் வெளிவரும்..
அந்த "மருத்துவ பால போதினியில்
தலைமுதல் பாதமிருக்க உள்ள உறுப்புக்
களைப் பற்றிய நோய்களின் விவரங்களை மருத்துவம்
முதலியவைகளெல்லாம் வகை விளக்கமாகச்
சொல்லப்பட்டிருக்கின்றன. ~~[illegible]~~
~~[illegible] மருத்துவங்களெல்~~
~~லாம்~~) இந்த சுட்சும சிகிச்சா போதினியில்
நோய்களின் நுண்ணிய மருத்துவங்க
ளெல்லாம் [illegible] விளக்கமாகச் சொல்லப்-

24

பட்டு வருகின்றன. இது பெரும்
புற்றுநோயாக உருவெடுக்க உதவியாயுள்ளது
இதனைப் பல பாகங்களாக ~~...~~
~~...~~ வெளிப்படுத்தக் கருதி இப்போது
இப்பாகத்தை முதற்பாகமென வெளிப்படுத்தி
யிருக்கிறேன். இதன் அடுத்த பாகங்களும்
விரைவில் ~~...~~ வெளிவரும். இதன்
இரண்டாம் பாகம் இப்போது அச்சாகி
வருகின்றது. நாம் இதற்கு முன் இச்
சிகிச்சைகளைத் தனித்தனி ~~...~~ அதிகார
மாக வெளிப்படுத்தியிருந்த நாவின்
நோய்ச் சிகிச்சையிலிருந்து இரைப்பை
நோய் சிகிச்சை வரையில் இருபத்தக
[illegible] ருந்தோம். இப்போது
மாக அச்சிட்டு [illegible] து நோய் சிகிச்சை
க்குரிய பகுதி
யிலிருந்து உரிமையாக வெளிப்படுத்த
உத்தேசித்த படியால் அதனைத் தனியான
வெளிப்படுத்துவதை விட்டு இத்தகைற்
பாகத்தோடு சேர்த்தே வெளிப்படுத்த
தீர்மானித்து, அதற்கு முன்னுள்ளவற்றை

யெழுதிவந்ததில், புத்தகத்திற்கு நாம்
கிடைத்த பாரங்களுக்குமேல் அதிகப்
படுவதனால், தலைநோய் சிகிச்சையாலிருந்து
பைத்தியநோய் சிகிச்சைவரையான பகுதி
முதல் அதிகாரமாகவும், ~~அதற்குமேல் வயிற்று~~
~~மலிருந்~~த கண்ணோய் சிகிச்சை முதல்
பல்நோய் சிகிச்சைவரை இரண்டாமதி
காரமாகவும் ~~...~~, ~~...~~
நாவின்நோய் சிகிச்சை வரையான
அச்சிட்டிருந்த புத்தகத்தை மூன்றாம்
அதிகாரமாகவும் மேற்கண்ட முதல் அதிகாரத்
துடன் இரண்டதிகாரத்தையும் ~~...~~
சேர்த்து ஒரு புத்தகமாக்கி மேற்படி
முற்பாக மென வெளிப்படுத்தியிருக்கின்றேன்.
~~...~~. இதில் இவ்விரண்டதிகாரங்கட்கும்
~~...~~யே அட்டவணை எழுதப்பட்டிருக்
கிறது. முதலதிகாரம் ~~...~~ — பக்கத்தில்
முடிகிறது. அதன்மேல் மூன்றாம் அதிகார
வரை தனித்தனியே அச்சு புத்தகச் சேர்க்கப்
பட்டிருக்கிறது.

உ.

இந்திய மருத்துவ முறைகளில் பெரும்பாலும் எளியருக்குக் கிடைக்கக் கூடாத அம்பர், கஸ்தூரி, [illegible], நன்முத்து, நற்பவளம், முதலிய விலையுயர்ந்த சரக்குகளும் [illegible] பெயர்களுள்ள பல உயர்ந்த பொருட்களும் சேர்வது வழக்கம். அதனால் ஏழைகளும், எளியவர்களும் அம்முறைகளைச் செய்ய முடியாமல் மயங்குவதுண்டு. அதனலாம் அப்படியல்லாத படி எத்தகையரும் முறைகளைச் செய்து உபயோகிக்கும் பொருட்டு இந்நூலில் அத்தகைய உயர்ந்த சரக்குகள் தொடர்பான முறைகளின்றி சாதாரணப் பொருட்கள் தொடர்புள்ள முறைகளான தனிச்சரக்குப் பிரயோகம், மேலிகைப் பிரயோகம், உதிரப் பிரயோகம், இலகுப் பிரயோகம், இரகசியப் பிரயோகம், கைம்முறைப் பிரயோகம், உபதேசப் பிரயோகம், உன்னதப் ~~பி~~ பிரயோகம், அற்புதப் பிரயோகம்,

அற்புதப் பிரயோகம், திவ்யப் பிரயோகம்,
சன்னியாசிப் பிரயோகம், யோகிப் பிரயோகம்,
வீட்டுப் பிரயோகம், ~~பரம்பரைப்~~ பரம்பரைப்
பிரயோகம், முதலிய முறைகளை, தலை
முதல் பாதம் வரையுள்ள நோய்களுக்கு
வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.
அவற்றுள் இந்த முதற்பாகத்தில்,

நோய்களைத் தெரிந்து கொள்ளும்

பொது லட்சணங்களாகிய தனிச்
சூடதிகரித்த லட்சணம், இரத்தமதிகரித்த
இலட்சணம், பித்த மதிகரித்த இலட்சணம்,
தனிக்குளிர்ச்சி யதிகரித்த இலட்சணம், தனிக்
கொழுமையதிகரித்த இலட்சணம், கபமதிகரித்த
இலட்சணம், தனிவறட்சி யதிகரித்த இலட்சணம்,
உஷ்ணம் அல்லது வாத மதிகரித்தலட்சணம்,
ஆகியவைகளும்; தலைநோய்ச் சிகிச்சைகளாகிய
மல்லித்திரிபலாதி, இலுப்பைத் திரிபலாதி,
கடுக்காய்ச் சாற்பத்து, பனைச்சா சாற்பத்து,

·௨௮·

உ

பனப்பா இல் கந்து, தைராமையல்கள்,
இயாவுங்கள், பற்றுக்கள், ஆகிய வகைகள்,
பற்று மாத்திரைகள், இஞ்சித் தைலம், வேனிற்
தைலம், செம்பைத் தைலம், கொள்ளுத் தைலம்,
நாணற் தைலம், முதலிய தைல வகைகள்,
தலைக் குளியல், பாதக் குளியல், ஆவிகள்,
ஆக்கிராணங்கள் ஆகியவைகளும், சேர்க்கை
நோய் சிகிச்சைகளாகிய அரைக்க
வெண்ணெய், தாமரைப்பூ வெண்ணெய்,
அகர்சார்பது, லேகியங்கள், உணவு வகைகள்,
மூர்ச்சைப் பாதக் குளியல், ஆகியவைகளும்,
சிகிச்சைகளாகிய கொலைவாதி
காக்கைவலி சிகிச்சைகளாகிய லாலா சர்பத், அக்கரா
மாத்திரை, ~~[struck out]~~ ஆகிய வகைகள், ஆக்கிராண
கிரா மாத்திரைகள், உருண்டைகள் ஆகியவை
வகைகள், புகைகள், உருண்டைகள், மகாமேர்ச்சை,
களும், சுக்கா என்னும் மகாமேர்ச்சை
சிகிச்சை நயங்களும், மாறி நோய்
சிகிச்சைகளான மாத்திரைகள், ஆரணங்கள்
உருண்டைகள் ஆகியவைகளும், திலகசிருப்பு,

நீர் அழற்றல் சிகிச்சைகளாகிய உளரற்
றியோகங்கள், சூரணங்கள் ஆகியவைகளும்,
~~அதிசாரம்~~ அதிக உறக்க நோய் சிகிச்சை
களும், உறக்கக் கெடுதி நோய் சிகிச்சை
களாகிய வித்தாதித் தைலம், காவேரி தைலம்
முதலிய தைலங்கள், பச்சையிலைத் திலாதெளிய
திராவகங்கள், ~~[illegible]~~ நாய்ப்பால் நசியம்,
முதலிய நசியங்கள், மெல்லித் தூள், நித்திரா
பங்கதாரக்குளியல், அக்கிரோணம், உகிரங்கள்,
ஆகியவைகளும், பட்சவாதம், கேசவாதம்,
ஆகியவற்றின் சிகிச்சைகளாகிய சர்பத்,
அயாளஜுலைக்கிறா என்னும் லே
கியம், கோபி மாத்திரை,
சிரூபா மாத்திரைகள், இந்து மாத்திரை, தக்டு
கெந்தி மாத்திரை, புஷ்ப மாத்திரைகள், ஆகிய மாத்
திரை, ~~கோபி மாத்திரை, கெந்தி மாத்திரை~~
திரைகள்,
வசம்பு மாத்திரைகள், பூண்டு மாத்திரைகள், கிராம்பு
மாத்திரைகள், ஆகிய மாத்திரைகள், நவசாதி
சர்பத், வசம்புச் சட்னி, வாயுசங் காரத்தூள்

அமிர்தத் தைலம், திருகோஷ்டத் தைலம், பஞ்சதித்தத்
தைலம், மகாகோஷ்டத் தைலம், சாமந்தித்
தைலம், சதாப் தைலம், சீமைச் சாமந்
திப்பூத் தைலம், சிறுசதாப் தைலம், மணித்
தைலம், இலவணத் தைலம், ~~யோகி~~ யோகித்
தைலம், வாயுநைவத் தைலம் தணாச்சித் தைலம்,
ஆகிய தைலங்கள், கிருவங்கத் தூள்,
உதிரங்கள், நசியங்கள், அக்கிராணங்கள்,
ஆவிகள், ஆகியவைகளும், உன்மத்த
நோய் சிகிச்சைகளாகிய அப்திமீன்
சிகாமது பானங்கள், நசியங்கள், உதிரங்கள்,
ஆகியவைகளும், மூளைநோய் சிகிச்சைகளும்,
நாவின் நோய் சிகிச்சைகளும், கண்
வீக்கச் சிகிச்சைகளும், இறக்கம் முதல்
சிகிச்சைகளும், கண்டமாலைச் சிகிச்சை
களும், தொண்டையாள் அட்டை கழுத்துக்
கொள்ளுதல் சிகிச்சைகளும், சுவாச
நோய் சிகிச்சைகளாகிய மாத்திரைகள்,

தாட்கள், உதிரமுறைகள், வருக்குப்புவிபரம்,
நாயுருவியுப்பு, திருக்கள்ளியுப்பு, கசகசா
சர்பத், புகையிலை, சர்பத், ஆகியவைகளும்,
நேத்திரங்கள் நோய் சிகிச்சைகளாகிய
மாத்திரைகள், ஜெபகோல் விதைக்கோவை,
கைற்றேபாடில் மாத்திரை, மாதுளை
பில் மாத்திரை, உறப்புலி அதல் சார்பத்து
ஆகியவைகளும், அன்னநோய் சிகிச்சை
களாகிய கோடாசூரி மாத்திரை தெளிய
மாத்திரைகள், பற்றுக்கள், உதிரங்கள்,
ஆகியவைகளும், பக்கநோவு பக்கத்துச்
சிகிச்சைகளாகிய உதிரங்கள், பற்றுக்கள்,
ஆகியவைகளும், மார்நோவுச் சிகிச்சைகளும்,
நேமல் நோய் சிகிச்சைகளான உதிரமுறைகள்,
மாத்திரைகள், தூட்கள், பாயசம், சர்ப்
தூக்கள், லேகியங்கள், ஆகியவைகளும்,
இருதயத் துடிப்புநோய் சிகிச்சைகளாகிய
உத்தரவாணம், காவுலியானசர்பத்து,

உ

பட்டுகைப்பற்று, இருதய உற்சாகப்பற்று
அண்டில் பருசாப்பற்று, தம்பலசாப்பற்று,
சீழ்கள் தாரைப் பிரயோகம், உறைகள்
தாரைப் பிரயோகம். உறைகள் தாரைப்
பிரயோகம், இலாகுல் கருந்து, உதிரங்கள்,
ஆயுவைகளும், இரைப்பை நோய் சிகிச்சை
காணாக்கிப் பிளி ஜுவரம், அக்கு ஜுவரம்,
இங்கி ஜுவரம், சாம்பிராணி ஜுவரம், அகர் ஜுவரம்
குந்திரக்க ஜுவரம், ஆமல ஜுவரம், பூம ஜுவரம்,
சன்னாராவட்ட ஜுவரம், கடுக்கிரக ஜுவரம்,
கடுமேனி ஜுவரம், பொறுத்தி ஜுவரம், அனிவன் ஜுவரம்,
அனிவன் பக்குவம், மண்டூர ஜுவரம்,
மகாதிரிபலாதி, அநுஷ் தாடு என்றும் செந்திறன்
இளகம், இலவண மாத்திரை, ஆவாரை இளகம்,
ஆவாரை மாத்திரை, வெண்கார மாத்திரை,
ஜீரண மாத்திரை, காய மாத்திரை, ஜீரணத்
திரி பலாதி இளகம், பொருதி மாத்திரை,
ஆமல வேதம், கடுக்காய் மாத்திரை,
இலவணதி மாத்திரை, இருவொதி மாத்திரை,

கிலவணத் தாள், பசித்தீபன உதிரமுறை,
பூமமாத்திரை, திரிகடுகுத் தூள், சதுர்
சாங்கத் தூள், பஞ்சகோலத் தூள்,
ஏரண்டத் தெண்ணெய், சதகுப்பை யெண்ணெய்,
நிலஆவாரைத் தூள், ~~[illegible]~~ கறியாதித் தூள்,
கடுகாதித் தூள், கிருஷ்ண லவணத் தூள்,
இந்துலவண திரிஜாதகம், சாரமாதித் தூள்,
மாதுளைத் தூள், ~~[illegible]~~ ஜீரணவிருத்தித் தூள்,
வெற்றிலைத் திராவகம், ஜீரண பில்ல மாத்திரை,
மாங்கிலிச் சர்பத், (நாரி சர்பத், தீபாக்கினி
~~[illegible]~~ சர்பத், இலேகத்துபற்பங்கள், நற்றீடங்கள்,
ஆகியவைகளும், வெளிச் சிகிச்சைக்கான
சோம்புக் கியாழம், கிச்சிலிக் கியாழம்,
ஏலக்கியாழம், பூசனி உதிரம், நீலாம்பர
உதிரம், மிளகாய் உதிரம், அரிக்கன் மாத்திரை,
இவளா மாத்திரை, சதாப் உதிரம் ஆகியவைகளும்,
வீக்கம் நோய் சிகிச்சைகளாகிய கடுக்கீரக
உதிரம், உழுந்துதிரம், கடலியாதிப் புகை,
தேங்காய் நார் உதிரம், மயாலிறகு உதிரம்

உ

வெள்முள்ளிக் கியாழம், கயிற்றுப் புகை,
கோணயுசிதம், சீரகாதிக் கியாழம், மாவிலைப்
புகை, பொதினா உசிதம், காமசப்பத்,
தாமரை உசிதம், காசினிப் புகை, இந்திரக
பில மாத்திரை, தேங்காயுசிதம், சீயுசிதம்,
பொன்னாங் கொட்டையுசிதம், ஆகியவைகளும்,
தாகரோகாய் சிகிச்சைகளாகிய ~~பு~~ பருப்புக்
கீரை யுசிதம், காமசப்பத், தாமரைசப்பத்
பழ சப்பத், கிசுவகோல் உசிதம், அரசம்
பட்டை யுசிதம், தாமரையுசிதம், வேப்பிலை
யுசிதம், காட்டுப் பிரயோகம், ஆமல
காதி மாத்திரை, ஆகியவைகளும், இறைப்
பையால் பால் அல்லது இரத்தம் சோர்
தலுக் ~~சின்~~ பதின் சிகிச்சைகளாகிய
திராட்சைப் பிரயோகம், பொதினாவுசிதம்,
கடுகுப் பிரயோகம், கொண்டைக்கடலை
யுசிதம், ஆகியவைகளும், அருவருத்தல்
குமட்டல் வாந்தி ஆகியவைகளின் சிகிச்
சைகளாகிய பூவத்திக் கொட்டையுசிதம்,

இச்சிலி மாத்திரை, பூங்காவிப் பிரயோகம், மண் விளக்குப் பிரயோகம், இலந்தையாதி மாத்திரை, கருநீர் உதிரம், கிம்பை உதிரம், கோண உதிரம், திருட்சாதி மாத்திரை, அரசம் பட்டை யுதிரம், அலம்விழ்ப் பிரயோகம், ஜலசிகிஜைவாராஷ், துருங்கி ஜவாராஷ், அமல சர்பத், மாதுளம்பழ சர்பத், ஜராஷ்க் சர்பத், மாங்கிற் கியாழம், கோரைக்கிழங்குத் தூள், பொதினி சர்பத், மாதுளை லேகம், ஆகியவைகளும்; இன்னும் இவை போன்ற பல முறைகளும் வகை விளக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன.

இம்முறைகளெல்லாம், அதிகச் செலவில்லாமல் குறைந்த செலவில் ஒவ்வொரு இருப்பதும் எத்தனை யருமே செய்யக்கூடியவைகள்; ஒரு பைசா செலவாகாமலும் பெரு மருந்தை பெறத்தக் கொள்ளலாம். இவற்றுள் இன்னும் சில முறைகள் ஒரு பைசா

உ

இடச் செலவில்லாமல் அவரவர்கள்
வீட்டுக்குப் பின்புறம், தோட்டம், வயல்
முதலிய இடங்களில் அகப்படும் பச்சிலை
முதலியவற்றில் செய்து கொள்ளக் கூடியவைகள்.
மேற்படி மூலிகைகள், ~~[illegible]~~ சரக்குகள்,
அதயவைகளுக்காகத் தொலைதூரங்கட்கும்
போய்த் தேட வேண்டியதில்லை. இத்தகைய
முறைகளெல்லாம் வெகு மறைவாகவைக்கப்
பட்டு வந்தவைகளாயினும் உலோகோப
காரத்தைக் கருதியே இப்போது யூநாநி
நூற்களை விடுத்து வெளிப்படுத்தப்படுகின்
றன. ஆதலால் இத்தகைய முறைக
ளடங்கிய இப்புத்தகமானது தமிழுலகத்துக்கு,
மிகவும் பயன்படக் கூடியதென்பது
இதனைப் பார்க்கும் ஒவ்வொருவர்க்கும்
நன்கு விளங்கும்; இதனைப் பலநூற்களை
விடுத்து அநுபவப்படுத்தி தொகுத்து
அச்சிடும் ~~[illegible]~~ ~~[illegible]~~ செயலில்

உ

நாம் எடுத்துக் கொண்ட முயற்சி அதிகம்.
~~அவசியமும் அவற்றை வெளியிடாமல்~~
நண்பர்கள் நல்லன்னித்து உரிமையாகவும்
குறைத்திருக்கின்றேன். அதனால் ஒவ்வொரு
வகுடு. இதனை வாங்கிப் பயன் அடைநாயற்ற
வாய்ப்பை யடைத்து எனக்கு மேன்மேலும்
இவ்வகைப் புத்தகங்களை வெளிப்படுத்தும்
ஊக்கத்தை உண்டாக்குமாறு விரும்பு
கின்றேன். ~~இதற்கிடையே~~

அ. பா. மெ. அ.

சூட்சுமம்.

சிகிச்சா போதினி.

முதற் பாகம்.

முன்னுரை

இந்த சூட்சும சிகிச்சா போதினி யென்னும் நூலானது மிகவும் அருமையான நூல். இதில் சொல்லப் பட்டிருக்கும் முறைகள் எதுவும் அருக்கமானவைகள். தலைமுதல் பாதம் ஈறாக உள்ள அவயவங்களின் நோய்களையும், அதன் மருத்துவங்களையும் சொல்வது தமிழ் இந்த நூலின் முறையாம். முறைப்படி நோய்களின் காரணம், இலக்கணம், சாத்தியாசாத்தியம் ஆகியவைகளெல்லாம் நமது "யூனானி வைத்திய பாலபோதினி" யில் சொல்லப் பட்டிருக்கின்றன. ஆயினும் இந்த நூலிலும் தலைமுதல், பாதம் ஈறாக உள்ள நோய்களின் மருத்துவங்கள், மிகவும் சுருக்கமாகவும், தெளிவாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. பெரும்பான்மையும் தமிழ் முறைகளில் அம்பர், கஸ்தூரி, ஜவந்து, கோரோசனா, நவரத்தினம், நற்பவழம் முதலியவைகளும், இவை போன்றவைகளுமான விலையுயர்ந்த சரக்குகள்

உ.

அ.

அடங்கியவைகள் இன்றும் தமிழ்ப் பெயரில்லாமல் புனைப் பெயர்களையுள்ள பல உயர்ந்த சாரக் கிரந்தம் அடங்கியவைகள். அத்தகையான ஏடுகள். கிராமவாசிகள், இதில் பலர் அப்பாதகங்களைச் செய்யக் கூடாதவர்களாயிருக்கின்றனர். இதைப் பற்றி நமக்குக் கடிதமெழுதியும், பிறவற்றிலும் நமக்குப் பலர் தெரிவித்து வருகின்றனர்கள். அத்தகையான மேற் சொன்னபடி தலைமுதல் பாதம் வரையுள்ள நோய்கட்குத் தனிச்சாரப் பிரயோகம், மேனிப் பிரயோகம், உதிரப் பிரயோகம், இலைப் பிரயோகம் இரசகியப் பிரயோகம், கைம்முறைப் பிரயோகம், உபதேசப் பிரயோகம், தன்னாதப் பிரயோகம், அற்புதப் பிரயோகம், இரவிப் பிரயோகம், சன்னியாசிப் பிரயோகம், யோகப் பிரயோகம், வீட்டுப் பிரயோகம், பரம்பரைப் பிரயோகம், முதலிய பல வகைச் ~~…~~ சிகிச்சை முறைகளடங்கிய நூல் வெளிப்படுத்த வேண்டுமென்று மேலான வைகுரா பிடித்ததும். அதற்காக வைகுநாளாய், அவ்வகை ~~முறைகளடங்கிய நூல் வெளிப்படுத்துவதற்கு~~ ~~…~~ முறைகளைச் சேர்க்க ஆராய்ச்சி செய்துப் பலவித தமிழ்ச்சித்தர்களை யாய்ந்து தொகுத்து அதன் இதை இணைத்து சேர்த்து வந்தோம். இப்போது சிவகாருண்ய சித்தியுடனும் பரோபகார சிந்தையுடனும் ஏடுகள். சிலவற்றை யாவருக்கும் பயன்படும்படி இந்நூல் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

இதில் சொல்லப்பட்ட முறைகளெல்லாம் அதிகச் செலவில்லாமல் இலகுவாய்ச் செய்யத் தக்கவைகள், இவைகளைச் செய்ய போ யென்றும் கஷ்டமில்லாமல் தம்பிடி, பைசாவென்றும் செலவு செய்யத் தக்கவைகள், அநேகமாய் அந்த தம்பிடியும் செலவில்லாமலே அவரவர்கள் வீட்டிலுள்ளவைகளும் தோட்டம் வயல், தெருவிடங்களில் சாதாரணமாய்க் கிடைக்கக் கூடியவைகள். இதில் சொல்லப் பட்டிருக்கும் சரக்குகள் மூலிகைகள் ஆகியவைகளுக்காக தொலை தூரங்களுக்கு காடு மலைகளுக்கும் போக வேண்டியதில்லை. ஒரு நோய்க்குப் பல வகைச் சூட்சும முறைகள் சொல்லப் பட்டிருப்பதால் அவற்றுள் ஏதாவதொன்று தம் வீட்டிலோ தோட்டத்திலோ அல்லது தம் ஊரிலோ கிடைக்கக் கூடியதாயிருக்கும்.

இம் முறைகளெல்லாம் வெகு மறைவாக வைக்கப்பட்டு வந்தவைகள். மிகவும் இந்த நோய்களுக்கெல்லாம் கைவல்லியமான பல நூல்கள் கூறப்பட்டிருக்கின்றன. அன்பரே காரணத்தினால் இந்த நூலானது மிகவும் அருமை யானதும் பெருமை தங்கியதென்பது இதனைக் கைக் கொண்டு இதன்படி செய்து பயன்பெறும் அன்பர் யாருக்கும் புலப்படும். சொல்லிக் காட்டாமலே யென்னைத் தெரிந்ததாய் ஏனைத்தும்

உ.

நூல்.

நோய்களைத் தெரிந்து கொள்ளப் பொது இலக்கணங்கள்.

ஒரு நோயின் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் இயல்பாகிய சூடு, குளிர்ச்சி, கொடுமை, வறட்சி, ஆகியவைகளுள் ஒன்று தனியே அதிகரித்துண்டானதா? அல்லது அவற்றுள் ஒன்றோடொன்றின் சேர்க்கையில் உண்டானதா? என்று அறிய வேண்டியது. அப்படியே இரத்தம், சிலேற்பனம், பித்தம், வண்டல் ஆகிய சத்துக்களுள், ஒன்று அதிகரித்துண்டானதா? அல்லது அவற்றின் குறைவினால் உண்டானதா? என்று அறிய வேண்டியது. அதற்காக முக்கியமாய் முகவருணம், உடல் வருணம், உடற்றன்மை, நாடி, மலம், மூத்திரம் முதலியவைகளைச் ~~[illegible]~~ சோதித்தல் வேண்டும்.

தனிச்சூடதிகாரத்த இலக்கணம்.

உடல், முகம் இவைகளின் வருணம் சிவந்திருத்தல் அல்லது மஞ்சணித்திருத்தல், உடலைப் பரிசித்தால் சூடாயிருத்தல் (இதில் காலம், நாடு, ஆகியவைகளின் தன்மையையும் நோக்க வேண்டியது). நாடி படபடத்திருத்தல், மூத்திரம் மஞ்சணித்திருத்தல்; தாகமேயாயிருத்தல் சூடான பதார்த்தங்களில் ~~[illegible]~~ கெடுதியும், குளிர்ச்சியான பதார்த்தங்களில்

சுரோணிதம் உண்டாதல்; சூடான காலங்களில் அகவ் சேருதல் முதலியவைகளாம்.

குறிப்பு

சூடானது இருவகைப் படும். ஒன்று இரத்தமிகுதியால் உண்டாவது; மற்றொன்று பித்த மிகுதியால் உண்டாவது. ஆகையால் இரத்தச் சூடு அல்லது பித்தச் சூடு என்பதை இரத்தாதிக்கத்தின் இலட்சணமும், பித்தாதிக்கத்தின் இலட்சணம் அத்தியவைகளின் முறையே ஆராய்ந்து கொள்ளல் வேண்டும்.

இரத்தமிகுதியின் இலக்கணம்

உடல், இறுக்கமாய், முகம், நா, கண்கள் சிவந்திருத்தல், புத்தி மந்தப் படுதல், அசதி, சோம்பல், நாடிகள் உப்பியாருத்தல், சருமம் தடித்திருத்தல், நாடி நிறைந்து பெருத்து நடத்தல், மூத்திரம் சிவந்து கலங்கலாயிருத்தல், அற்பப் பசி. உடல் கனத்திருத்தல் முக்கியமாய்ப் புருவங்கள், கை, பொறிகள், அவயவங்கள். கொட்டாவி வருதல், அடிக்கடி நீர் விடுதல், வாயை நீட்டுதல், தேகத்தின் கட்டுகள், இழுப்புகள், அடிக்கடி புண்டாதல், விக்கல், பல்லீறுகள், சுக்கிலம் முதலிய துவாரங்களிலிருந்து இரத்தம் வழிதல், நிறைந்த முதலிய சூடும் கொழுமை புண்ணான சக்கரங்களும் மதுமேகம் பாண்டுகளும், அதிகவியர்ப்பும்

கெட்ட ~~[crossed out]~~ பொருட்கள், கெட்ட கருத்துகள், இரத்தம் அழிந்து போதல் போன்ற தோன்றல் முதலியவைகளைக் கனவில் அதிகமாய்க் காணல் இதனியவை காரணம்.

பித்தமிகுந்த இலக்கணம்.

உடல், முக்கியமாய்க் கண், நா, மூத்திரம் இவை மஞ்சளித்திருத்தல், வாய்க்கசப்பு, நா சுரசுரப்பாயிருத்தல், வாய், மூக்கு இவைகள் இவை வறண்டிருத்தல், தாகம் அதிகமாயிருத்தல்; உறக்கப்பத்தினும் தாகமுண்டாகும். ஆனால் அது குறைந்த அளவாயிருப்பது மன்றி குளிர்ந்த நீர் குடித்தால் தணியாமல் வெந்நீரைச் சாப்பிடத் தணியும். ~~குளிர்ச்சியான~~ பித்தத்தினாலுண்டாகும் தாகமோ குளிர்ந்த நீர் சாப்பிடத் தணியும்) குளிர்ச்சியானப் பதார்த்தங்களில் அதிக இச்சை; தூக்கம், மஞ்சள் நிறம் அல்லது பச்சை நிறமான வாந்தி, மலத்தபோறல், அடிவயிற்றில் எரிவதும், எரிவத்துடன் உடம்பெரி, உளளையில் இருக்கிறது போன்ற இருக்கங்கள், கெடுப்பு மஞ்சள் வருணமானப் பொருட்கள், ஆகியவைகளைக் கனவில் அதிகமாய்க் காணல், ~~[crossed out]~~ உடலைச் சோதித்துப் பார்த்தால் சூடாயிருத்தல் ஆகியவைகளாம்.

தனிக் குளிர்ச்சி யதிகரித்த இலக்கணம்:

உடல், நீர் இவைகள் வெளுத்திருத்தல், உடல் பாரமா யிருத்தல், முக்கியமாய், தலை; மூக்கடைத்திருத்தல் கண் சுரந்திருத்தல், உடல் ஜில்லிட்டிருத்தல், மந்த மாய் நடத்தல், தாகமின்மை, பசிமந்தம், சோம்பல் கபத்தைச் சார்ந்த சுரம் அடிக்கடி க்காணல், குளிர்ச்சி யான பொருட்களால் கெடுதியும், சூடான பொருட் களால் சுகமுண்டாதல், மழைக்காலத்திலும், குளிர் காலத்திலும், சுகங் கெடுதல். ஆகியவைகளாம்.

குளிர்ச்சியானது வண்டல், அல்லது வாதத்தோடு அதிகரிப்பதையும், கபத்தோடு அதிகரிப்பதையும் உண்டாம். ஆகையால் அதுவும் இருவகைப் படும்.

தனிக் கொழுமை யதிகரித்த இலட்சணம்:

உடல், முக்கியமாய்க் கண், கா இவைகள் வெளுத்திருத்தல், கண்ணிமைகள் தாழ்ந்து மூடுவதாயிருத்தல் வாயில் நீர் அதிகமாய்ச் சுரத்தல், மூக்கில் நீர்வருதல், வயிறு பொருமுவதாயிருத்தல், பசிமந்தப் படுதல், அதி நித்திரை, மந்த மெத்தமாய் நடத்தல், கொழுமையான பதார்த்தங்களால் கெடுதியும், வரட்சியாகியவைகளால் சுகமுண்டாதல் ஆகியவைகளாம்.

கொழுமையும் இருவகைப்படும்; (1) இரத்தப் பெருக்கினாலுண்டாவது (2) கபப் பெருக்கினாலுண்டாவது.

கப மதிகரித்த இலக்கணம்

உடல் வெளுத்திருத்தல், முக்கியமாய்க் கண்கள், நாக மூத்திரம் ஆகிய இவைகள், உடலை ஸ்பரிசித்தால் மிருதுவாயிருத்தல், முக்கியமாய் முகம். புளிப்பான வாந்தி, புளிப்பான ஏப்பம், சோம்பல், அறிவு குன்றல், நாடி நிறைந்து மெதுவாயிருப்பதுமின்றி மெதுவாய் நடத்தல், தண்ணீர், ஆறுகள், குளங்கள், பனிக்கட்டிகள், ஆலங்கட்டி, மின்னல், முதலியவைகளைக் கனவில் அதிகமாய்க் காணல் ஆகியவைகளாம்.

தனிவரட்சி மதிகரித்த இலக்கணம்:

மூக்குத் துவாரங்கள் வறண்டிருத்தல், நித்திரையின்மை, வறட்சியான பதார்த்தங்களைச் சாப்பிடுவதில் கெட்டியுண்டாதல், சூடான காலங்களில் தேகம் வேறுபடுதல், கொடுமையான பதார்த்தங்களில் ஆசை தோற்றுதல், கொடுமையான எண்ணெய் இனங்களில் சாந்தப்படுதல் முதலியவைகளாம்.

வறட்சியும் இருவகைப்படும். (1) வண்டல் அல்லது வாதத்துடன் அதிகரித்துண்டாவது. (2) பித்தத்துடன் அதிகரித்துண்டாவது.

வண்டல் அல்லது வாதமதிகரித்த இலக்கணம்:

உடல் நிறம் கறுத்திருத்தல், உடல் மேல் துவாரங்கள் ஆகியவை வறண்டிருத்தல், அசதி, சோம்பல், இரத்தம் கறுத்துத் தடித்திருத்தல், மலக்கவலை, மின் எண்ணைகளையுண்டாதல். அடிவயிற்றில் வலித்தல், வாய்ப்புண், மூத்திரம் கறுத்துத் தடித்திருத்தல்,

முகத்தின் கருப்புப் புள்ளிகள் தோன்றல், சொறி, சிரங்கு, தினவு, அதிகமாய் உடலின் காணல், கெட்ட கொப்புளங்கள் உண்டாதல், மண்ணீரல் பற்றிய நோய்களுண்டாதல், அதிகப் பயங்கரமான கனவுகள், நித்திரை பிடியாமை, கருப்புப் பொருட்களை அதிகமாய்க் கனவில் காணல் முதலியவைகளாம்.

குறிப்பு

சூடு, குளிர்ச்சி, கொழுமை, வறட்சி, ஆகியவைகள் தனித் தனி அதிகரித்த இலக்கணமும், இரத்தம், பித்தம் சிலேற்பனம், வாதம், முதலிய தாதுக்களின் அதிகரித்த இலக்கணமும் சொல்லப்பட்டன. இவற்றுள் ஒன்றோடொன்று சேர்ந்து வரும் போது அவற்றின் இணங்களும் தொடர்ப் பட்டிருக்கு மாகையால் அவையனைவையும் விபரமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

மேற்கண்ட தாதுக்கள் மிகுதியாகுங்கால் ~~அளவி~~ அளவிற் கேற்றபடியே அவற்றின் இலக்கணங்களும் இருக்கும்.

இரண்டு தாதுக்கள் தொடர்பட்டிருக்கும் போது அவற்றுள் அளவிலதிகமாயிருப்பதின் இலக்கணங்களை மிகுத்திருக்கும். மிகுதியற்றின் ஒன்றோ அதன் பெயரிடப் படும். வாதபித்தத் தொந்தத்தில் பித்த அதிகரித்திருந்தால் பித்த வாத மெனவும்,

10

வாதசுத்திகாத் திருத்தால் வாதபித்தவனையுஞ் சொல்லப்படும்.

நோய்களின் காரணத்தை யறிய வேண்டிய தேடாது இறிந் கண்டிருக்கின்ற இலக்கணங்களை மாத்திரக் காலத்தைமை மதிக்காமல் வெகுப்பான்மையான பட்சணங்களில் இராக்க வேண்டும். அறிவாளர்கள் மிகவும் எளிதில் தெரியபாட்டை யுத்தித்துக் கொள்வார்கள். மற்றவர்களும் சற்று கவனித்தால் அனுபவத்தில் தெரிந்து கொள்ளக் கூடும்.

திரிதோஷ சிகிச்சை.

திரிதோஷமாகிய வாதம் பித்தம், கபம் ஆகிய முத்திறத்தங்களால் ஏற்று அதிகரித்துண்டாயிருந்தால் அதற்குத் தகுந்த மருந்துகளை உபயோகித்து அதிகரித்ததை நீக்கி அதன் மேல் ஏற்று முதலியவைகளைப் பயன்படுத்த வேண்டும்.

அவ்விதம் உபயோகப்படும் இலகியங்கள் பற்றுகள், அடைக்கிரணங்கள், சாப்பாடுகள், பாயசங்கள். அவைகளை இங்கு தெரிவோம்.

உ

மல்லித்திர பாலாதி.

மஞ்சட் கடுக்காய்த் தோல், சுரத்துக் கடுக்காய்த் தோல், பிஞ்சுக் கடுக்காய், மேற்றோல் போக்கின கொத்து மல்லிவிதை, இவை வகைக்கு 3 (10½ கிராம்) வராகனெடை. தேன் 36 வராகனெடை (126 கிராம்).

செய்முறை:- முன்சரக்குகளையெல்லாம் இடித்துத் துணியில் வடிகட்டி நெய்த்தெடுத்து நெய்ப்பசையாக்கித். தேனைக் காய்ச்சி நுரையைப் போக்கி மேற்படித் தூளைச் சிறுகச் சிறுகத் தூவி கிண்டிக்கிளறி, பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

<u>அளவு</u>:- 5 முதல் 6 வராகனெடை. காலையிலும் இரவில் படுக்கைக்குப் போகும் போதும் உட்கொள்ள வேண்டியது.

<u>தீரும் நோய்கள்</u>:- தலைநோய், கண்நோய்கள், தலைச் சுற்றல், தலைமயக்கம், ஆகியவைகள் தீரும். தலையில் அதிகரித்திருக்கின்ற கெட்ட நீரைச் சிறுக சிறுக வெளிப்படுத்தி மனதைத் தூய்மை செய்து மேற்கண்ட நோய்களைப் போக்கும்.

12

உ.

இலகுபேதித் தீபனாதி.

சூரத்துக் கடுக்காய்த் தோல், பெருங்கடுக்காய்த் தோல், நெல்லிவற்றல், தான்றிக்காய்த் தோல், பிஞ்சுக் கடுக்காய் இவை வகையொன்றுக்கு 1 வராகனெடை (3 1/2 கிராம்). ஈர்க்கு, காம்பு முதலியவற்றை நீக்கித் தூய்மை செய்த சூரத்து நிலாவாரை. சோம்பு. தோல், உள்நரம்பு, மேற்தோல் முதலியவைகளை நீக்கித் தூய்மை செய்த சீமைச் சிவதை வேர். இவை வகையொன்றுக்கு 3 வராகனெடை (10 1/2 கிராம்), மேற்றோல் நீக்கின சுக்கு 1/2 வராகனெடை, தேன் தேவையான அளவும்.

செய்முறை:- மேற்கண்ட சரக்குகளை பொடித்து துணியில் வடிகட்டி வாதுமை யெண்ணெயை அல்லது நெய்யைத் தெளித்து நெய்ப்பசை யுண்டாக்கி இதை கிளர்த்து இதன் எடைக்கு மூன்று பங்கு தேனைக் காய்ச்சி நுரை நீக்கி மேற்படித் தூளைத் தூவிக் கிண்டிக் கொண்டு நன்றாய் கலந்து கீழிறக்கி யாறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 2 1/2 முதல் 5 வராகனெடை. காலையும் படுக்கைக்குப் போகும் போதும் உட்கொள்ள வேண்டும்

தீரும் நோய்கள்:- மலத்தைப் போக்கும். மூல
யிலும் இரைப்பையிலுமுள்ள நீங்காத மலத்தின்
வழியாய் வெளிப்படுத்தும். தலைவலிகள், காதிலுள்ள
இரைச்சல்கள் பார்வை மந்தமாயிருத்தல் ஆகி
யவைகளைப் போக்கும்.

கடுக்காய் சர்பத்து.

மஞ்சட் கடுக்காய்த் தோல் 2 பலம் (70 கிராம்).
இதனை நசுக்கி இடித்து அரைப்படி நீரிற் போட்டு
மூன்று நாள் வெயிலில் வைத்து நாலாம் நாள்
நன்றாய்ப் பிசைந்து வடிகட்டித் திப்பியை நீக்கி
விட்டு அந்த நீரில் 2 1/4 பலம் புதிய மஞ்சட்
கடுக்காய்த் தோலை நசுக்கி இடித்து அதிற்போட்டு
முன்போல் மூன்று நாள் வெய்யிலில் வைத்து
நான்காம் நாள் நன்றாய்ப் பிசைந்து வடிகட்டித்
திப்பி நீக்கின அந்தக் கியாழத்தில் ~~15~~ பதினைந்து
பலம் சீனிச் சர்க்கரையைக் கலந்து பாகு
பதத்தில் இறக்கி ஆறவைத்துப் புட்டியில்
பத்திரப்படுத்தவும்.

அளவு:- 1 முதல் 1½ வரை.

உ

14.

தீரும் நோய்கள்:— தசையுள்ள பித்த நீரை மலத்தின் வழியாய்ப் போக்கும், பித்தத்தொடர்பான தசை நோய்களைக் குணப்படுத்தும்.

பனப்சகா சர்பத்து.

பனப்சகா, உலர்ந்த தாமரைப்பூ இதழ், ரோசாப்பூ இதழ், இவை வகையொன்றுக்கு 1¼ வராகனெடை, உலர்ந்த திராட்சை 2½ வராகனெடை, ஆலுபகாரா அல்லது கோது கொட்டை நீக்கின புளி பலம் 2½ சீனிச் சருக்கரை 10 பலம்.

செய்முறை:— மேற்கண்டவைகளில் இடிக்க வேண்டியவைகளை இடித்தும், நறுக்கவேண்டியவைகளை நறுக்கியும், இக்காற்படி நீர் போட்டு ஒன்றிரண்டாகப் பாகமாகச் சுண்டவைத்து இறக்கி இளஞ்சூட்டில் வடிகட்டித் திப்பியை நீக்கிக் கஷாயத்தில் மேற்படி சருக்கரையைச் சேர்த்துக் கலந்து காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கி ஆறின பின்பு புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:— 5 முதல் 7 வராகனெடை.

தீரும் நோய்கள்:— எல்லாவகைத் தசைநோய்களும் தீரும்.

பனம்பூ இலகத்து.

பனம்காய்ப் பூ 1 பலம் ~~[illegible]~~ கற்கண்டு 2 பலம் இதை
பொடித்துத் தூள் செய்து கொள்ள வேண்டும்.

செய்முறை :- கற்கண்டைப் பாகு செய்து
மேற்படி பூவைப்போட்டு நன்றாய் கலந்தெடுத்து
சாடியிற் போட்டு வாய்கட்டி 40 நாள் வெய்யிலில்
வைத்துப் பின் எடுத்து ~~[illegible]~~ உபயோகிக்க வேண்டும்.

அளவு :- 3 முதல் 5 வராகனெடை.

தீரும் நோய்கள் :- நீர் நோய்கள், இருமல்,
மார்பு நோய்கள், அத்துயவைகள் தீரும்.

துவையல்.

மருதோன்றி விதை 1 பலம் (35 கிராம்) இதை யாவ
வயல்பாக வறுத்துச் சூரணித்து இரண்டு பலம்.
தேனிற் கலந்து பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்
கொள்ளவும். இதில் காலை 1/4 பலம் எடுத்து
உணவு கொள்ளும் போது துவையலாய் உபயோகித்து
வரவும். இவ்விதம் செய்து வருவதால் நோயின் தாபம்
நீங்கி அது பலப்படும். நோய்த் ~~[illegible]~~ப்பலத்தால் உண்டான
நீர்நோய் ~~[illegible]~~ ~~[illegible]~~. மாறி, மயக்கம்

ஆகியவைகள் தீரும்.

உபாயங்கள்.

மூங்கில்வேர் 5 வராகனெடை. நீனிச்சருக்கரை 10 வராகனெடை. மேற்படி வேரை நன்றாய்ச் சிதைத்து இரண்டு ஆழாக்கு நீரிற்போட்டுக் காய்ச்சி அரையாழாக்காகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டினக் கியாழத்தில் மேற்படிச் சருக்கரையைக் கலந்து பருகச் செய்ய வேண்டும். இம்முறையைக் காலைமாலை யிரண்டு வேளையும் செய்துவர சீதள தொடர்பான தலைநோய், வெப்பத் தொடர்பான தலைநோய் ஆகியவை தீரும்.

குறிப்பு :- விருப்பமானால் சருக்கரையை யதிகப் படுத்தியும் பிரயோகிக்கலாம்.

மேற்படி சருக்கரையை சிதைத்து இரண்டாழாக்கு நீரிற் போட்டு, மேற்கொடுத்தபடி காய்ச்சிச் சுண்டவைத்திறக்கி, மேற்படி கியாழத்தைக் கலந்து வடிகட்டிப் பருகச் செய்யவும்.

~~குறிப்பு~~ : இம்முறையைக் காலை ~~[illegible]~~ யாவொரு வேளை, அல்லது ~~[illegible]~~ காலமாலை யிரண்டு வேளையும் உபயோகித்து வரவேண்டியது. இதனால் அதிகரித்திருக்

உ

மேற்படி (வேறு)

சோம்பு 2 வராகனெடை, சோம்புவேர் 4 வராகனெடை, உல் துக்குத் தாள் 3 வராகனெடை, தேன் 2 வராகனெடை.

செய்முறை:- மேற்படிச் சரக்குகளை நன்றாய்ச் சிதைத்து அரைப்படி நீரில் போட்டு காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கி வடிகட்டி தேனைச் சேர்த்துச் சாப்பிட வேண்டும். இவ்விதம் காலை மாலை யாறு வேளையும் செய்து வரவும்.

தீரும் நோய்கள்:- கபத்தோடப்பான சுரநோய், இளைச்சியோடுண்டான தாகநோய், ஆகியவைகள் தீரும்.

குறிப்பு:- மேற்கண்ட தேனுக்குப் பதிலாக பனைப் ~~வூக~~ சர்பத்தைச் சேர்த்துப் பயோகித்தால் இன்னும் சிறந்த குணத்தைத் தரும்.

மேற்படி (வேறு)

மஞ்சட் கடுக்காய்த் தோல், மேற்றோல் நீக்கிய சுக்கு, கொத்து மல்லி விதை

೬.

உ

நெல்லிவற்றல், தான்றிக்காய்த் தோல், வாயு
விளங்கம், இவை வகைக்கு 1/2 வராகனெடை.

செய்முறை:- இவற்றை இடித்து
அரைப்படி நீரில் போட்டுக் காய்ச்சி நான்கில்
ஒரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடி
கட்டித் திப்பிலிக்கல்ப் பருக வேண்டும்.
இவ்விதங் காலை மாலை இரண்டுவேளையும்
பருகிவரப் பலவிதத் தநோய்கள் தீரும்.

பற்றுக்கள்

சேற்றெல் சிவிய சுக்கு, வெண்சந்தனம்
அடப்பைக்கு வேர்த்தோல் இவை வகைக்கு
1 வராகனெடை. இதைப் 4 அவுன்சு நீர்
செல்லத் தக்க அளவு.

செய்முறை:- மேற்படிச் சரக்குகளை
அம்மியில் வைத்து மேற்படி நீரைச்
சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போல
அரைத்து ஒரு காகிதியிலிட்டு மருந்தை வரையல்
நெற்றியில் பற்றிட வேண்டும். இவ்விதம் செய்

தடவைகள் செய்யவும், பலவகைத் தலை
நோய்கள்; ஒருபக்கத் தலைநோய், ஆகியவைகள் தீரும்.

மேற்படி வேறு

இசபகோல் விதையை யூறவைத்து எடுத்து
கொண்டை செல்லத்துக்க அளவு, நாமக்கட்டி
அல்லது வெண் பூங்காவி ½ வராகனெடை.
இதனை மேற்படி கொண்டையாற் குழைத்து முன்போல்
நெற்றியாற் பற்றிட்டுவர வெப்பத் தொடர்பான
தலைநோய், பித்தத் தொடர்பான தலைநோய், இரத்த
ஓட்டம் அதிகரித்துள்ள —ாகும் தலைநோய் ஆகியவைகள்
தீரும்

page. 14.

மேற்படி வேறு

அக்கராங் கீரைச்சாறு, சீமைச் சுண்
ணம்பு, இரண்டையும் கலந்து முன்போல்
தலையாற் பற்றிட வெப்பத் தொடர்பான
தலைநோய் தீரும்.

உ

மேற்படி வேறு

துத்தி இலை அல்லது விதை, கொத்தமல்லி விதை, பூங்காவி, இவைகளைச் சமனை யாக எடுத்துக் கொண்டு நீரை வார்த்து மை போலரைத்து மேற் கண்ட படி பற்றிட்டு வர வெப்பத் தொடர்பான திமிருநோய், பித்தத் தொடர்பான திமிருநோய் ஆகியவைகள் தீரும்.

மேற்படி வேறு.

மருதோன்றிப் பூ, தேவையான அளவு இதனைத் தண்ணீர்விட்டு வெண்ணெய் போலரைத்துப் பற்றிட்டு வர வெப்பத் தொடர்பான திமிர்நோய் தீரும்.

மேற்படி வேறு

காவுறா விதையை நீர்விட்டு மைபோல் அரைத்து மேற் கண்டபடி பற்றிட்டு வர வெப்பத் தொடர்பான திமிருநோய் தீரும்.

page 61 Begin

இன்ற நார்க்கீற்கள் பக்குவப் படும்போதும் பட்ச வாதம், கை வாதம் ஆகியவை கண்டிப்பவர்கட்கு மாதத்தில் ஒருவாரம், அல்லது பத்து நாள் இதனை உபயோகித்து வந்தால் மேற்கண்ட நோய் நாளுக்கு நாள் சாந்தப் பட்டுவரும். இதனை உபயோகித்த பின் கீழ்க்காணும் மாத்திரை தொடர்ந்து வைக்கவும் கொடுக்கலாம்.

அபாரி ஜைபத்திராவென்னும் மேகக் கிருபா மாத்திரை.

சுகட்டரன் போளம் அல்லது காயபோளம் 6 வராகனெடை (24 கிராம்). மஞ்சட்கடுக்காய்த் தோல் 5 வராகனெடை, தூய்மைசெய்த இவதைவேர் 4 வராகனெடை, காக்கரட்டான் விதை 2 வராகனெடை, உலர்த்தின அதித்துப் பாக்காய்ச் சதை 1 வராகனெடை, இந்துப்பு 5 வராகனெடை.

செய்முறை:- மேற்படிச் சரக்குகளை பொடிக்க வேண்டியவைகளைத் தனித் தனிப் பொடித்து மேற்கண்ட எடைப்படி நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு எல்லாவற்றையும் கல்வத்தில் விட்டு ஒருமணி நேரமரைத்துக் இளநீர் நீரை யல்லது கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து

இரண்டு காலை நேரமொன்றுக்கு இரண்டு குன்றிமணி எடை மாத்திரைகளைச் செய்து [illegible] பட்டையின் [illegible] பருகவும்.

அளவு:— மாத்திரை 1 — 2 — இவை வெந்நீருடன் சாப்பிட வேண்டும்.

தீரும் நோய்கள்:— பட்சவாதம், முகவாதம், வாதநோய்கள் அத்தனையும் தீரும். நோயாளியின் கெட்ட நீர்களை நீக்குவதற்கு இது அதிகம் உ~~ப~~ உபயோகப்படும்.

குறிப்பு.

இதனை இரவில் படுக்கைக்குப் போகும்போது உட்கொண்டால் மிகவும் நன்மை பயக்கும்.

மேற்படி வேறு.

சுகட்டுள் போளம், அல்லது கரியபோளம் எடை 16 வராகனெடை (56 கிராம்), நிலக்கடம்பு சமூலத்தில் வெதுவெதுக்கப்பட்டவை, ~~[illegible]~~ ஆமணக்கு இலைகட்டுண்டை, உலர்த்தியவை சோம்பு, கோரைப்பு, இவற்றின் இணைத்தூளை பொடித்துத் துணியில் வடிகட்டி எடுத்தால் இணை

பொன்னுக்கு 1 வராகனெடை (3½ கிராம்).

<u>செய்முறை:-</u>

இவை யெல்லாவற்றையும் ஒன்றுக்கலந்து கல்வத்திலிட்டுத் தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்து, இரண்டு சாம நேரமரைத்து, இரண்டு குன்றிமணியளவு உருண்டை மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திப் பட்டுப் பையில் பத்திரப் படுத்தவும்.

<u>அளவு:-</u> மாத்திரை 1-2-3 வெற்றிலையுடன் உட்கொள்ளவும்.

<u>தீரும் நோய்கள்:-</u> பேதிக்குக் கொடுத்துத் தீர்ந்த பிறகு இந்த மாத்திரையை உபயோகித்து வரவும். பட்சவாதம், முகவாதம், இன்னும் பலவகை வாதநோய்கள் தீரும்.

நாடி மாத்திரை.

அக்கிராகாரம், சுக்கு, அரிசித்திப்பிலி, இவற்றைத் தனித்தனி யெடுத்துத் தூள் வகை பொன்னுக்கு 1½ வராகனெடை. மேற்றோல் நீக்கின சுக்குத்தூள், தூய்மைசெய்த கடுக்காய்த்தூளிவை வகை 1க்கு 3 வராகனெடை, பனிவெல்லம் 1/2 வராகனெடை, பசுவின்நெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி சரக்குகளையெல்லாம் நன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு அரைமணிநேர மரைத்தப் பிறகு வெல்லத்தைச் சேர்த்து, ஒரு சாமநேர மரைத்துப் பிறகு நெய்யைக் கொஞ்சம் சேர்த்து ஒரு மணிநேர மரைத்து, ஒரு குன்றி யெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரவும்.

அளவு:- மாத்திரை — 1 - 2 - 3 - நெய்யில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

தீரும் ரோகங்கள்:- அசுரப் பத்தின் பேதிக்குக் கொடுத்துக் கெட்டுப் போகின்ற சிக்கத் தூய்மை செய்து, மேற்படி மாத்திரைகளை உபயோகித்து வந்தால் பட்சவாதம், கைவாதம், நரம்புத் தளர்ச்சி ஆகியவை தீரும்.

கெந்தி மாத்திரை.

தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம், உள்ளது பருப்புக் கொட்டைகள், தூய்மை செய்த லிங்கம், தூய்மை செய்த நாபகம், தூய்மை செய்தக் கருநாபி, இவற்றின் ஒத்த எடை தான் வகையொன்றுக்கு 2½ வராகனெடை.

எலுமிச்சம் பழச்சாறு செந்தூரத்திற்க்க அளவு.

செய்முறை:— முன்னர் கந்தகத்தையும், ரசத்தையும் சேர்த்து நன்றாய்க் கருத்த பின்பு மற்றச் சரக்குகளையுஞ் சேர்த்து ஒருமணிநேர முறைத்து நல்லாச் செம்மையாகக் கலந்த பின்பு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து, இரண்டு சாமநேர முறைத்து ஒரு குன்றி மணியளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:— மாத்திரை 1-2-3 நெய்யுட னுட்கொள்ளவும்.

தீரும் நோய்கள்:— 13 தேகங்கள், கபசம்பந்த மான எல்லா நோய்கள், இடுப்புவலி, புட்டத்துவலி, பட்சவாதம், கைவாதம் ஆகியவைகள் தீரும்.

இந்து மாத்திரை.

வாலுளுவை அரிசி, உலர்ந்த ஓரிலைத்தாமரை அரைத்துப் பின், இவற்றின் தனித்தனித் தூள்களை சேர்த்துக்கு 1/4 வராகனெடை, திப்பிலிக்

உ

கிழங்குத்தூள் 15 வராகனெடை, மேற்சொன்ன சீவின
சுக்குத்தூள் 16 வராகனெடை, தூய்மை செய்த
நேர்வாளப் பருப்பு 4 வராகனெடை.

செய்முறை:- நேர்வாளத்தைக் கல்வத்திலிட்டுப்
பொடித்துத் தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்து
வெண்ணெய் போல அரைத்துப் பின்பு மற்ற தூட்
களையும் ஒன்றாகக் கலந்து அதிற் தூவி,
தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு
சாமம் அரைத்து அரைக் குன்றி மணி
யெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து
நிழலிலுலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:- மாத்திரை, 2-3, நெய்யுடன் உட்
கொள்ளவேண்டும்.

தீரும்நோய்கள்:- மேகவாதம், முதலிய வாத
நோய்கள் தீரும்.

சுக்குமாத்திரை

மேற்சொன்ன சீவின சுக்குத்தூள், வசம்புத்தூள்,
இவைவகை யொன்றுக்கு 1 பலம், தேன்
செல்லத் தக்க அளவு.

மேற்படி யிரண்டு சரக்கையும் ஒன்றாகக் கலந்து கால் மணி நேரம் அரைத்துப் பிறகு தேனைச் சிறுகச் சிறுக வார்த்து, மெழுகு பதமாக அரைத்து ஒரு வராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

அளவு:- வேளையொன்றுக்கு 1 மாத்திரை வீதம் காலை மாலை யிரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

இதை யுபயோகித்து வரும்போது, மேற் கூறப்பட்டிருக்கும் இதன் சர்பத்தை யுபயோகித்து வரவேண்டியது.

குறிப்பு

மேற் சொல்லப் பட்டிருக்கும் வசம்பிற்குப் பதிலாக. வசம்பைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கிச் சேர்த்துக் கொள்வது உத்தமம்.

புஷ்டி மாத்திரை:

பதினைந்து எட்டிக் கொட்டைகளைத் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். மூன்று நாளைக் கொருமுறை அந்தத் தண்ணீரை யிறுத்து விட்டு மறுபடியும் புதிய தண்ணீரை ஊற்றி ஊற வைக்க வேண்டும். இவ்விதம் மும்மூன்று

24

உ

நாளைக்கு ஒரு தடவை தண்ணீரை மாற்றிப் புதிய தண்ணீர் விட வேண்டும். இம்முறையே பத்து முறைகள் செய்து மேற்படி நீக்கி முட்டு ~~[illegible]~~த வெய்யிலிலுலர்த்திச் சட்டியில் வறுத்து வறுகையில் புகையடங்கின நேரத்தில் எடுத்துப் பொடித்துத் துணியில் வடி கட்டி, இதற்குச் சமனெடை மிளகுத் தூளைச் சேர்த்துத் தண்ணீர் வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து ~~[illegible]~~ பயிறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- மாத்திரை 1 - காலையில் மட்டும் ஒருவேளை யுட்கொள்ளவேண்டும்.

தீரும் நோய்கள்:- பட்சவாதம், முகவாதம், நரம்புதொடர்பான நோய்கள், இடுப்புவலி, ஆகியவைகள் தீரும். இளர்ச்சி தொடர்பான நோய்களும் தீர்ந்து போகும்.

மேற்படிவேறு.

(அ) மேற்கண்டபடி தூய்மைசெய்த எட்டிக்கொட்டைத்தூள், இஞ்சி விதைத்தூள், உலர்த்தின தும்பைப் பூண்டுத் தூள், இவை வகையொன்றுக்கு 8 வராகனெடை, பசுவின்பால் 6 பலம், தண்ணீர் 3 பலம்.

(ஆ) சுட்டெரித்த வசம்புச் சாம்பல், அரிசித் திப்பிலித் தூள், மேற்றோல் சீவின சுக்குத்தூள், சோம்புத்தூள், இவை வகையொன்றுக்கு 1½ வராகனெடை.

(இ) பிரமத்தண்டுச் சாறு அல்லது அதன் கஷாயம் வேண்டத் தக்க அளவு.

செய்முறை:- பாலையும் தண்ணீரையும் கலந்து, (அ) விலுள்ள தூட்களை பதிதாய்ப் போட்டுக் காய்ச்சி, பால் சுண்டுபதத்தில் எடுத்துக் கல்வத்திலிட்டு, அரைமணி நேரம் அரைத்து (ஆ) விலுள்ள சூரணங்களையும் நன்கு கலந்து அதிற் சேர்த்து (இ) யிலுள்ள சாற்றை அல்லது கஷாயத்தை சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து மிளகு அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:- மாத்திரை 1-2, காலைமாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

தீரும் நோய்கள்:- பட்சவாதம், பக்கவாதம், கபந்தொடர்பான நோய்கள், நரம்புத் தளர்ச்சி, ஆகியவை தீரும்.

வசம்பு மாஜூன்.

வசம்புத் தூள் 1 பலம், மேற்றோல் சீவின சுக்குத் தூள் கருஞ்சீரகத் தூள், இவை வகைக்கு 1 வராகனெடை, தேன் 1 1/4 பலம்.

செய்முறை:- மேற்படி தூட்களையெல்லாம் நன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். தேனைக் காய்ச்சி நுரையை நீக்கி மேற்படித் தூட்களைச் சிறுகத் தூவி நன்றாகக் கிளறிக் [illegible] ஆறவைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1/4 — 2 1/2 வராகனெடை.

துணைமருந்து: இதை உபயோகித்து வரும்போது மேல் சொல்லப்பட்டிருக்கும் தேன் சர்பத்தை உபயோகித்து வரவேண்டும்.

தீரும் நோய்கள்:- பட்சவாதம், முகவாதம், நரம்புத் தளர்ச்சி ஆகியவைகள் தீரும்.

குறிப்பு.

~~இ~~ வசம்பைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கி மேற்கண்ட முறையை எடுத்துக் கொள்வது உத்தமம். சுட்டெரிக்காமல் அரைத்துக் கொண்டால் சில உடலினர்க்கு வாந்தியாகும்.

மேற்படி (வேறு)

வசம்புத்தூள் 10 வராகனெடை, மஞ்சத்தூள், பொரித்தூள், கருஞ்சீரகத்தூள், காட்டுக்கருஞ்சீரகத் தூள், இவை வகையொன்றுக்கு இரண்டரை வராகனெடை (10½ கிராம்). தேன் 6 பலம் (210 கிராம்).

செய்முறை:- எல்லாத் தூட்களையும் ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். பின்பு தேனைக் காய்ச்சி நுரை நீக்கி, அதில் மேற்படித் தூட் கலவையைச் சிறுகச் சிறுகத் தூவி, நன்றாகக் கிண்டிக் கீழிறக்கி ஆறவிட்டு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1½ முதல் 2½ வராகனெடை.

துணைமருந்து:- இதைப் பயன்படுத்தும்போது முன் உரையுள்ளபடி தேன் சர்பத்தைப் பயன்படுத்தி வர வேண்டியது.

தீரும் நோய்கள்:- மேகவாதம், பட்சவாதம், கபம் தொடர்பான எல்லா நோய்களும் தீரும்.

பூண்டு மாஜூன்.

ஒரிழைப் பூண்டு 3 பலம் (105 கிராம்) இதனைத் தோலுரித்து நறுக்கிக் கொள்ள வேண்டும். பசுவின் பால் 9 பலம் (315 கிராம்), இலைச் சாதிப் பத்திரித் தூள், மேற்றோல் நீக்கின சுக்குத் தூள், மிளகுத் தூள், அரிசித் திப்பிலித் தூள், சுத்தக் கடுக்காய்த் தோல் தூள், அக்கிரா காரத் தூள், இலவங்கத் தூள், வெள்ளலவங்கப் பட்டைத் தூள், சன்னராஷ்டகத் தூள், இவை வகையொன்றுக்கு 5 வராகனெடை, தேன் 25 பலம்.

செய்முறை:- பூண்டைப் பாலில் சேர்த்து வேகவைத்து நன்றாகக் குழைந்த பதத்தில் இறக்கி மெல்லிய துணியால் வடிகட்டி, பின் தேனையுங் காய்ச்சி நுரை நீக்கி அதனுடன் சேர்த்துப் பாகு செய்து பாகுப் பதத்தில் சூரணங்களைத் தூவிக் கிளறி இறுகும் அளவில் கிண்டி இறக்கி ஆறவிட்டுப் பின்பு கண்ணாடிப் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 5 முதல் 10 வராகனெடை.

தீரும் நோய்கள்:- பட்சவாதம், முகவாதம், நரம்புத் தளர்ச்சி ஆகியவை தீரும்.

குறிப்பு

பூண்டைப் பாலில் வேகவைத்துக் குழைந்த பதத்தில் மத்தினாற் கடைந்து வடிகட்டாமலே தேனைக் காய்ச்சிச் சேர்த்து மேற்கண்ட படி செய்து கொள்ள வேண்டும். வடிகட்ட வேண்டுமென்றால் அவசியமாயிருந்தால் திப்பியில் காய்ச்சின பாலை விட்டுக் கடைந்து வடிகட்டிக் கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கிமடக்கி இரண்டு மூன்று முறைகள் செய்து திப்பியில்லாமல் வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

இஸ்கந்தியா மாஜூன்.

கார்போகரிசித் தூள், மேற்றோல் நீவின சுக்குத் தூள், இலவங்கப் பத்திரித் தூள், சடாமாஞ்சிற் தூள், கோரைக் கிழங்குத் தூள், மிளகுத் தூள், அக்கிரகாரத் தூள், காட்டுச்சீரகத் தூள், கோஷ்டத் தூள், சேராங் கொட்டைக் கிழித்தைலம், இவை வகையொன்றுக்கு உ வராகனெடை, தூய்மைசெய்த கடுக்காய்த் தூள், அரசம் பட்டைச் சாம்பல், இவை வகையொன்றுக்கு 1 வராகனெடை, தேன் 7 பலம்.

செய்முறை:- மேற்கண்டவைகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து கொண்டு தேனைக் காய்ச்சி

நுரை நீக்கி மேற்படிக் கலவையைச் சிறுகத் தூவி
ஒன்றாகக் கிளறிக் கிண்டிக் கீழிறக்கி ஆறியவுடன்
பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :- 1/2 முதல் 2 1/2 வராகனெடை.

தீரும் நோய்கள் :- உணர்ச்சித் தொடர்பானப்
பட்சவாதம், உணர்ச்சித் தொடர்பான கைவாதம்,
உணர்ச்சித் தொடர்பான நரம்புத் தளர்ச்சி முதலிய
உணர்ச்சித் தொடர்பான எல்லா நோய்களும் தீரும்.

நவசாதி சர்பத்

மேற்றோல் சீவின சுக்கு, ஜடாமாஞ்சில்,
சிற்றரத்தை, இவை வகைக்கு 3 வராகனெடை,
மிளகு, அரிசித்திப்பிலி, இவை வகைக்கு 1½
வராகனெடை, தேன் ~~[illegible]~~ 1௨ பலம், தண்ணீர் ௨ படி.

செய்முறை :- மேற்படிச் சரக்குகளையெல்லாம்
நையச் சிதைத்து ஒரு சிறு பையில் போட்டுத் தூர
முடித்து மேற்படி தேனையும் தண்ணீரையும் கலந்து
அதில் போட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து
வர வேண்டும். மேற்படி பையை அழுத்தி அசை
வையாமல் நசுக்கிக் கொண்டே வரவேண்டியது.

ஒருபடி நீர் அண்டின தருணத்தில் மேற்படிப் பையை எடுத்துப் பிழிந்துக் கொள்ள வேண்டும். அந்தப் பையில் திப்பியைத் தவிரக் கொஞ்சமும் பசையில்லாமலிருக்க வேண்டும். பிறகு அதைக் காய்ச்சி தைல பதத்தில் இறக்கி பாகினை பின்பு மூட்டையால் பத்திரப் படுத்தவும்.

அளவு:— 5 வராகனெடை.

தீரும் நோய்கள்:— பட்சவாதம், முகவாதம், அசுசிய நோயுள்ள ஸ்திரீகளின் துர நோயுள்ள அசுத்த மாதுகளை நீக்கி பைதத்துப்பை செய்ய இந்த சாப்பாடு மிகவும் நன்மையானதுமாம்.

—x—

வசம்புக் கட்டி!

சுட்டெரித்த வசம்புச் சாம்பல், அக்கராகாரத் தூள், மருதம் பட்டைத் தூள், சுண்ணாம்புத் தூள், மிளகுத் தூள், அரசந் திப்பிலித் தூள், மேற் சொல்லின சுக்குத் தூள், கிச்சிலிக் கிழங்குத் தூள், கண்டந்திப்பிலித் தூள், இவை வகை 1க்கு 1 வராகனெடை. தேன் தேவைக்கு அளவு.

செய்முறை:— மேற்படித் தூள்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து தேவைக்குத் தேனை விட்டு

32

குழம்பு பதமாகக் இறக்கி வைத்துக் கொள்ளவும். அவசியமானபோது மூன்று அல்லது ஐந்து வராகனெடை உடலியல்பிற்கேற்றபடி உணவுடன் பயன் படுத்தவும். மற்ற நேரங்களிலும் பயன் படுத்தலாம்.

தீரும் நோய்கள் :- பட்சவாதம், முகவாதம், மூளையைக் கடந்தொடர்பான நோய்களுக்கும் பயன் படுத்தலாம்.

~~வாயு சங்காரத்~~

வாயு சங்கார சூரணம்.

அஜமோதா ஓமத் தூள், வாய்விளங்கத் தூள், வாலுளுவைத் தூள், தேவதாருத் தூள், கொடிவேலி வேர்ப் பட்டைத் தூள், கண்டத்திப்பிலித் தூள், சோம்புத் தூள், அரிசித் திப்பிலித் தூள், மிளகுத் தூள், இவை வகைக்கு 2½ பலம், மஞ்சட் கடுக்காய்த் தோல் தூள் 12½ பலம். மேற்கூறியவை மாசிக்காய்த் தூள் 5 பலம்.

செய்முறை :- மேற்கண்ட எல்லாச் சரக்குகளையும் ஒன்றாகக் கலந்து கல்வத்தில் அல்லது உரலில் வைத்து ஒன்றாகக் கலக்கும்படி நன்றாக அரைத்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும். —

அளவு :- அரைப் வராகனெடை.

துணைமருந்து :- சூரணத்தின் சமனெடைச் சீனிச்சக்கரையைச் சேர்த்து உட்கொள்ள வேண்டும். தேன், நெய், தெளிவுகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

~~தீரும் நோய்கள்: பட்சவாதம், வாயுத் தொடர்பான நோய்~~

தீரும் நோய்கள் :- பட்சவாதம், வாயு ~~[illegible]~~ தொடர்பான நோய்கள் தீரும்.

அலரித் தைலம்:

உலர்ந்த வெள்ளலரி வேர்த்தோல், வெண் குன்றிமணிப் பருப்பு, உலர்ந்த கருஊமத்த இலை அல்லது ஊதா ஊமத்த இலை, இவை வகையொன்றுக்கு பலம் 3 வீதம் வெண்ணெய் 6 பலம்.

செய்முறை :- மேற்கண்டவைகளை புதுத் துணியில் வடிகட்டி அம்மியில் வைத்து நீர்வார்த்து வெண்ணெய் போலரைத்துக் காலணா அகலமுள்ள சிறு வில்லைகளாகச் செய்து மேற்படி எண்ணெயிற் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துச் வில்லையெல்லாம் கருகின பின்பு கீழிறக்கி ஆறினபின் கல்வத்திலிட்டு

34

வில்லைகளை வெண்ணெய் போலரைத்து ஓர் எண்ணெயாற் கலக்கிப் புட்டியில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த மருந்துகள் கீழ் தருவதைப் பெறாகும். மேலாக எண்ணெய் இருத்து நோயுள்ள அவயவங்களில் தேய்த்து வருவதினால் தளர்ந்து போன அவயவங்கள், தளர்ந்து போன நரம்புகள், ஆகியவைகள் இறுகிப்போய்ப் பட்டு பட்சவாதம், முகவாதம், ஆகியவைகளும், குணமாம். முக்கிய உறுப்புகளின் நரம்புகள் தளர்ந்துண்டான நாது ~~இழ~~ இழப்பு, ஆண்மைச் சக்திக் குறைவு ஆகியவைகள் தீர்ந்து போக சக்தி யுண்டாகும்.

திருகோஷ்டத் தைலம்.

கோஷ்டத் சூரணம், காட்டுச் சீரகச் சூரணம் அல்லது கருஞ்சீரகச் சூரணம் வகைக்குப் பலம் 1. நல்லெண்ணெய் 6 பலம்.

செய்முறை:- மேற்கண்ட இரண்டு சூரணங்களையும் அம்மியில் வைத்து நீர் வார்த்து அரைத்து மேற்கூறியபடி சித்தப் படுத்திக் கொள்ளவும்.

தீரும் நோய்கள்:- மேற்படி தைலத்தை ~~உட~~ உடலின் நோயுள்ள இடத்தில் பூசி வரப்பட்ட

உ

முகவாதம் நரம்புத்தளர்ச்சி முதலியவைகள் தீரும்.

பச்சிலைத்தைலம்

ஆமணக்கிலைச் சாறு, ஊமத்தையிலைச்சாறு, எருக்கிலைச்சாறு, சகதேவியென்னும் சீதாசெங் கழுநீர்ச் சாறு, முருக்கிலைச்சாறு, அமுக்கிரா இலைச்சாறு, வெண்ணொச்சியிலைச்சாறு, இவை வகை ஒன்றுக்குப் படி 1/8, நல்லெண்ணெய் படி 7/8.

செய்முறை:- இவை யெல்லா வற்றையும் எண்ணெயுடன் ஒன்றாகக் கலந்தெரித்து அரைவாசிச் சாறு அண்டின பதத்தில் அக்கிரகாரம், கோஷ்டம், இவை வகையொன்றுக்கு 1 பலம். இவ்விரண்டையும் மேற்படி எண்ணெயில் தூவி மெழுகு பதத்தில் இறக்கி வடி கட்டிப் பின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

தீரும் நோய்கள்:- இந்த உடலின் நோயுள்ள இடத்திற் பூசி வருவதினால் தளர்ந்திருக்கின்ற நரம்புகள் பலப்பட்டு முகவாதம், பட்சவாதம் முதலியவைகள் தீரும்.

உ

மகா கோஷ்டத் தைலம்.

கோஷ்டத்தூள் 2 வராகனெடை, ஜடாமாஞ்சித்தூள், உத்ருத்தூள், இலவங்கப் பத்திரித்தூள், அக்கிராகாரத்தூள், மேற்றோல் சீவின சுக்குத்தூள், இவை வகைக்கு 1 வராகனெடை நல்லெண்ணெய் 6 பலம்.

செய்முறை:- மேற்படி தூள்களை யெல்லாம் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்துத் தண்ணீர் வார்த்து அரைத்துக் குழம்பாகச் செய்து மேற்படி யெண்ணெயில் விட்டு நீர் சுண்டின பதத்தில் இறக்கி வடிகட்டிப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

உபயோகம்:- இந்தத் தைலத்தை மேற்பூசி வருவதினால் இது பட்டை நரம்புகளைப் பலப் படுத்தி நரம்புத் தளர்ச்சியை நீக்கி அதைப் பலப் படுத்தும், வாயுக்களைக் கண்டிக்கும்; பட்சவாதத்தைக் கண்டிக்கும்.

சாமந்தித் தைலம்.

உலர்ந்த சாமந்திப்பூ 30 பலம், நல்லெண்ணெய் 40 பலம்.

செய்முறை:- மேற்படிப் பூவை இரண்டு பாகமாகச் செய்து ஒருபாகத்தில் இரண்டு படி

நீரை விட்டுக் காய்ச்சி ஒருபடி சுண்டினவுடன் இறக்கி இளஞ்சூடாயிருக்கும் போது நன்றாகப் பிசைந்து பிழிந்து திப்பியை நீக்கிவிட வேண்டும். பிறகு அந்தக் கஷாயத்தில் மேற்படி மறுபங்குப் பூவைப் போட்டுக் காய்ச்சி ஒருபடி சுண்டினவுடன் இறக்கி இளஞ்சூட்டுடன் முன்போல் பிசைந்துத் திப்பியை நீக்கிவிட வேண்டும். அந்தக்குடிநீரில் மீதிப் பங்குப் பூவைப் போட்டுக் காய்ச்சி ஒருபடி தண்ணீர் சுண்டினவுடன் இறக்கி வடிகட்டித் திப்பி நீக்கி இக்கஷாயத்துடன் எண்ணெயைக் கலந்து அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டிப் புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

தீரும் நோய்கள்: இதனை மேல் பூசி வருவதினால் இளைச்சித் தொடர்பான பட்சவாதம் கைவாதம், ஈரல் புத்தளைச்சி ஆகியவைகள் தீரும். இது வாதவாய்க் இளைச்சித் தொடர்பான எல்லா நோய்களுக்கும் பயன்படும்.

குறிப்பு

உலராதப் பூவாயிருந்தால் மேற்கண்ட அளவையால் இரண்டு பங்கு சேர்த்துக் கொள்ளவும்.

சதாப் தைலம்

பச்சை சதாப்பிலை 2½ பலம், நல்லெண்ணெய் 10 பலம், உலர்ந்த சதாப்பிலை 2½ பலம்.

செய்முறை:- மேற்படிப் பச்சை சதாப் பிலையை மேற்படி எண்ணெயிற் போட்டுக் காய்ச்சி இலையெல்லாம் கருகின பதத்தில் இறக்கி வடிகட்டித் தனியே வைத்துக் கொள்ளவும். உலர்ந்த சதாப் பிலையை அரைப்படி நீரிற்போட்டு ஒரு அழாக்காகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டித் திப்பி நீக்கின கியாழத்துடன் முன் சித்தப் படுத்திய எண்ணெயைச் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டிப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

தீரும் நோய்கள்:- இதை மேற் பூசி வருவதினால் தளர்ந்து போன பெரு நரம்புகள், வெண் நரம்புகள் ஆகியவைகள் பலப்பட்டு உறுதியாகும்.

சீமைச் சாமந்திப் பூத் தைலம்.

சீமைச் சாமந்திப் பூவிதழ் 8 பலம், வெந்தயம் 4 பலம், நல்லெண்ணெய் 24 பலம்.

செய்முறை:- மேற்படி இரண்டு சரக்கையும் நைய இடித்து மேற்படி எண்ணெயிற் கலந்து ஒரு புட்டியில் விட்டுக் கல்கார்க்கிட்டு நாற்பது நாள்வரை வெயிலில் வைத்துப் பிறகு நோயுள்ள பாகங்களில் மேல்பூசி வரவேண்டும். இதனால் சீதளத் தொடர் பான நோய்கள் தோல் தொடர்பான நோய்களாகியவை தீரும்.

திருசதுரப் தைலம்:

பச்சை சதுரப்பில 5 பலம், நல்லெண்ணெய் உ0 பலம்,

செய்முறை:- மேற்படி சதுரப்பிலயை நைய இடித்து மேற்படி எண்ணெயுடன் கலந்து ஒரு புட்டியில் விட்டுக் கல்காரக் கிட்டு நாற்பது நாள் வெயிலில் வைத்துப் பிறகு நோயுள்ள இடத்தில் பூசவர சீதளத் தொடர்பான நோய், கபத் தொடர் பான நோய்கள் ஆகியவை தீரும்.

மணத் தைலம்:-

சிவப்புக் குன்றிமணிப் பருப்பு 4 வராகனெடை, கொஞ்சுத்தூள், 10 வராகனெடை, ஒதியம்பட்டைத் தூள், ஊமத்தம் விதைத் தூள், இவை வகைக்கு 10 வராகனெடை, நல்லெண்ணெய் 7 பலம்.

செய்முறை:- மேற்படிப் பருப்பை யிடித்துத் தூள்செய்து அம்மியால் வைத்தரைத்து மற்ற தூள்களையும் அதற்குக் கலந்து அதனுடன் சேர்த்துத் தண்ணீரைச் சிறுகச் சிறுகவார்த்து வெண்ணெய் போலரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து மேற்படி எண்ணெயிற் போட்டு வில்லைகள் கருகல் போகின்ற வரையில் காய்ச்சிக் கீழிறக்கி ஆறின பின்பு மேற்படி வில்லைகளைக் கல்வத் திலிட்டு வெண்ணெய் போலரைத்து மேற்படி எண்ணெயிற் கலக்கி பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும். அவசியமான போது வியாதியுள்ள இடத்தில் இந்த எண்ணெயை மேற்பூச்சாகப் பூசிவரப்பட்டுவரதால், கைகால் நடுக்கல் ஆகியவை தீரும்.

இலவணாதித் தைலம்.

கறியுப்பு, கருஞ்சீரகம், ஓமம், ~~[illegible]~~ அக்கரா [illegible] விதை, இவை வகை யொன்றுக்கு 1 பலம், நல்லெண்ணெய் 5 பலம்.

செய்முறை:- மேற்படிச் சரக்குகளை நையச் சிதைத்து ஒருபடி நீரிற் போட்டு நான்கிலொருபாகமாகச் சுண்டவைத்துக் காய்ச்சி வடிகட்டித் திப்பி நீக்கின

கியாயத்துடன் மேற்படி எண்ணெயைக் கலந்து காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி இளஞ்சூட்டில் வடிகட்டித் திப்பி நீக்கிப் புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

தீரும் நோய்கள் :- இதனை நோயுள்ள இடத்தில் பூசிவருவதனால் வாயுத்தொடர்பான நோய்கள், கபசம்பந்தமான நோய்கள் ஆகியவைகள் தீரும்.

போகித் தைலம்.

கார்போகரிசி 12 பலம், ஓமம் 1¼ பலம், ஊமத்தனிலைச்சாறு 2½ பலம், நல்லெண்ணெய் 2½ பலம்.

செய்முறை :- மேற்படி இரண்டு சரக்குகளையும் அம்மியில் வைத்துத் தண்ணீர் வார்த்து வெண்ணெய் போலரைத்துச் சிறுசில்லைகளாகச் செய்து இரும்புச்சட்டியில் மேற்படி எண்ணெயை விட்டு மேற்படி ஊமத்தை யிலைச்சாற்றை அதில் கலந்து மேற்படி சில்லைகளை அதில் போட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி சில்லைகள் தங்கக் கருகின பதத்தில் இறக்கி வடிகட்டித் திப்பி நீக்கிப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

இதனை நோயுள்ள இடத்தில் பூசிவருவதனால் பட்சவாதம், நரம்புத்தளர்ச்சி ஆகியவைகள் தீரும்.

உ.

வாயு தொல்லைத் தைலம்:

வாயுதொல்லையகற்றி, சீக்கிவெட்டுத்தாய் மலைவேம்புச் சோம்புக் கொட்டை, தேங்காய்த் தண்ணீர் பட்டைப்பூடு இவை வகையொன்றுக்கு பலம் 5 - (175 கிராம்).

செய்முறை:- ஒரு இரும்புத் தொண்டியின் அடியில் சில துவாரங்கள் செய்து ~~அ…~~ அத்துவாரங்களை ஓட்டாஞ் சில்லால் மூடவேண்டும். அதனடியில் பீங்கான் கோப்பையை வையுங்கள். தைலம் அதில் விழும்படியாக வைத்து வாய்க்குச் சீலைமண் செய்து ஒரு குழி தோண்டி அதனடியில் வேறொரு சிறுகுழி தோண்டி அதில் பீங்கான் கோப்பையை முழுவதும் புதையும்படியாக வைத்துக், கோப்பையின் வாய் மறையும்படியாக அதனைச் சுற்றிலும் மண்ணைத் தள்ளி இடித்துப் பதப்படுத்தியிருக்கின்ற மேற்படி சரக்குகளையும் தொண்டிக்குள் போட்டுத் தொண்டி வாய்க்குச் சில்லிட்டு ஆறு சீலைமண் செய்து தொண்டியைச் சுற்றிலும் வரட்டியை அடுக்கி நெருப்பிட்டு ஆறினபின் எடுக்கப் பீங்கான் பாத்திரத்தில் தைலம் இறங்கியிருக்கும். இதனை வடித்து ஒரு புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1 நெல் 4 குன்றிமணி வரை.

துணைமருந்து:- வெற்றிலை, தேன் சுக்குக் கஷாயம்,
ஆடாதோடைக் கஷாயம்.

தீரும் நோய்கள்:- இந்தக் கன்மம் இரண்டு
வேளையும் உட்கொண்டால் இரத்தக் கொதிப்பான
நோயைப் பற்றிய நோய்கள் தீரும்.

குங்கிலியத் தைலம்.

தேற்றான் பழச்சாறு 2½ பலம். மேற்சொல்
நிலவிசுக்கு, கடுக்காய்விதைப் பருப்பு, புங்கம்
விதைப் பருப்பு, நீர்வாளம் சுத்தி, கொட்டைக்
கோட்டம், இவை வகைக்கு 2½ பலம், கருஞ்சீரகம்
உசிலத்தைவிதை, ஏலத்தின் விதை, அதிமதுரம்,
மாதுளம்பட்டை, மருதோன்றி விதை, கண்டத்திப்பிலி,
மகிழம்பட்டை, கோரைக்கிழங்கு. அக்கிராகாரம்
மூலம், இவை வகைக்கு 1 பலம், சிறுதேக்கு,
வாய்விடங்கம் இவை வகைக்கு 1 பலம்,
நல்லெண்ணெய் 48 பலம், தேங்காய் எண்ணெய் 3 பலம்,
இலுப்பை எண்ணெய் 3 பலம்.

செய்முறை:- மேற்படி சரக்குகளை எல்லாம்
நன்கு இடித்து நீர்விட்டு காய்ச்சி எடுக்கப்படும்
நீரைப் பேடாக்கி பருகினால் உஷ்ணத்தை நீக்கும்

அடுப்பேற்றிக் காய்ச்சி நான்கிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டித் திப்பிலிக்கிழங் கஷாயத்துடன் முற்றேனுவகை பங்கைய் கையும் சேர்த்து அடுப்பேற்றி இறுதியாக பாகுக் கடுகுதிறன் பதத்தில் இறக்கி இதை சூட்டுடன் கிண்ணியில் வடிகட்டி ஆறியபின் பத்திரப்படுத்தவும்.

தீரும் நோய்கள்:- நோயுள்ள இடத்தில் இதனைப் பூசி வருவதினால் ரத்தக்கொதிப்பு, வாயுத்தொடர்பான நோய்கள், நீர்த்தொடர்பான நோய்கள் அனைத்தும் தீரும்.

இருவங்க சூரணம்

தூய்மை செய்த வெள்வங்கம், தூய்மை செய்த நாகம், தூய்மை செய்த இரசம், தூய்மை கருநாபித்தூள் இவை வகை வெண்ணெய்க்கு 2½ வராகனெடை, மனோசிலைத் தூள் 1¼ வராகனெடை.-

செய்முறை:- நாகத்தையும், வங்கத்தையும் உருக்கி இரசத்துடன் சேர்த்துக் கல்வத்திலிட்டு போட்டரைக்கத் தூளாகும். அதனுடன் மற்றத் தூள்களையும் சேர்த்துக் கல்வத்தில் இருகத்தாவி

ஆறுசாம நேரமரைக்க வேண்டும். பிறகு எல்லாம் நன்கு கலக்கும்படி மூன்று சாம நேரமரைத்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1 அரிசியெடை.

துணைமருந்து:- வெற்றிலை, தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- பட்சவாதம், கைவாதம், நரம்புத் தளர்ச்சி ஆகிய நோய்கள் குணமாகும்.

பட்சவாத உதிரம்

சேராங்கொட்டை ½ பலம் 4/10 வராகனெடை, சீனிச் சர்க்கரை 10 பலம்.

செய்முறை:- மேற்படி பருப்பைக் கல்வத்தி லிட்டு வெண்ணெய் போலரைத்துப் பிறகு சர்க்கரையையும் சேர்த்து ஒரு மணிநேர மரைத்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1/4 - 1/2 - 1 வராகனெடை.

உ

துணைமருந்து :- தேன், நெய், சர்க்கரையாகும்.

தீரும் நோய்கள் :- பட்சவாதம், கைவாதம், மூர்ச்சை நோய் சர்க்கரைவியாதி தீரும்.

மேற்படி வேறு :

வசம்புத்தூள் 10 வராகனெடை, மிளகுத்தூள், பொரித்ததூள், கருஞ்சீரகத்தூள், காட்டுச்சீரகத்தூள், இவை வகைக்கு 3 வராகனெடை, தேன் 6 பலம்,

செய்முறை :- இவையெல்லாவற்றையும் ஒன்றாக்க் கலந்து தேன் விட்டுப் பிசைந்து பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :- 1/2 முதல் 2 1/2 வராகனெடை.

தீரும் நோய்கள் :- பட்சவாதம், கைவாதம் போன்ற எல்லா நோய்களுக்கும் தீரும்.

மேற்படி வேறு

இந்திரகோபப் பூச்சி, , ஆமை ஓடு, சங்கு முதலிய வைகளை நீக்கிவிட்டு ஒருவெற்றிலையில் வைத்து மடித்துத் தாம்பூலத்துடன் சேர்த்து மென்று

தின்ன வேண்டும். இவ்விதம் தினம் இரண்டு அல்லது மூன்று முறைகள் செய்துவரின் பட்சவாதம், கைவாதம், நரம்புத்தளர்ச்சி, முதலியவைகள் நீங்கும். நரம்புத் தளர்ச்சியால் ஏற்பட்ட வாது இழுப்பு நீங்கும்.

பட்சவாத நசியம்:

காட்டுச் சீரகம், மருதோன்றி விதை, இவை வகைக்கு 1/2 வராகனெடை, இவ் விரண்டையும் கல்வத்தில் பொடித்து அதற்குத் தும்பைக் காம்போடு தேன் சாற்றையும், இலைப் புளிச் சாற்றையும், சமனாகச் சேர்த்துச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து மெல்லிய துணியில் வைத்து நோயாளியின் மூக்குத் துவாரங்களில் மும்மூன்று துளி விடவும். இவ்விதம் தினம் இரண்டு மூன்று முறைகள் செய்து வர மூளையிலுள்ள அசுத்த நீர்களை நீக்கி வாதம் மூர்ச்சை நோய் ஆகியவைகளையும் போக்கும்.

பட்சவாத அக்கிராணம்:

நேர்வாளம் விதை சுக்குத்தூள், வால்மிளகுத்தூள், இவை வகைக்கு 1/2 வராகனெடை.

இவ் விரண்டையும் கல்வத்திலிட்டு ஒரு மணி நேர மரைத்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும். அவசிய மான போது கொஞ்சமெடுத்து ஒரு நாசித் துவாரத்தை

மறுநாசித் துவாரத்தில் ஆக்கிராணஞ் செய்ய வேண்டியது. இவ்விதமே மறுநாசித் துவாரத்தையும் அடைத்துக் கொண்டு முன் அடைத்திருந்த நாசித் துவாரத்திலும் ஆக்கிராணஞ் செய்ய வேண்டியது. இவ்விதம் தினம் இரண்டு அல்லது மூன்று முறைகள் செய்துவரப் பட்சவாதம், முகவாதம் ஆகியவைகள் தீரும்.

குறிப்பு

தாளுனை ஆக்கிராணிக்கச் சக்தி அல்லது உணர்வு இல்லாவிட்டால் இரப்பர் குழாயில் அல்லது வேறு தகுந்த குழாயில் வைத்து நாசித் துவாரத்தில் தர வேண்டும்.

பட்சவாத அவி

தோலுரித்த பூண்டிதழ், மேற்படி இலைகளுக்கு இவை வகைக்கு 1/2 பலம், வெள்ளைப் பிசின் அல்லது வேப்பிசின், வெண்ணெய்ச்செயிர் இவை வகைக்கு 1 பலம்.

இவை எல்லாவற்றையும் இடித்து நான்கு படி நீரிற் போட்டுக் காய்ச்சி அரைப்படியாகச் சுண்டினதை சமயத்தில் எடுத்துக் கொள்ளவும்.

பின் நோயாளியைக் கட்டிலின் மேல்.
படுக்கவைத்து ஆவிபோகாமல் கடாவச் சுற்
றிலும் கம்பிளியால் அல்லது சுத்த துப்
பட்டியால் மூடி வென்னீர்ப் பாத்திரக் கலயத்தை
கட்டிலின் கீழ்வைத்து நோயாளியையும்
நன்றாக மூடி உடலின் மீது ஆவிபடும்படி செய்ய
வேண்டியது. ஆவி நிறைந்து விட்டால் செங்
கல்லை அடுப்பில் போட்டுச் சூடாக்கி அதிற்
போட ஆவியுண்டாகும். அதற்காகவென்ன
மேலே சொன்ன நெருப்பில் போட்டுத் தீப்
பற்றி வைத்துக் கொள்ள வேண்டும். அல்லது
மாற்றி இக் கலயத்தையே இரண்டு பாத்திரத்தில்
போட்டு கட்டிலின் கீழ் இரண்டு பக்கத்திலும்
வைக்கலாம். இவையெல்லாம்
மருத்துவர்கள் காலத்திற்கேற்றபடி செய்
வார்களாக.

தீரும் நோய்கள்:- பட்சவாதம், மேகவாதம்
முதலியவைகள் தீரும்.

உட்புகைத்த நோய்சிகிச்சை.

இது பலவகைப் படும். இதன் விபரமெல்லாம்
மேற்கூறிய பாலபோதினி" யாற் சொல்லப்

பட்டிருக்கின்றன; ஆயினும், இங்கு பொதுவான சில விதிகளையும், முக்கியமான சில மருத்துவ முறைகளையும் எழுதுவாம்.

இந்த நோயாளரை எந்த விதத்திலும் மகிழ்ச்சியாயிருக்க முயற்சிசெய்ய வேண்டும். நோயாளர்கள் சுகமாயிருக்கும் இடங்களில் வாசம் செய்யும்படிச் செய்ய வேண்டும்; போஷணையான உணவுகளைச் சாப்பிடச்செய்ய வேண்டும். அதிக நேரம் தூங்கும்படிச் செய்வது மிகவும் முக்கியமான சிகிச்சையாம். அடிக்கடி பேதிக்குக் கொடுத்து கெட்ட நீர்களை வெளிப் படுத்த வேண்டும். இவர்கள் இருதயத்தைப் பலப்படுத்தத் தகுந்த உணவுகளையும் மருந்துகளையும் பயன்படுத்த வேண்டும். உன்மத்த நோயாளிக்கு எந்தச் செயலில் அதிக நாட்டமோ அந்தச் செயலை அதிக நேரஞ் செய்யும்படி விட்டுவைப்பது மிக்க நன்மையைத் தரும். ஆனால், சங்கோசம், தனித்திருத்தல், பயமிருத்தல் ஆகியவை கூடா. இன்னும் இந்த நோயாளிக்குப் பெண்ணிச்சை யாருக்கால் அவரைப் பெண்ணுறவிற்கு அனுமதி கொடுக்கலாம்.

அப்பிரிமேன் கொட்டைப்பானம்.

அப்பிரிமேன் 8 வராகனெடை, துராவிக், கொவு ஜூபான்; இவை வகைக்கு $4\frac{1}{2}$ வராகனெடை, வெள்ளைச் சருக்கரை 5 பலம், திறமான இலைக்கோவு பலம்.

செய்முறை:- மேற்கண்ட சரக்குகளை இடித்து இரண்டு ஆழாக்கு நீர் விட்டுக் காய்ச்சி ஒன்றி ஒருபாகமாகக் கண்டவுடன் இறக்கி வடிகட்டித் தெளிந்த கஷாயத்துடன் மேற்படி சருக்கரையையும் கோவையும் சேர்த்துக் காய்ச்சி பாகுபதத்தில் இறக்கி ஆறினவுடன் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

வெள்ளாட்டுப்பால் படி ½, இதிலேக் காய்ச்சி அரைவாசி ஆனவுடன் ஒருவேளைக்கு மேற்படி கொட்டைப் பானத்தை விட்டுப் புரைக்குத்திக் காலையில் மேற்றுளவை யல்லது மூன்று வராகனெடை வீதம் நாள்தோறும் ஒன்று அல்லது இரண்டு முறை புட்கொண்டுவந்தால் இருமல் சொத்துப் பற்றி அவ்வு கப உற்பத்தி யாகாமல் தடுக்கும். பக்கதோவு இணைப்படும்.

விதை நீக்கின திராட்சைப் பழம் 2½ வராகனெடை, மாதுளத்தோல், திருகுக்கள்ளித் தோல், கோரைக் கிழங்குத்தோல், கடுக்காய்ப் பிஞ்சுத் தோல், இவை

இவைகளொன்றுக்கு 1½ வராகனெடை, தூய்மையான தேன், பலம்.

செய்முறை:- மேற்படிச் சரக்குகளை யெல்லாம் இடித்துக் கலந்து திராட்சைப் பழத்துடன் சேர்த்து அம்மியில் அரைக்கவேண்டும். அரைக்கும் போது தேனைச் சிறுகச் சிறுக வார்த்துத் திரள் பதத்தில் 1/4 வராகனெடை 1/2 வராகனெடை உள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

தீரும் நோய்கள்:- இந்த மாத்திரைகளை முன்றை முலைப்பாலில் உரைத்துப் ~~பாலை~~ பருகச் செய்ய வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் செய்து வந்தால் இருமல், சுவாசம், தொண்டையிற் கண்டுள்ள கெடுதிகள், கபக்கட்டு, தொண்டைக்கட்டு, ஆகிய இவைகள் தீரும். இதனைச் சிறு பிள்ளைகளுக்கும் உபயோகிக்கலாம். அதில் குறைந்த அளவாக உபயோகிக்க வேண்டும்.

வேறு

கடுக்காய்ப் பிஞ்சுத் தூள், அரிசித்திப்பிலித் தூள், அதிமதுரத் தூள், கருவேலம்பிசின் தூள் இவை

வகையொன்றுக்கு ½ வராகனெடை, தேன் 10 வராகனெடை.

செய்முறை: மேற்படி சரக்குகளையெல்லாம் நன்றாய்க் கல்வத்து தேனைவார்த்துக் குழைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

தீரும் நோய்கள்:- இதில் 1 முதல் ½ வராகனெடை வரையில் உட்கொண்டுவர, இருமல் நோய் தீரும். சிறு குழந்தைகட்கு ¼ வராகனெடை நாவில் தடவிச் சாப்பிடச் செய்ய வேண்டும். தினம் 2 - 3 வேளைகள் பயன்படுத்தலாம். இப்படிச் செய்து வந்தால் இவர்கட்கு வரத்தியோரணம் பாலசுரமும் தீரும்.

வேறு.

கருவேலம் பிசின் சூரணம் 4½ வராகனெடை, வாதுமைப் பிசின் சூரணம், கோதுமைச் சத்துச் சூரணம், இவை வகைக்கு 3 வராகனெடை, மேற்கொள் தீவியமுத்த அதிமதுரச் சூரணம் 1½ வராகனெடை, சீனிச் சருக்கரை 1½ பலம்.

செய்முறை:- மேற்படிச் சரக்குகளையெல்லாம் நன்றாய்க் கலந்து கொள்க. சர்க்கரையைப் பாகு செய்து பாகுபதத்தில் மேற்படிச் சரக்குகளைக் கொட்டிக் கிளறி எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில்

பத்தியப் பதார்த்தவும்.

அளவு:- 1/2 – 3/4 வராகனெடை. காலைமாலை யாருவேளையும் உபயோகிக்கலாம். இந்த மாத்திரை யாகச் செய்து வாயில் அடக்கிக் கொண்டு இதன் ரசத்தை விழுங்கியும் வரலாம்.

தீரும் நோய்கள்:- எல்லா இருமல்களும் தீரும். பெரியவர்கள், சிறியவர்கள் எல்லோருக்கும் உபயோகிக்கலாம்.

குறிப்பு

உஷ்ணம் அதிகப் பட்டிருப்பவர்கட்கு மேற்படி தேனுடன் 3 வராகனெடை, திருப்புக் கொமட்டி விதைப் பருப்பை அல்லது மாம்பழ விதைப் பருப்பைச் சேர்த்துபயோகிக்கவும்.

(வேறு)

கற்கடகச் சிங்கித் தூள், இந்தத் தேனில் குழைத்துச் சிறு பிள்ளைகட்குக் கொடுத்து வரக், கபத்தோடு டாப்பாவுண்டான எல்லாவகை இருமலும் தீரும். இந்தத் தொடர்ந்து நெறியாய் உபயோகித்து வந்தால் உடல் வளமும் உடல் வன்மை தெளிவைவைகளுண்டாகும். இதன் அளவு 5-வயதிற்குட் பட்டவர்கட்குக் குன்றி மணியெடை 3 – 4. மற்றவர்கட்கு வயதிற்கு

உ.

தகுந்தபடி அளவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

வேறு

விதை நீக்கின திராட்சைப் பழம் 1 பங்கு. கற்கடக சிங்கித் தூள் 1 பங்கு அரிசித் திப்பிலித் தூள் 1 பங்கு. இம்மூன்றையும் சேர்த்தரைத்துத் தேனை விட்டுக் குழைத்து வைத்துக் கொண்டு வேளையொன்றுக்கு 1 வராகனெடை வீதம் சாப்பிட்டு வர, எல்லாவகை இருமல்களும் தீரும். இது பெரும்பாலும் சிறுவர்களுக்கேற்ற மருந்து..

வேறு

கோரைக் கிழங்குத் தூள், அதிமதுரத் தூள், இவை வகைக்கு 1 பங்கு, தேன் 2 பங்கு, இவை யெல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு சுமார் 4 அல்லது 5 குன்றிமணியெடை யெடுத்துத் தாய்ப்பாலில் கலந்து பருகச் செய்விக்கவும். இப்படிச் செய்து வந்தால் எல்லா இருமல் நோய்களும் தீரும். இதுவும் சிறுவர்கட்கேற்ற மருந்து..

வேறு.

அதிமதுரம், விதை நீக்கின திராட்சைப் பழம், இவை வகைக்கு 4 வராகனெடை, கசகசாத் தோல் 1/2 வராகனெடை,

சீமை நெல்லிப் பழம் 5 வராகனெடை. அடவிவிதை 2 வராகனெடை, அத்திப் பழம் 6 வராகனெடை, சோம்பு, தூதுவளை வேர்பட்டை, இவை வகையொன்றுக்கு 1 வராகனெடை.

இவை யெல்லாவற்றையும் இடித்து அரைப்படி நீரிற் போட்டுக் காய்ச்சி நான்கொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

இந்தக் கஷாயத்தில் 5 பலம் வெள்ளைச் சருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கி எடுத்து வைத்துக் கொள்ளவும்.

வாதுமைப் பருப்பு, கோதுமைச் சத்து இவை வகைக்கு 4 வராகனெடை, கற்கடகசிங்கித் தூள் 2 வராகனெடை, அதிமதுரப் பால், வாதுமைப் பிசின் இவை வகைக்கு 1 வராகனெடை, அரிசித் திப்பிலித் தூள் 1/2 வராகனெடை களய பொடித் தூள் 1/4 வராகனெடை.

இவற்றுள் தூள் செய்ய வேண்டியவைகளைத் தூள் செய்தும், பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்தும் மேற்படி சர்பத்திற் சேர்த்துக் கலக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு:- 1 முதல் 2 1/2 வராகனெடை.

தீரும் நோய்கள்:- எல்லா இருமல்களுந் தீரும். சிறுவர்களுக்கும் உபயோகிக்கலாம்.

வேறு:

காவஜ்பான் 1¼ வராகனெடை, சோம்பு 1 வராகனெடை, அதிமதுரம் 4 வராகனெடை, கசகசாத்தோல், கருவேலம் பிசின், நீமை நறுவிலிப்பழம் துத்திவிதை, இவை வகைக்கு 1 வராகனெடை. விதை நீக்கின திராட்சைப் பழம் 4½ வராகனெடை.

செய்முறை:- இவை யெல்லாவற்றையும் அரைப்படி நீரிற் போட்டு நாலில் ஒரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டித் திப்பிலிக்கி அதில் அரைப்பலம் சர்க்கரையைப் போட்டுப் பாகு செய்ய வேண்டும். இவ்விதம் காலைமாலை இருவேளையும் பானஞ் செய்து வர, எல்லாவகை இருமல்களும் தீரும்.

இரத்தக் கக்கல் நோய் மருத்துவம்.

இரத்தம் கக்கல் நோய்க்கு இரத்தநோய் ~~[illegible]~~ நப்பரத்தம் என்று பெயர். காறலில் இரத்தம் வந்தால் மார்பிற்குச் சுருண்டாகி வருகிறதென நிதானிக்க வேண்டும். காறலில்லாமல் இரத்தம் வந்தால் மூளையிலிருந்து இரத்தம் வருகிறதென நிதானிக்க வேண்டும். இருமி இரத்தம் வந்தால் நுரையீரல் போலிய உள்ளுறுப்புகளிலிருந்து வருகிறதெனத் தெளிய வேண்டும்.

உ.

மருத்துவம்.

மேற்சுருக்கை நீக்கின நீர்த்திற் கொடி 5 வராக
னெடை, அத்திப்பட்டை 5 வராகனெடை, இரண்டையும் நையச்
இடித்துக் காலாழாக்கு நீரிற்போட்டு மூன்றிலொருபாகமாகச்
சுண்டவைத்திறக்கி வடிகட்டி அதில் ஒருவராகனெடைக்
கருவேலம் பிசின் தூளைப் போட்டுக் கலக்கிப் பானஞ் செய்ய
வேண்டும். இவ்விதம் நாள்தோறும் இரண்டு அல்லது
மூன்றுவேளை பானஞ் செய்துவரின் எல்லாவகை இரத்தம்
கக்கல் நோய்களுந் தீரும்.

வேறு

மொந்தன் வாழைப்பூவை இடித்துப் பிழிந்து
வடிகட்டினச் சாறு 1/4 ஆழாக்கு, துணியைச் சுட்டெடுக்கக் கரி
யாக்கின தூள் 1/4 வராகனெடை, இரண்டையுங் கலந்து
பானஞ் செய்ய வேண்டும். இவ்விதம் காலைமாலை
இரண்டுவேளையுஞ் செய்துவர, இரத்தம் கக்கல் நோய் தீரும்.

வேறு.

செம்பருத்தம் பூ இதழ் 4 வராகனெடை, இதை
அரை ஆழாக்கு நீரில் 4 மணி நேரம் ஊறவைத்துக்
கசக்கிப் பிழிந்து வடிகட்டிப் பருகச் செய்ய
வேண்டும். ~~[illegible]~~ இம்முறையே காலைமாலை
இரண்டுவேளைப் பானஞ் செய்துவர மேற்கண்ட நோய்கள் தீரும்.

வேறு

கருவேலம் பிசின் தூள், பூங்காவித் தூள், வாது-
மைப் பிசின் தூள், இவை வகையொன்றுக்கு 1/2 வராகனெடை.
இம் மூன்றையும் கலந்து கொள்ளவும்.

அரைப்பலம் கசகசாவை அம்மியில் வைத்து நீரிட்டு
அரைத்து நீரிற் கலக்கிப் பிழிந்த பால் 1 பலம்.
இஞ்சியின் மேற்றோலைச் சீவியிடித்துப் பிழிந்து தெளிவு
நீக்கின சாறு 1 வராகனெடை. இவ்விரண்டையும் கலந்து
மேற்படி சூரணத்தைப் போட்டுக் கலக்கிப் பானஞ்
செய்ய வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையுஞ்
செய்துவர மேற்கண்ட நோய்கள் தீரும்.

வேறு.

பூங்காவி, வெள்ளைக் குங்கிலியத் தூள்,
பூமாதுளம் பூத்தூள், கருவேலம் பிசின் தூள்,
இவை வகையொன்றுக்கு 1/2 வராகனெடை, நெல்லிக்காய்ச்சாறு,
1 பலம். இவையெல்லாவற்றையும் கலந்து பருகச்
செய்ய வேண்டும். இவ்விதம் காலை மாலை இருவேளையுஞ்
செய்து வர மேற்கண்ட நோய்கள் தீரும்.

குறிப்பு.

நெல்லிக்காய் அகப்படாத காலங்களில்

உ.

நெல்லி வேரினை ஊறவைத்துப் பிழிந்து வடிகட்டின
உள்நாக் கஷாயத்தில் உபயோகிக்கலாம்.

வேறு.

கருவேலங் கொழுந்து, மாதுளங் கொழுந்து
இவை வகையொன்றுக்கு 1 வராகனெடை, கொத்துமல்லி
விதை ½ வராகனெடை, இவை யெல்லாவற்றையும்
ஒரு ஆழாக்கு நீரில் ஊறவைத்துக் காலையில்
அரைத்து அந்த நீரில் கலக்கிக் கொஞ்சம்
கற்கண்டு அல்லது நெய் சர்க்கரையைச் சேர்த்துப்
பருகச் செய்ய வேண்டும். இவ்விதம் மூன்று நாள்
காலையில் ~~பருகச் செய்து~~ பருகிவர, இரத்தக்
கக்கல் நோய் இரத்த வாந்தி முதலிய நோய்கள்
தீரும்.

வேறு.

தாமரைக் கிழங்கு 4 வராகனெடை, இதனை
அரைத்து தேனிற் குழைத்துச் சாப்பிட வேண்டும். இவ்
விதம் காலைமாலை இருவேளையுஞ் செய்துவர
இரத்தக் கக்கல் நோய் தீரும்.

~~வேறு.~~

~~பருப்புக் கீரையை பிழிந்து பிழிந்து~~
~~சாறு 5 வரா~~

வேறு

பருப்புக் கீரைவிதை ௨ வராகனெடை, இதை யரைத்துப் பிழிந்த இரசத்தைப் பானஞ் செய்து வர இரத்தக் கக்கல் நோய் தீரும்.

வேறு

பருப்புக் கீரையை இடித்துப் பிழிந்தசாறு 5 வராகனெடை, இதனுடன் ஒரு வராகனெடைத் தேனைக் கலந்து பானஞ் செய்து வரவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டு வேளையும் பானஞ் செய்து வர மேற்படி நோய் தீரும்.

வேறு

கோபிமண் 1 வராகனெடை, இதைப் பொடித்துக் கொத்துமல்லிக் கீரைச்சாறு ½ பலம், இரண்டையும் கலந்து பானஞ் செய்ய வேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டு வேளையுஞ் செய்து வர மேற்படி நோய் தீரும்.

வேறு

இருதுத்தி விதைத் தூள் ½ வராகனெடை, மாசிக்காய்த் தூள் ½ வராகனெடை, இரண்டையுங் கலந்து கொஞ்சம் நீரிற் கரைத்துப் பானஞ் செய்ய

வேண்டும். இவ்விதம் காலமாலை இரண்டுவேளையும் பானஞ் செய்து வர வெள்ளை நோய் தீரும்.

கறுடுபா பஸ்ப மாத்திரை.

திருமண கறுடுபா உவராகனை, பருப்புக் கீரை விதை, துணியைச் சுட்ட சாம்பல், உருத் திராக்ஷத் துணியின் வடிகட்டிய கஷாயத்து [illegible] தான், மாதுளைப் பிஞ்சு தான், இவை வகை யொன் றுக்கு 1 வராகனெடை.

செய்முறை :- ஆரம்பத்தில் கறுடுபாவைக் கல்வத்திலிட்டு மெழுகாய் அரைத்து துணியைத் தானாகத் துணியின் வடிகட்டி அதில் நின்ற திப்பியை மறுபடியுங் கல்வத்திலிட்டு துணியாக அடைத்து கொண்டுவையுந் சேர்த்துப் பன்னீரைக் கிருகச் கிருக வார்த்து நான்கு சாம மரைத்துப் பிறகு மற்றச் சரக்குகளையுஞ் சேர்த்துப் பன் னீரைக் கிருகக் கிருக வார்த்து நான்கு சாம மரைத்து ஒரு வராகனெடையளவு பஸ்ப மாத் திரைகளாகச் செய்து நிழலி லுலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு:- 1 நெல்லு மாத்திரை.

துணைமருந்து:- இஞ்சிப்பால், கொத்துமல்லிக் கீரைச் சாறு, பருப்புக் கீரை விதையை யரைத்துப் பிழிந்த சாறு ஆகியவை களிலொன்றில் சேர்த்துப் பிரயோகிக்கவும்.

தீரும் நோய்கள்:- இரத்தம் கக்கல்நோய், சூதகப் பெருக்கு, மூல இரத்தம் விழுதல் முதலிய நோய்கள் தீரும்.

மருந்துணவு:- சூடான காய்கறிகளையும், உடலிற்கு ஒவ்வாத காய்கறிகளையும் நீக்க வேண்டியது.

பூமாதுளை பிஞ்சு மாத்திரை:

பூமாதுளம்பூ 4 வராகனெடை, அக்கரக்கீரை விதை, கொத்துமல்லி விதை, இவைகளின் தனித்தனி தான் வகையொன்றுக்கு 2 வராகனெடை, மாதுளம் பிஞ்சு தோல், கருவேலம் பிஞ்சு தோல், முருங்கைப் பிஞ்சு, + மாசிக்காய்ச் சத்து, இவை வகையொன்றுக்கு 1 வராகனெடை.

செய்முறை:- மேலவற்றையுங் கல்வத்தி

உ

விட்டுப், பன்னீரைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து ½ வராகனெடையுள்ள பின்பு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1 - 2 - மாத்திரை.

துணைமருந்து:-- மேற்சொல்லப்பட்டவைகளேயாம்.

தீரும்நோய்கள்:- மேற்கண்ட நோய்கள் தீரும்.

குறிப்பு

மேற்கண்ட பாகத்தில் அவசியமானால் நான்கு குன்றிமணியளவு அபினையுஞ் சேர்த்து பிரயோகிக்கலாம்.

உறப்புல்சதல் சாப்பத்து.

உறப்புல் சதல் 2 பலம், சந்தனத்தூள், நெல்லிவற்றல் சுமாதுளம்பூ வகையொன்றுக்கு 2 வராகனெடை, சீனாச் சர்க்கரை 6 பலம், பொரித்த கருவேலம் பிசின் 1 வராகனெடை.

செய்முறை:- முன்கண்ட நான்கு சரக்குகளையும்

மூன்று நாளைக்கு நீரிற் போட்டு, பன்னிரண்டு மணி நேரம் ஊறவைத்து அடுப்பேற்றிக் காய்ச்சி மூன்றிலொரு பாக மாகச் சுண்டின பின் இறக்கி வடிகட்டினக் கஷாயத்தில் சர்க்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தி லிறக்கிக் குறை ஆறின பின்பு கருவேலம் பிசின் தூளைக் கலந்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

<u>அளவு</u> :- 1/2 — 1 பலம்.

<u>தீரும் நோய்கள்</u> :- மார்பு துடித்தல், வெகுநியமாதல், பெரிய இரைக்க ளோடு உள்ள இரத்தக் குழாய்களின் நோய், இரத்த வாந்தி நோய் ஆகியவைகள் தீரும்.

இருதயத் துடிப்பு நோய்.

இந்த நோயானது இருவகைப் படும். ஒன்று இருதயத்திற்கே நோய் நேருவது. மற்றொன்று இரைப்பை நுரையீரல், இரு குடல்கள், கருப்பை, பெரிய அவயவங் களிலொன்றில் நோய் நேரிட்டு. அது தொடர்போக இருதயத்திற்கு நோய் நேரிட்டால் முன்னர் அந்தந்த இடத்திலுள்ள நோயை நீக்கினால் இருதயத்திற் குண்டாகிய நோயும் தானேப் போய் விடும். இவை இடத்தி ற்க்கு தொடர் பில்லாமல்

இருதயத்திற்கு மட்டும் நோய் கண்டிருந்தால் உடனடித் தாமதமின்றி செய்து இருதயத்தை வலிமைப் படுத்தும் மருந்துகளை பயன்படுத்த வேண்டும். சாதாரணமான மார்பு வலித்தல் நோய்களில் உடலியல்பை முறைப் படுத்தின் நோய் தானே தணிந்து போகும்.

சந்தன பாகம்:

சந்தனத்தூள் ½ பலம், இதனை அரைப்படிப் பன்னீர் அல்லது நீர் ஆறவு ஊறவைத்துக் காலையில் அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து நான்கிலொரு பாகமாகச் சுண்டியபின் இறக்கி வடிகட்டு. அதில் எட்டுப்பலம் சீனி சர்க்கரை சேர்த்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் இறக்கி வடிகட்டி புட்டியில் பத்திரப் படுத்த வேண்டும்.

அளவு :— ½ முதல் 1 பலம் வரையில்

தீரும் நோய்கள் :- உட்சூட்டைத் தொடர்பான மார்பு வலித்தல், மார்பு அடைப்பு முதலியவைகள் தீரும்.

குறிப்பு:

மேற்படி சர்பத்தில் புளிப்புண்டாக்க வேண்டுமானால் இரண்டு பலம் எலுமிச்சம் பழச் சாற்றைச் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ளலாம்.

காவுஸபான் சர்பத்து.

காவுஸபான் இலை 6 பலம், சீனிச் சருக்கரை 24 பலம்.

செய்முறை:- மேற்படி இலையை முக்கால் படி நீரில் போட்டு இரவு ஊறவைத்து மறுநாள் காலையில் அடுப்பேற்றி மெதுவாக எரித்து நான்கிலொரு பாகமாகச் சுண்டின பின் இறக்கி வடிகட்டி அதிற் சருக்கரையைக் கரைத்து அடுப்பேற்றிக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கி ஆறினபின் புட்டியிற் போட்டுப் பத்திரப் படுத்தவும்.

அளவு:- $1/2$ — $3/4$ பலம்.

தீரும் நோய்கள்:— மார்பு துடிப்பு, மார்பு அதிர்ச்சி, முதலியவைகள் தீர்ந்து இருதயம் பலப்படும்.

பட்டு சர்பத்து.

கோராப்பட்டு 4 பலம், தாளீசப்பத்திரி, சடாமாஞ்சில் இவை வகை 1க்கு $2\frac{1}{2}$ வராகனெடை, சந்தனத் தூள்

உ

ஏலரிசி இவைவகைக்கு 5 வராகனெடை, சீனிச்சருக்கரை 13 பலம்.

செய்முறை:- பட்டைச் சன்னமாகக் கரைத்தரைத்து ஒருபடி நீரிற்போட்டு மேற்படி ஊறவைத்து நாளாகின் அடுப்பேற்றிக் காய்ச்சும் போது மேற்கண்ட நான்கு சரக்குகளையும் நையச் சிதைத்து ஒரு துணியில் முடித்து அதிற்போட்டுக் காய்ச்ச வேண்டும். காய்ச்சும் ~~போது மேற்கண்ட நான்கு சரக்குகளையும் நைய சிதைத்து ஒரு~~ போது மரக்கொம்பினால் அடிக்கடி அகப்பையை கலக்கியும் வரவேண்டும். நீரானது நாலிலொரு பாகமாகச் சுண்டியவுடன் இறக்கி வடிகட்டி சீனிச்சருக்கரையைச் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கி ஆறினபின் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 8 முதல் 7 வராகனெடை.

தீரும்நோய்கள்:- இருதயம் பலப்படும். இருதய அதிர்ச்சி மார்பு துடித்தல், மனக்கவலை, வீண்கவலை ஆகியவைகள் தீரும்.

இருதய உற்சாக சர்பத்து.

பருத்திப்பூ (செம்பருத்தியானால் உத்தமம்) 10 பலம்.
இதனை அரைப்படிப் பன்னீரில் அல்லது நீரில் இராவு ஊறவைத்து மறுநாள் காலையில் அடுப்பேற்றிக் காய்ச்சி இரண்டிலொரு பாகமாகச் சுண்டின பின்பு வடிகட்டிப் பத்துப் பலம் சீனிச் சருக்கரையைக் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாயெரித்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கி ஆறின பின்பு புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1-2-பலம்,

தீரும் நோய்கள்:- இருதயத்தைப் பலப்படுத்திக் குதூகலத்தை யுண்டாக்கும். மனக்கவலை, எளவற்றம் ஆகிய இவைகளை நீக்கும். ஆரம்பப் பைத்திய ரோகந்தீரும். இது சொற்பச் சுரக்கோயிலும் இருதய முதலியவைகளைப் பலப் படுத்துவதில் மிகவுஞ் சிறந்ததாம்.

அன்னாசிப்பழ சர்பத்து.

அன்னாசிப்பழத்தின் மேலுள்ள தோலை சீவிவிட்டுச் சிறு பில்லைகளாக அறுத்து மர உரலிற் போட்டு மர உலக்கையால் இடித்துச் சாறு பிழிந்து வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தச் சாறு 1 பங்கு சீனிச் சருக்கரை இரண்டு பங்கு இரண்டையுஞ் சேர்த்து அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்துப் பாகுபதத்திலிறக்கி

ஆறவைத்துப் புட்டியில் பத்திரப் படுத்த வேண்டும்.

<u>அளவு</u> :- 3/4 - 1 பலம்.

<u>தீரும்நோய்கள்</u> :- இருதயத்தைப் பலப்படுத்தும். மனதிற்கு ஆனந்தத்தையும் உல்லாசத்தையும் உண்டாக்கும்.

<u>குறிப்பு.</u>

இதனுடன் கஸ்பருங் பன்னீரையும் சத்தியான சாரம் கஸ்தூரியையுஞ் சேர்த்துச் செய்து கொண்டால் சிறப்புக் குணத்தைத் தரும்.

<u>தும்பல சர்பத்து.</u>

மஞ்சள் நிறமாகப் பழுத்துப் போன வெற்றிலை 100. இதனை இடித்து 8 படி நீர் போட்டு நான்கிலொரு பாகமாகச் சுண்ட வைத்து இறக்கி வடிகட்டித் திப்பி நீக்கி அதில் பன்னிரண்டு பலம் சீனி சருக்கரையைச் சேர்த்து அடுப்பேற்றி மெதுவாய்க் காய்ச்சிப் பாகு பதத்திலிறக்கி ஆறவைத்துப் ~~பு~~ புட்டியிற் பத்திரப் படுத்தவும்.

<u>அளவு</u> :- 1/2 பலம் முதல் 3/4 பலம் வரையில்

<u>தீரும் நோய்கள்</u> :- குளிர்ச்சியாயுள்ள இருதயத்தைப்

பலப்படுத்தும். மேதி, கபாதிக்கம், பசிமந்தம், ~~[illegible]~~ சோயாணமைநோய், ஆகியவைகளைப் போக்கும். மனதிற்கு உல்லாசத்தையும் ஆனந்தத்தையும் உண்டாக்கும்.

ஸ்ரீ கஸ்தூரிப் பிரயோகம்.

ஜஹர் மொஹரா, இளநீர் வார்த்தரைத்துக் கல்லில் இழைத்தெடுத்து 1 வராகனெடை. ரோசாப் பூத்தூள், கொத்துமல்லி விதைத்தூள், பருப்புக் கீரை விதைத்தூள், பன்னீர் விட்டரைத்த சந்தனம் வகையொன்றுக்கு ௨ வராகனெடை, காஷூடான் சூரணம், செங்கியப் பூத்தூள், இவை வகையொன்றுக்கு 1 வராகனெடை, கஸ்தூரி ½ வராகனெடை, சீனிச் சருக்கரை ௨½ பலம், தேன் 1¼ பலம்.

செய்முறை:— சருக்கரையையுந் தேனையுஞ் சேர்த்துக் கொஞ்சம் நீர் வார்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கி மேற் சரக்குகளில் கஸ்தூரியைத் தவிர மற்றவ சரக்குகளை நன்றாய்ச் சேர்த்து அதிற் போட்டுச் சந்தனக் கட்டை மத்தால் கடைந்து ஆறினபின் கஸ்தூரியுடன் கொஞ்சம் கற்கண்டைப் போட்டுப் பொடித்து இம் மருந்தில் தூவிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு:— 1 வேளை 1¼ வராகனெடை.

உ.

தீரும் நோய்கள் :- உஷ்ண சம்பந்தத்திலுண்டான இருதய அதிர்ச்சி, இருதயத் துடிப்பு, சுருங்கிய இவைகள் தீரும். இருதயம் பலப்பட்டு வீண் கவலை, மனச்சோர்வு மனத்தளர்ச்சி முதலியவைகள் நீங்கி அடைந்தும் உல்லாசம் முதலியவைகளுண்டாகும்.

உஷ்ண கஸ்தூரிப் பிரயோகம்.

கிச்சிலிக் கிழங்குத் தூள், சடாமாஞ்சித் தூள், உஷ்ணசுந்தரம், மேற்கூறிய சீதள சக்தித் தூள் அக்கிரத் திப்பிலித் தூள், இவை வகையொன்றுக்கு 1 வராகனெடை, தாளிசபத்திரித் தூள், ஏலக்காய்த் தூள் இவை வகைக்கு ½ வராகனெடை. இலவங்கத் தூள், கஸ்தூரி இவை வகையொன்றுக்கு 1/2 வராகனெடை, தேன் 3 பலம்.

செய்முறை :- தேனைக் காய்ச்சிப் பாகுபதத்தில் கஸ்தூரியைத் தவிர மற்றச் சரக்குகளையெல்லாம் ஒன்றன்பின் சேர்த்துப் போட்டுச் சுருக்கு மத்தால் கடைந்து அரைப்பின்பு கஸ்தூரியுடன் கொஞ்சம் கடைந்து அரைப்பின்பு கஸ்தூரியுடன் கொஞ்சம் கற்கண்டைப் போட்டுப் பொடித்து அதில் கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

அளவு :- 1 — 1¼ வராகனெடை.

தீரும் நோய்கள் :- இதனைத் தொடர்பாயுண்டால் இருதய அதிர்ச்சி, இருதயத் துடிப்பு, ஆகியவைகள் நீங்கும். இருதயம் பலப்பட்டு, வீண் கவலை மனச்சோர்வு மனத் தளர்ச்சி முதலியவைகள் நீங்கி, ஆனந்தம் உல்லாசம் முதலியவைகளுண்டாகும்.

இருதயத் துடிப்பு நோய்ச் சிகிச்சைகள்:

தாமரைப் பத்திரமே யரைத்துத் துணியில் வடி கட்டியசாறு ~~[illegible]~~ 2½ பலம், வெள்ளைச் சர்க்கரை 10 பலம்

செய்முறை :- சர்க்கரையாற் கொஞ்சம் நீர் வார்த்துக் கரைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக வெரித்துக் கொதி வந்தவுடன் வடிகட்டித் திப்பி முதலியவைகளை நீக்கி மறுபடியும் அடுப்பேற்றிக் காய்ச்சிப் பாகு பதத்தில் முன் சாறைக் கொட்டிக் கிண்டிக் கிளறிக் கீழிறக்கிச் சுத்தமானதோர் புதுமண் தெறவுக்கடைந்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவேண்டும்.

அளவு :- 3 - 4 வராகனெடை.

தீரும்நோய்கள்:- நீர்த்திரவுண்டான மார்பெரிச்சலை நீக்கும். அசுத்த சத்திகளைப் போக்கும். பஞ்சேந்திரியங்கள், இரைப்பை, மண்ணீரல், ஆகியவைகளைப் பலப் படுத்தும். வியர்வை நாற்றத்தை நீக்கும். வாயுக்களைக் கண்டிக்கும், கிருமிகள், ~~தேக~~ உடல் ஆகியவைகளை உரத்தைப் படுத்தும். வாய் நாற்றத்தைப் போக்கும். தோல்நோய், ~~அசு~~ அசுத்த சத்துக்கள் ஆகியவைகளைக் கண்டிக்கும். கடினப் பிரசவத்தை நீக்கிச் சுகப் பிரசவத்திற்கு கைகொடுக்கும். பாண்டு நோய்க்கும் பயன் படும்.

வேறு.

ஜவாதிற் சேருவன எண்ணும் விபர விவரணைகள். இதிலே பன்னீர் வார்த்துச் சந்தனக் கல்லில் இழைத்த இழைப்பு) அவ்வாறே யரைத்த அக்கில் இழைப்பு, ஏலப் பிழம்பு, பவளக் கிழம்பு, பவளப் புற்றுக் கிழம்பு, இவை வகையாய்க்கு இரண்டு பங்கு, பன்னீர் வார்த்திழைத்த குருந்தக் கட்டைச் சேங்காய்க் கிழம்பு, ஆத்வாசிக் குறணை, கஸ்தூரிப் புழுகு, இவை வகையான் ஒரு பங்கு. பன்னீர் தேவைக்குத் தக்க அளவு.

செய்முறை:- இவை யெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு மேற்படிப் பன்னீரைச் சிறுகச் சிறுக வார்த்துக் கொண்டு சாமம் அரைத்து ஒரே உருண்டையாக உருட்டி அதை கல்லில் அதன் மேல் வைத்தெடுத்துப் பின் வில்லையாகச் செய்து அதன் மீது தங்க ரேக்கைக் கவசித்துப் பத்திரப்படுத்த வேண்டும்.

அளவு:- இதிலைப் பன்னீர் வார்த்து இழைத்துக் கொண்டு குன்றிமணியளவு எடுத்து உபயோகம் பன்னீரிற் கரைத்துப் பானஞ் செய்ய வேண்டும்.

தீரும் ரோகங்கள்:- இருதயத்துடிப்பு, இருதயத்துர்ப்பலம், ஈரல் கிலேசம், மனக்கவலை, முதலியவைகளை நீக்கி இருதயத்தைத் திடப்படுத்தி உற்சாகத்தையும் ஊக்கத்தையும் உண்டாக்கும்.

நிலா குல்கந்து

வெண்டாமரைப் பூவிதழ்கள் 40 பலம். (இதிலுள்ள தூசை மெல்லிய துணியால் துடைத்து ஏ.ஏ. மெல்லமாய்ச் செய்து கொள்ள வேண்டும்.) சன்னமாயரைத்த கற்கண்டுத்தூள் 80 பலம்.

செய்முறை:- வாய்க்குறுகின ஒரு சாடியில் சிறிது கற்கண்டுத் தூளைப் பரப்பி அதன் மேல் கொஞ்சம் இதழ்

76

சுத்தப் படுத்தி வைத்திருக்கின்ற தாமரைப்பூ விதழ்களைப் போட்டுப் பரப்பி அதன்மேற் கற்கண்டுத் தூளைப் போட்டுப் பரப்ப வேண்டும். இவ்விதம் ஒரு அடுக்கு கற்கண்டுத் தூளையும் மறு அடுக்குத் தாமரைப்பூ விதழ்களையும் போட்டுப் பரப்ப வேண்டும். இவ்விதம் ஒரு அடுக்கு கற்கண்டுத் தூளையும் மறு அடுக்குத் தாமரைப்பூ விதழ்களையும் முறையே அடுக்கடுக்காகப் போட்டு அதன் மீது பத்துப்பலம் பன்னீரை விட்டு வாய்க்கட்டு செய்து நிலாவில் நாற்பது நாள் வைத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு :- 1 - ௨ - பலம்.

தீரும் நோய்கள் :- இருதய அதிர்ச்சி, மனச்சோர்வு முதலியவைகள் நீங்கி இருதயத்தைப் பலப் படுத்தும்.

குறிப்பு

மேற்கண்டபடி செய்வதைக் காட்டிலும், இதழ்களையும் கற்கண்டுத் தூளையும் சேர்த்து இரண்டு மூன்று மணிநேரம் கையால் நன்றாக மசித்துப் பிறகு சாடியிற் போட்டு வாய்க்கட்டு செய்து சேர்ந்தபடி நிலவில் வைத்தெடுத்துக் கொள்வது எளிதான முறை.

வேறு.

செந்தாமரைப்பூ விதழ்களையும் மேற்கண்டபடியே செய்து மேற்கண்டபடியேப் பயன் படுத்த மேற்கண்ட குணங்களுண்டாகும்.

வேறு.

மேற்கண்டவாறு செடிச்சம்பங்கி, கொடிச்சம்பங்கி, மரச்சம்பங்கி ஆகியவைகளின் பூக்களை மேற்கண்டபடியே செய்து மேற்கண்டபடியேப் பயன் படுத்த மேற்கண்ட பலனுண்டாகும்.

வேறு

செஞ்சந்தனம் 1½ வராகனெடை, வெள்ளிலோத்திரம், கொத்துமல்லிவிதை, இவ்விரண்டும் வகைக்கு 1¼ வராகனெடை, இவைகளை இடித்துப் பத்துப்பலம் நீரில் ஆறவூறவைத்து மறுகாலையில் அதைப் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கின ஊறற் கியாழத்தில் ஒன்று வராகனெடைச் சீனிச்சர்க்கரையைக் கரைத்துப் பானஞ் செய்ய வேண்டும். இவ்விதம் நாள்தோறும் காலையில் பருகிவர உட்ண தேகஉட்ணத்தினாலுண்டான மார்பு துடிப்பில் நோய் தீரும்.

உ.

வேறு.

காவுஞ்சுபான் 1/2 வராகனெடை, இலவங்கம் 4 குன்றி மணியெடை, இவ்விரண்டையும் முக்கால் ஆழாக்கு நீரிற்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டித் திப்பி நீக்கிக் கஷாயத்தில் கொஞ்சம் சர்க்கரை சேர்த்துப் பருக வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் ~~[illegible]~~ பருகி வரக் குணமாகித் தொடர்பான மார்பு துடிப்பு நோய் தீரும்.

மார்பு துடிப்பு நோய் மருத்துவம்

காவுஞ்சுபான் 2 வராகனெடை, பன்னீர் வார்த்து இழைத்து வைத்த சந்தனம் 2 வராகனெடை, ரோசாப் பூவிதழ் 2 வராகனெடை, ராமத்துளசி, காவுஞ்சுபான் 4, நன்னாரி வேர், மஞ்சட் கடுக்காய்த் தோல் இவை வகைக்கு 1 1/4 வராகனெடை, விதை நீக்கிய திராட்சைப் பழம் 1 1/2 வராகனெடை, கல்கண்டு 12 வராகனெடை, சீனிச் சர்க்கரை 25 வராகனெடை.

செய்முறை:- சீனிச் சர்க்கரையையும், கல்கண்டையும் தவிர மற்றவைகளை யெல்லாம் மூன்று ஆழாக்கு நீரிற் போட்டு ஒரு ஆழாக்கு நீராகச் சுண்டின பின் நன்கு பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கிக் கியாழத்தில் கல்கண்டைக் கரைத்து மறுபடியும் வடிகட்டித்

திப்பிலி நீக்கி யதிற் சருக்கரையைச் சேர்த்துச் சிறுதீயா
யெரித்துப் பாகு பதத்தில் இறக்கிப் புட்டியில்
பத்திரப் படுத்த வேண்டும்.

அளவு :- 2 1/2 முதல் 3 வராகனெடை.

தீரும் நோய்கள் :- இருதயத் துடிப்பு, வீக்கவலி
இருதய துர்ப்பலம் ஆகியவைகள் தீரும்.

வேறு

புதிய செம்பருத்திப் பூ 1 வராகனெடை முதல் 2 வராக
னெடை, இவ்விரண்டையும் மென்று சாப்பிட வேண்டும்.
இவ்விதம் காலை மாலை யிரண்டு வேளையுஞ் சாப்பிட்டுவர
இருதய அதிர்ச்சி மனக்கவலை ஆகியவை தீரும்.

வேறு

சிறு துத்தியாகுச்சாறு 1/2 பலம் நீர் 1 பலம்,
கற்கண்டுத் தூள் 3/4 பலம். இவை யெல்லாவற்
றையும் ஒன்றாகக் கலந்துப் பருக வேண்டும்.
இவ்விதம் காலை மாலை யிரண்டு வேளையுஞ் சாப்
பிட்டுவர உட்டணத் தொடர்பான இருதயத் துடிப்பு
மனக்கவலை முதலியவைகள் தீரும்.

உ.

வேறு.

திருநீற்றுப் பச்சை விதை 3 வராகனெடை. இதனை அரையாழாக்கு நீரில் போட்டுக் காற்றுள்ள இடத்தில் வைத்துக் காலையில் சுமார் இரண்டு மூன்று வராகனெடைச் சருக்கரையைச் சேர்த்துப் பிறகு கால் கரண்டியால் கொஞ்சம் கொஞ்சமாகப் பருக வேண்டும். இவ்விதம் நாள்தோறும் காலையில் செய்து வர உட்டணத் தொடர்பினாலுண்டான இருதய அதிர்ச்சி திடுக்கம், இத்தியவைகள் தீரும். இந்த விதையானது இந்த நோய்க்குச் சஞ்சீவிக் கொப்பானது.

வேறு.

இஸ்பகோல் விதை ௪ வராகனெடை, இதனை அரை ஆழாக்கு நீரில் மூன்று மணிநேரம் ஊற வைத்து அதனை வடிகட்டி அதன் கொழுமையை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு அதில் நான்கு வராகனெடைச் சீனிச் சருக்கரையைச் சேர்த்துப் பருக வேண்டும். இவ்விதம் நாளொன்றுக்கு இரண்டு முறைகள் செய்து வந்தால் உட்டணத் தொடர்பான மார்பதிர்ச்சி நோய்கள் தீரும்.

வேறு:

நடுத்தரமானபுளி (அதாவது அதிகம் புதிதல்லாதது, அல்லது அதிகம் பழமை யல்லாதது) பலம் ½, இதினை அரை ஆழாக்கு நீரிற் கரைத்து நீராவி வைத்துக் காலையில் அதன் தெளிவை மட்டும் இறுத்துக் கொள்ள வேண்டும். பிறகு அதில் அரைப்பலம் சீனிச் சர்க்கரையைச் சேர்த்துப் பானஞ் செய்ய வேண்டும். இவ்விதம் நாள் தோறும் காலையில் பருகிவர மலக்கட்டு தீர்ந்து இருதய அதிர்ச்சி, மயக்கம் ஆகியவைகள் தீரும்.

வேறு:

நாள் தோறும் காலையில் இரண்டு வெற்றிலைகளை மென்று தின்றுவர இளைப்புத் தொடர்பான இருதய அதிர்ச்சி, இருதயத் துடிப்பு, மயக்கம் ஆகியவைகள் தீரும்.

வேறு

அரைக்கீரை முளையை அடிக்கடி ஆகாரத்திற் சேர்த்துச் சாப்பிட்டுவர, உட்ணத் தொடர்பான இருதய அதிர்ச்சி தீரும்.

குறிப்பு.

இது ஆரம்பத்திற் குறைந்த அளவாக விடுத்து

போதியும் நாளடைவில் நிறுத்து விருத்திசெய்து நாளடைவில் வராகனைப் படிக்கத்தின் கொதுவாகிவிடும். அபின் சாப்பிடப் பழக்கமாகி விட்டால், பிறகு அதை விடுவது இலேசானக் காரியமல்ல. ஆகையால் இவ்விதமான மருந்துகளை உடைய வரையால் அதிக விழிப்புடன் பயன்படுத்த வேண்டியது.

வேறு

சுருக்கி நாத்தம் பழச்சாறு 10 பலம், சீனிச் சருக்கரை 10 பலம், இவ்விரண்டையுஞ் சேர்த்து சர்பத்தாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:- 3-4 வராகனெடை.

தீரும்நோய்கள்:- பித்தத் தொடர்பாலுண்டான இருதய அதிர்ச்சி இறைப்பை நோய்கள் வராது, அரோசகம் ஆகியவைகள் தீரும்.

வேறு

கொண்டைக்கடலை 4 வராகனெடை, இதனை அரை ஆழாக்கு நீரில் இரவு ஊறவைத்து மறுநாள் காலையில் நன்றாகப் பிசைந்து நீரை மட்டும் வடிகட்டி அதில் கொஞ்சம் சருக்கரையைச் சேர்த்து இளம்பாகிப் பருக வேண்டும். இவ்விதம் நாள் தோறும் காலையில் பருகிவர, இருதய அதிர்ச்சி, மனத் திடுக்கம், இருதயச்

சோர்வு ஆகியவைகள் நீங்கும். இருதயம் பலப்படும். ஆனால் இதை உபயோகித்துக் கொண்டு வரும் போது புளிப்புப் பொருட்கள் காரப் பண்டங் கள், ஆகியவைகளை நீக்கிவைக்க வேண்டியது.

வேறு

வெட்டிவேர் 20 பலம், இதைச் சன்னமாகத் துண்டித்து கால்படி நீரில் போட்டு இரண்டு நாள் ஊற வைத்து மூன்றாம் நாள் வாலையிலிட்டுத் திராவகம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு:- 1-2-3 பலம். படுக்கும் போது கொஞ்சம் சர்க்கரை சேர்த்து இளைப் புண்டாக்கிக் கொள்ளலாம்.

தீரும் நோய்கள்:- வெப்பத் தொடர்பான மார்பெரிச்சி மனத்திடுக்கம், ஆகியவைகள் நீங்கும். மலபந்தம் நீங்கி அது இரைப் படும். வெப்பத் தொடர்பான காசம் ஆகியவை களைத் தீரும்.

வேறு

மேற்றோல் நீக்கின கொத்துமல்லி விதை, காவுந்தோபான், இவை வகையொன்றுக்கு 10 வராகனெடை ஏலக்காய், செம்பரத்தைப் பூ, காவுந்தோபான் பூ, ரோசாப்பூ சந்தனத்தூள், இவை வகை, க்கு 15 வராகனெடை, தண்ணீரில் ஆடும்படியான அக்கர்க்கட்டை,

3 வராகனெடை, கஸ்தூரி 1/4 வராகனெடை, பசுவின் பால் 2 1/2 படி, நீர் 1 1/2 படி.

செய்முறை:- அகிற்கட்டை, ஏலக்காய், கொத்துமல்லி ஆகியவைகளை நன்றாக இடித்து மற்றச் சரக்குகளையுஞ் சேர்த்து வாணலியிலிட்டு திராவகம் இறங்கும் குழாயின் வாயில் கஸ்தூரியை மெல்லிய வஸ்திரத்தில் முடிந்து இறங்கும் திராவகமானது அதன் மேலாக வடியும்படியாய்க் கட்டித் தொங்கவிட வேண்டியது. பிறகு இறங்கும்படி திராவகம் இறக்கிப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

~~அளவு~~

அளவு:- 1 தோல் 3 பலம்.

தீரும் நோய்கள்:- இருதயத் துடிப்பு திக்கம், மைக்கவலி, இருதய துர்ப்பலம், ஆகியவைகளை நீக்கும். இருதயத்தைப் பலப் படுத்தி உவகைக்களிப்பையுண்டாக்கும்.

வேறு.

சிவப்புச் சந்திர மல்லி 24 பலம். இதனையிரண்டு

உ

படி நின்று போட்டு வாலையிட்டு ஒருபட்டியால் திராவகத்தைப்படி இறக்கிக் கொள்ளவும். இந்த திராவகத்திற்குச் சமன் அல்லது அரைப்பங்கு பன்னீரைச் சேர்த்து மொத்தஎடைக்கு அரைப்பங்கெடை சர்க்கரையைச் சேர்த்துப் பாகுபதமாகக் காய்ச்சி இறக்கி ஆறின பின்பு ஜகர் மொகரா என்னும் ஏந்து நிவாரணைக்கல்லை இழைத்த விழுது 1½ வராகனெடை, கெவ்கிழப்புத் தூள் 1½ வராகனெடை, இவ்விரண்டையும் அதிற்கலந்துப் புட்டியிலிட்டுப் பத்திரப் படுத்த வேண்டும்.

<u>அளவு</u> :- 5 முதல் 7½ வராகனெடை

<u>தீரும் நோய்கள்</u> :- இருதய அதிர்ச்சி, மார் திடுக்கம், மனக்கலக்கம் ஆகியவைகள் தீரும். இருதயச் சோர்வை நீக்கி அதைப் பலப்படுத்தும். மனதிற்கு அமைதியையும் களிப்பையுமுண்டாக்கும்.

<u>குறிப்பு</u>

மேற்கண்ட மருந்துகளெல்லாம் ஏகச் சரக்காலானவைகள், அல்லது எளிதானவைகள் என அலட்சியமாக எண்ணலாகாது. இது பார்வைக்கு எளிதாக விருந்த போதிலும் இதனாலுண்டாகும் ~~[illegible]~~

பயனளவற்றது.

இரைப்பைத் தொடர்பான நோய்களின் மருத்துவம்.

உண்ட ஆகாரஞ் செரியாமல் வயிற்றில் வலிகண்டால் நீரிற்கொஞ்சம் உப்பைக் கரைத்துப் பானஞ் செய்வித்து வாந்தியால் செரிக்காதப் பொருட்களை வெளிப்படுத்தி விட வேண்டியது. நல்லபசியுண்டாகிறவரையில் எவ்வித ~~ஆகாரமும்~~ உணவும் கொடுக்காமல் நிறுத்தி வைக்க வேண்டியது. நல்ல பசியுண்டானால் இலேசாய்ச் செரிக்கக்கூடிய மிருதுவான உணவைக் கொடுக்க வேண்டியது.

வயிற்றில் வலியானது இடம்மாறி மாறிக்கண்டால் வாயுத்தொடர்பானதெனத் தெரிந்து கோதுமையுமி, உப்பு, கம்பு, வாலுளுவையரிசி, ஆகியவைகளிலொன்றை வறுத்துத் துணித்துண்டில் முடிந்து ஒற்றிடமிட வேண்டியது. மணல் வறுத்தும் ஒற்றிடமிடலாம். ஓமத் திராவகத்தைப் பானஞ் செய்விக்கலாம்.

திப்பிலி ஜுவாரிஷ்.

அரிசித் திப்பிலியை வறுத்திடித்துத் துணியில் வடிகட்டிய தூள் 2½ பலம். சீனிச் சருக்கரை 1 பலம்.

செய்முறை :— சர்க்கரையைப் பாகுசெய்து பாகுபதத்தில் மேற்படி தூளைக் கொட்டிக் கிண்டிக் கிளறி ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :- 2 முதல் 3 வராகனெடை.

தீரும் நோய்கள் :- வாயுவைக் கண்டிக்கும். உணவைச் செரிக்கும். இரைப்பையைப் பலப்படுத்தும் தாதுவளத்தையுண்டாக்கும். இரைப்பையிலுள்ள கபம் முதலிய அசுத்த திரவத்தை ~~யுண்டாக்கும்~~ வறட்டும்.

சுக்கு ஜவாரிஷ்.

மேற்றோல் நீக்கின சுக்கையிடித்துத் துணியில் வடிகட்டியதூள் 2½ பலம், நெய்ச் சருக்கரை 10 பலம்.

செய்முறை :- மேற்கண்ட பாகப்படியே செய்யவும்.

அளவு :- 2 - 3 - வராகனெடை

தீரும் நோய்கள் :- வாயுவைக் கண்டிக்கும் குளிர்ச்சியினால் இரைப்பையிலுண்டான நோயைத் தணிக்கும். உணவை செரிக்கச் செய்யும். மறதி நோயைப் போக்கும். குளிர்ச்சியான இரைப்பையிலும் ஈரலிலும் சூட்டை யுண்டாக்கும்.--

குறிப்பு

மேற்படி சுக்குத்தூளை ஐந்து பலம் எலுமிச்சம் பழச்சாற்றில் போட்டு வெயிலில் வைத்து உலர்த்த பின்பு மறுபடியும் முன்போல் ஐந்து பலம் எலுமிச்சம் பழச் சாற்றை விட்டு முன்போல உலர்த்த வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவை யல்லது நான்கு தடவை செய்து முன்போல லேகியம் செய்து கொள்ளவேண்டும். இதனின் சிறப்புக் குணம் முண்டாகும்.

இஞ்சி ஜவாரிஷ்.

இரண்டு பலம் மேற்றோல் போக்கின இஞ்சியைச் சிறு சிறு துண்டுகளாகத் துண்டித்து நெய்யில் வறுத்துப் பத்துப்பலம் பனைவெல்லத்தைச் சேர்த்து அம்மியில் வைத்து மைபோலரைத்து எடுத்துக் கொள்ளவும்.

அளவு, தீரும் நோய்கள் அதனியவை மேற்கண்டபடியேயாம்.

சாம்பிராணி ஜவாரிஷ்.

சாம்பிராணியைப் பொடித்துத் துணியில் வடிகட்டிய தூள் 2 1/2 வராகனெடை, சீனிச்சர்க்கரை 10 பலம்.

செய்முறை:- சர்க்கரையைப் பாகுசெய்து பாகு பதத்தில் மேற்படி தூளைக் கொட்டிக்கிளறி கலந்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:- 1½ — 2 வராகனெடை.

தீரும்நோய்கள்:- இரைப்பையைப் பலப்படுத்தும், செரிக்கும் திறனைப் பெருக்கும்.

குறிப்பு

இதில் புளிப்புண்டாக்கவேண்டிய அவசியமிருந்தால் மூன்று பலம் எலுமிச்சம் பழச்சாற்றை மேற்படிப் பாகுடன் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ள வேண்டியது.

அகர் ஜவாரிஷ்:

தண்ணீரில் போட்டால் ஆழும்படியான அகிற் கட்டையைப் பொடித்துத் துணியில் வடிகட்டிய தூள் 2½ வராகனெடை, சீனிச் சர்க்கரை 10 பலம்.

செய்முறை:- முன் சொன்ன முறைப்படியே செய்து கொள்ளவும்.

அளவு, பயன் இவைகளும் மேற்கண்டவைகளேயாம்.

இந்திரக்க ஜுவாரிஷ்.

இந்திரிக்கத்தைத் தான் செய்து துணியில் வடிகட்டிய தூள், ஏலக்காய் விதைத்தூள் இவைவகைக்கு 2 வராகனெடை. மேற்றோல் நீக்கின சுக்கு 1 சன்னராஷ்டம், ஜடாமாஞ்சில்; கருஞ்சீரகம், ஏலரிசி, மிளகு, இவற்றைத் தனித்தனியாக இடித்துத் துணியில் வடிகட்டிய தூள் வகையொன்றுக்கு 1 வராகனெடை. சீனிச் சருக்கரை 3½ பலம்.

செய்முறை:- சர்க்கரையைப் பாகு செய்து பாகு பதத்தில் ஒன்றாகக் கலந்து இறுக இறுகத் தூவி சுத்த மத்தால் கடைந்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

அளவு: 3/4 — 1¼ வராகனெடை

தீரும் நோய்கள்:- குடற்றொடர்பான பேதியைக் கட்டும். சோர்ந்திருந்த யகிருத்தும் குளிர்ச்சியான இரைப்பையைப் பலப்படுத்தும்.

ஆமலக ஜுவாரிஷ்

நெல்லிக்காய்ச்சாறு 2½ பலம். பன்னீர் 2½ பலம். (பன்னீரில்லாவிட்டால் நீரைச் சேர்த்துக்

கொள்ளவும் ரூமிமஸ்தகித் தூள் 5 வராகனெடை.
சீனச் சருக்கரை 10 பலம்.

செய்முறை:- முன்கண்ட திரவத்தையும் சர்க்கரையையுங் கலந்து அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்துப் பாகுபதத்தில் இறக்கிச் சிறிது ஆறியபின்பு மஸ்தகித் தூளைச் சேர்த்து நன்றாகக் கலந்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1½–2½ வராகனெடை.

தீரும்நோய்கள்:- இரைப்பையைப் பலப்படுத்தும்.
சீரணத்தைப் பெருக்கும். பித்தத்தைத் தணிக்கும்.

ஓம ஜவாரிஷ்

ஓமத்தை இளவறுப்பாக வறுத்து இடித்துத் துணியில் வடிகட்டிய தூள் 1 பலம். இதனை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு நான்கு பலம் எலுமிச்சம் பழச் சாற்றை விட்டு வெயிலில் வைத்து அச்சாறு உலர்ந்த பின்பு மறுபடியும் நான்கு பலம் எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு உலர்த்த வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று முறை எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு உலரவைத்து எடுத்துக் கொள்ளவும்.

பிறகு பன்னிரண்டு பலம் சர்க்கரையைப் பாகுசெய்து பாகு பதத்தில் முன் இடித்துப் பொடித்து வைத்திருக்கின்ற தூளைச் சிறுகச் சிறுகத் தூவி மத்தால் கடைந்து நன்குக் கலந்து அதனின் பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1-2. வராகனெடை,

தீரும்நோய்கள்:- உணவைச் செரிக்கச் செய்யும். பசித்தீபனத்தை யதிகரிக்கும். வாயுக் களைக் கண்டிக்கும்.

சன்னராஷ்ட ஜவாரிஷ்.

சன்னராஷ்டத்தை பொடித்துத் துணியில் வடிகட்டிய தூள் 1 பலம். சீனிச்சர்க்கரை 5 பலம்.

செய்முறை:- மேற்கண்ட பாகப்படியே செய்து கொள்ளவும்.

அளவு:- 1/2 - 2 1/2 வராகனெடை.

தீரும்நோய்கள்:- வாயுக்களைக் கண்டிக்கும். உணவைச் செரிக்கும். இரைப்பை, குடல் ஆகியவை களுக்குச் சக்தியைத் தரும். இரைப்பையிலுள்ள கபம் முதலியக் கெட்ட நீர்களைக் கண்டிக்கும். புளித்த

ஏப்பம், குளிர்ச்சியாலுண்டான நீர்க் கடுப்புக் காயின்
வலி ஆகியவைகளைக் கண்டிக்கும்.

கருஞ்சீரக ஜவாரிசு.

கருஞ்சீரகம் உ பலம் இதை ஐந்து பலம் காடியிற் போட்டு வெயிலில் வைத்துக் காடியானது சுண்டின பின் நன்றாயுலர்த்திச் சட்டியில் வறுத்து இடித்துத் தூளாய் வடிகட்டிய தூள் உ பலம். சீனிச் சருக்கரை உ0 பலம்.

செய்முறை:- சருக்கரையைப் பாகு செய்து பாகு பதத்தில் மேற்படித் தூளைக் கொட்டிக் கிளறி நன்றாகக் கலந்து கீழிறக்கி வைத்து ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

அளவு:- உ—4 வராகனெடை.

தீரும் நோய்கள்:- கபத்தை வெளிப்படுத்தும். வாயு, வயிற்றுப் பிசம் ஆகியவைகளைக் கண்டிக்கும். வெறிநோய்க்கடி நஞ்சு, மருந்துகளின் நஞ்சு, ஆகியவைகளை முறிக்கும். வயிற்றிலுள்ள கிருமிகளைக் கொல்லும். சூதகம், சூதகக்கட்டு, நீர்க்கட்டு, ஆகியவைகளை உடைக்கும். நீர்க் கடுப்புக் காயின் அஸ்மரியை வெளிப்படுத்தும். கல்லை

நீர்க் குண்டிக்காய் ஆகியவற்றிலுள்ள வேதனையைக் கண்டிக்கும். நீர்ப்பையிலுள்ள குற்றத்தை நீக்கும். நாட்பட்ட சுரம், வாதசுரம், வாதசுரம், ஆகியவைகளைக் குணப்படுத்தும்.

கமூனி ஜவாரிஷ்

பாகப்படுத்தின கருஞ்சீரகத் தூள் 3½ பலம், ஜடாமாஞ்சில் தூள் 1 பலம். மிளகுத் தூள் 1 பலம். கிராம்புப் பூங்காவி அல்லது காட்டுப் பூங்காவித் தூள் ¼ பலம்; தேன் 15 பலம்.

செய்முறை:- தேனை யடுப்பின் மீதேற்றி நுரையற வடித்துக் காய்ச்சி இரண்டு கொதி வந்த பின்பு மேற்படி தூள்களை யொன்றாகக் கலந்து அதிற் இறுகத் தாவிச் சேர்க்கையாகக் கிண்டிக் கிளறிக் கீழிறக்கி ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1½ – 4 வராகனெடை.

தீரும் நோய்கள்:- வயிற்றுநோய், இரைப்பை யிலுற்பத்தி பிடிக்கின்ற கபக்கட்டு, இரைப்பை யிலுற்பத்தி யாகின்ற வாயு, சௌயாளை,

ஆரம்பக் குன்ம ரோகம், ஆகியவைகளைக் கண்டித்து இரைப்பையைப் பலப்படுத்திச் சௌகரியத்தைப் படுத்தும்.

கருஞ்சீரகம் 5 பலம், திராட்சைக்காடி அல்லது நாட்டுக்காடி 10 பலம், காடியை ஒரு பீங்கான் பாத்திரத்தில் ~~[illegible]~~ விட்டு அதில் கருஞ்சீரகத்தைப் போட்டு பனிரண்டு மணி நேரம் ஊறவைத்துப் பிறகு வெய்யிலில் வைத்துலர வைக்க வேண்டும். ஈரமில்லாமல் உலர்ந்த பின்பு இரண்டாம் முறையும் 10 பலம் காடியை விட்டு முன்போல் வெய்யிலில் வைத்துலர்த்த வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று முறைகள் செய்து முடிவில் நன்றாக உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து துணியில் வடிகட்டி மேற்கண்ட வண்ணம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அவசரமாக வேண்டிய காலங்களில் கருஞ்சீரகத்தில் காடியை விட்டு அடுப்பில் வைத்து வறுத்துக் காடி சுண்டியவுடன் முன்போல் மறுபடியும் காடியைவிட்டு முன்போல் சுண்ட வைக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி

மூன்று முறைகள் செய்து புட்டில் வறுத்து
இடித்துத் துணியால் வடிகட்டி மேற்கண்ட
அளவு எடுத்துக் கொள்ள வேண்டும்.

கமூனி ஜவாரிசு (வேறு).

பாகப் படுத்தின கருஞ்சீரகத்தூள் 3 பலம், மேற்றோல் நீக்கின சுக்குத்தூள் 1 பலம், மிளகுத்தூள் அரிசித் திப்பிலித்தூள், ஜடாமாஞ்சித்தூள், பெருவிலவங்கப் பட்டைத்தூள், சீமைப் பூங்காவி அல்லது நாட்டுப் பூங்காவித்தூள், இவை வகையொன்றுக்கு 2 வராகனெடை, தேன் 5 பலம்.

செய்முறை:- முன் கூறியாங்குள்ள பாகப் படியே செய்து கொள்ளவும்.

அளவு:- 1/2 - 3 வராகனெடை.

தீரும்நோய்கள்:- இரைப்பையாலுள்ள வாயுக்கள், இரைப்பை யாலுள்ள குளிர்ச்சி, ஆகியவைகளைக் கண்டித்து இரைப்பையைப் பலப்படுத்தும். செரி திறனை அதிகரிக்கும். ஆரம்பக் கிராணி நோய், வயிற்றில் அடுக்கெடுக்கும் பூடாத் திராவகம் வரு வாயுக்கள் ஆகியவைகளையும் கண்டிக்கும்.

உ.

97.

மதிரு
~~மதிரு~~ லேகியம்:

உலர்த்தின மதிரு கிழங்குத்தூள் 1½ பலம். மேற்றோல் நீக்கின சுக்குத்தூள், ஓமத்தூள், கருஞ்சீரகத்தூள், இவை வகைக்கு 3/4 பலம், ஏலக்காய் விதைத்தூள், சோம்புத்தூள், மிளகுத்தூள், இவை வகைக்கு 1/2 பலம். வெண்சர்க்கரை 16 பலம்.

....

செய்முறை:- சர்க்கரையைக் கொஞ்சம் நீரைச் சேர்த்துக் காய்ச்சி இரண்டு கொதி வந்தவுடன் இறக்கி வடிகட்டி மறுபடியும் அடுப்பிலேற்றிச் சிறுதீயாயெரித்துப் பாகு பதத்தில் மேற்படி தூள்களை மெல்லமாய்த் தூவிக் கலந்து மெழுகு பதமாகும் ~~[illegible]~~ இறுகச் சிறுகத் தூவி செவ்வையாகக் கிண்டிக் கீழிறக்கி ஆறின பின்பு பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1-3 வராகனெடை.

தீரும் நோய்கள்:- இதைப் பசியுண்டாக்கும். வாயுவைக் கண்டிக்கும். மந்தாக்கினி நோய், செரியாமை நோய், ஏப்பநோய், ஆகியவைகளைப் போக்கும். இதைப் பலப்படுத்திச் சொ~~[illegible]~~ நீரை

உ.

யதிகரிக்கச் செய்யும்.

அணிலைன் ஒவாளர்.

பாகப் படுத்தின அணலைன் தூள் உ பலம்
தேன் உ4 பலம்.

செய்முறை:- தேனைக் காய்ச்சி இரண்டு
கொதி வந்தவுடன் மேல்விய தூளைப்
போட்டு நுரை தெளியவைக்க இறக்கி மறுபடியும்
அடுப்பேற்றி இறுகத் காவிச்
செவ்வையாகக் கிண்டிக் கொண்டு இறக்கி.
அதனை பின்புப் பீங்கான் பாத்திரத்தில் பத்
திரப் படுத்தவும்.

அளவு:- உ-4-வராகனெடை.

தீரும் ரோகங்கள்:- இரைப்பையைப் பலப்படுத்தித்
தொகுதிறன பசியைப் பெருக்கும். பசித்தீபனத்தைப்
பெருக்கும். குடல் தொடர்பினையுண்
டாகும் பேதியைக் கட்டும். வயிற்றுவலி,
வயிற்றுப் பசம், வயிற்றிசுப்பு வாயுநோய்,
அதிசாரங்களையும் கண்டிக்கும்.

அனிலைன் பக்குவம்.

அனிலைன் ~~[struck out]~~ 5 பலம், சீமைக்காடி அல்லது நாட்டுக்காடி 10 பலம், இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு அதில் மேற்படி அனிலைனைப் போட்டு அடைத்துக்காடி அதில் சுவறும்போது பிறகு நிழலில் உலர்த்தி வைத்து இதைத் தேரணத்துடன் துணியில் வடிகட்டி மேற்கண்ட ஜடை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மண்டூர ஜவாரிஷ்.

பாகப் படுத்தின மண்டூரம் 10 பலம். சூரத்துக் கடுக்காய்த் தோல், நெல்லி முள்ளி, மேற்றோல் சீவின அதிமதுரம், மேற்றோல் சீவின சுக்கு, ஏலரிசி, சடாமாஞ்சில், ரோஜாப்பூ, இவற்றைத் தனித்தனி பொடித்துத் ~~[struck out]~~ துணியில் வடிகட்டிய தூள் வகை ஒவ்வொன்றுக்கு 10 பலம், தூய்மையான பனை வெல்லம் ௨௰ பலம்.

செய்முறை:- பனைவெல்லத்தைக் கரைத்துப் பாகு செய்து அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து இரண்டு கொதி வந்தவுடன் வடிகட்டித் திப்பி நீக்கி மறுபடியும் அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்துப் பாகு பதத்தில் மேற்படித் தூள்களையெல்லாம்

100

புண்ணுக்குக் கலந்து இறுகச்சிறுகத் தூவிச் செவ்வை யாகக் கிண்டிக் கொதிக்க் கிழங்குக்கு இளைத சுகுணா மண்புடம் மீதுக்கான் பாதத்திற்று பற்றிப்பரித் தவும்.

அளவு:- 1 – 2½ வராகனெடை.

தீரும் நோய்கள்:- பசித் தீபனத்தை அதிகமாகப் பெருக்கும். இரைப்பையிலுள்ள தாப்பலத்தை நீக்கி அதைப் பலப்படுத்தி யதிலுள்ள நோய்களைத் தீர்த்துவிடும். தாது இழப்பை நீக்கித் தாதுப் பெருக்கத்தை யுண்டாக்கும். வெளுத்த உடலானதுக் கருநிறமாகி மேனி மினுப்பும் பளபளப்பும் உண்டாகும். கிலநோயை யுண்டாக்கும்.

மகா திரிபலாதி

(அ) மஞ்சட் கடுக்காய்த் தோல், சூரத்துக் கடுக்காய்த் தோல், கருநிறக் கடுக்காய்த் தோல் நெல்லிமுள்ளி, இவை வகையொன்றுக்கு 10 வராகனெடை,

(ஆ) அரிசித் திப்பிலி, மிளகு, இவை வகைக்கு 10 வராகனெடை, மேற்றோல் நீவின சுக்கு, சித்திரமூலவேர்ப்பட்டை, வெட்பாலரிசி, மேற்றோல் போக்கின வசம்பு, வெள்ளைத்

கடுக்கா, கற்கண்டு, இவை வகையொன்றுக்கு 4 வராகனெடை, தேன் 30 பலம்.

செய்முறை:— (அ) விதைகளை ஒன்றிக இடித்துத் துணியால் வடிகட்டிய பொடியைப் பையச் சிறுகச் சிறுகத் தெளித்து மெய்ப்பையுண்டாக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.
(ஆ) விதைகளில் எள்ளையும் கடுக்காயையும் தவிர மற்றச் சரக்குகளை ஒன்றாகப் பொடித்துத் துணியால் வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். எள்ளையும் கடுக்காயையும் அம்மியில் வைத்து மைபோலப் பொடித்து எல்லாத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு தேனைக் காய்ச்சி இரண்டொரு கொதி வந்த பின்பு மெல்லிய துணியால் வடிகட்டித் திப்பி நீங்கியவைகளை மறுபடியும் அடுப்பேற்றிச் சிறு தீயால் எரித்து முன் சேர்த்துப் பதித்தி வைத்திருக்கின்ற தூள்களைச் சிறுகத் தூவிச் செவ்வையாகக் கிண்டிக் கிளறிக் கீழிறக்கி வைக்கின்ற ஆறின பின்புப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு: 1½ — 3 வராகனெடை.

102

உ

<u>தீரும் நோய்கள் :-</u>

இரைப்பையைப் பலப் படுத்தும், இரைப் பையிலுள்ள வாயுக்களைக் கண்டிக்கும். உப்பிசத் தைப் போக்கும். உடல் நிறக் கேட்டினை மாற்றி நல்ல நிறத்தை உண்டாக்கும். தலையிலுள்ள தூய்மையற்ற இடங்களை நீக்கி அதைப் பலப் படுத்தும். தலைநோய் கண்நோய், காது நோய் ஆகியவைகளுக்கும் பயன் படும்.

அநுபவத்தாரே என்றும் செரி நான் இதைக்கும்.

நெல்லிக்காய்ச் சாறு 13 பலம். (பச்சை நெல்லிக் காய் அகப்படாத காலங்களில் இருபது பலம் நெல்லி முள்ளியில் 4 படி நீரைவிட்டு ஒருநாளிர வைத்து மறு நாள் காய்ச்சி எட்டிலொன்று பாக மாகச் சுண்ட வைத்து வடிகட்டித் திப்பி நீக்கி யெடுத்துக் கொள்ளவும்)

ரோசாப் பூத்தூள் 6 வராகனெடை, கோரைக் கிழங்குத் தூள் 5 வராகனெடை, ஏலக்காய் விதைத் தூள் 4 வராகனெடை, சடாமாஞ்சிற் றூள், இலவங்கப் பூத்தூள், சிறுநாகப்பூத் தூள், இலவங்கப் பத்திரித் தூள், இவை வகையொன்றுக்கு 3 வராகனெடை, சாதிப் பத்திரித் தூள், ஜாமேல்சித் தூள்,

நாங்கள் நாரத்தைத் தோல் சாறு, அல்லது கிச்சிலி நாரத்தம் பழத்தோல் சாறு, இஞ்சிக் கிழங்குச் சாறு, இவை வகையொன்றுக்கு ௨ வராகனெடை, இதைச் சுருக்கு வைப்பவும்.-

செய்முறை:- ரூமி மஸ்தகித் தூளைத் தவிர மற்றெல்லாச் சரக்குகளையும் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். நெல்லிக்காய்ச் சாற்றில் அல்லது நெல்லிமுள்ளிக் கியாழத்தில் இனிச் சருக்கரையைக் கரைத்துப் பெற்றுச் சுத்தியானவற்றைப் பாகுபதத்தில் மேற்கூறியதைச் சிறுகச் சிறுகத் தூவிச் சுத்தமட்பாண்டத்தில் அல்லது வேறு வகைப் பாத்திரத்தில் அடைத்து இறுக்கி வைத்துக் கொண்டு ஆறியபின்பு ரூமி மஸ்தகித் தூளைத் தூவி மறுபடியும் நன்றாகக் கலந்து பீங்கான் ஜாடியிற் பத்திரப் படுத்த வேண்டும்..

அளவு:- 1-2 வராகனெடை. காலைமாலை இருவேளையும் உபயோகிக்கலாம். உணவின் பின் உபயோகிப்பது உத்தமம்.

தீரும் நோய்கள்:- செரித்திறனதிகமாகும். மந்தாக்கினி நோய் நீங்கி பசித்தீவனம் அதிகரிக்கும். பித்த வாந்தி, அரோசகம், விக்கல் முதலியவைகளைக் குணப்படுத்தும். ஈரல் இரைப்பை, ஆசயங்களைப் பலப்படுத்தும்.

குறிப்பு

நாமே மருந்தினை வேகியவுடன் இறக்கிப் பிழிந்துச் சேர்க்க வேண்டியதும். அப்படிச் செய்யாமல் கூட்டுடன் சேர்த்தால் அதிகக் கசப்பாகிச் சாப்பிடுவதற் கொவ்வாமற் போகும்.

இலவண மாத்திரை:

கறியுப்பு, இந்துப்பு, கல்லுப்பு; இவை வகை 1க்கு 3 3/4 வராகனெடை, உலர்த்திய புதினாயிலைத் தூள், இச்சிலிக் கிழங்குத் தூள், இவை வகையொன்றுக்கு 6 1/4 வராகனெடை, மஞ்சட் கடுக்காய்த் தோற் றூள், தான்றிக்காய்த் தோற் றூள், நெல்லி வற்றல் தூள், அரிசித் திப்பிலித் தூள், [illegible]ளைத் தூள், மேற்றோல் நீவின சுக்குத் தூள், கட்டை நீக்கிய வசம்புப் பற்பம், கருஞ்சீரகத் தூள், நற்சீரகத் தூள், வளையலுப்புத் தூள், இவை வகையொன்றுக்கு 1 1/4 வராகனெடை, கொத்துமல்லி விதைத் தூள், 8 வராகனெடை, சோம்புத் தூள், ஓமத் தூள், இவை வகையொன்றுக்கு 2 வராகனெடை, எலுமிச்சம் பழச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு, அல்லது நெல்லி வேர்க் குடிநீர், செல்லத் தக்க அளவு.

செய்முறை :- மேற்கண்ட இலைகளையும், சருகுகளையும் ஒன்றாகக் கலந்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு, எலுமிச்சம் பழச் சாற்றை விட்டுப் பிசைந்து மூன்று நாள் வைத்துப் புளிப்பேற்றி வெயிலில் வைத்துலர்த்திக் கொள்ள வேண்டும். பின்பு இதே போலவே நெல்லிக்காய்ச் சாற்றை அல்லது நெல்லிமுள்ளிக் கஷாயத்தை விட்டுப் பிசைந்து மூன்று நாள் வைத்துப் புளிப்பேற்றி நான்கு நாள் வெய்யிலில் வைத்துலர்த்திக் கல்வத்தில் இட்டு எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச் சிறுகச் சேர்த்து இரண்டு சாமநேர மரைத்து அரை வராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு :- 1-2 மாத்திரை. உணவு உட்கொண்ட பின் உட்கொள்வது நல்லது. காலை மாலை இரு வேளையும் பயன்படுத்தலாம்.

தீரும் நோய்கள் :- இரைப்பையிலுள்ள வாயுவைக் கண்டிக்கும். இரைப்பையைப் பலப்படுத்திச் செரித்திறனைப் பெருக்கும். மலத்தாக்கினைக் கண்டித்துத் தீபாக்கினியைப் பெருக்கும். விக்கலைக் கண்டிக்கும்.

ஆவாரை இளகம்.

தூசி, காம்பு முதலியவை நீக்கி
வெயிலிலுலர்த்தி யிடித்துத் துணியில் வடிகட்டிய
ஆவாரைத் துளிராவாரைத் தூள், மேற்புறணியைச் சீவி
உள் நரம்பை நீக்கிப் பாலில் வேகவைத் துலர்த்தின
நிலைச் சிவதை, அல்லது நாட்டுச் சிவதை வேர்த்தூள்,
மஞ்சட் கடுக்காய்த் தோற்றூள், மேற்றோலைச் சீவி
யிடித்துத் துணியில் வடிகட்டிய சுக்குத்தூள்,
இலவங்கப்பாய் வறுத்திடித்துத் துணியில் வடிகட்டிய
அரிசித் திப்பிலித் தூள், மாதுளம் பழத் தோலை வெயி
லிலுலர்த்தி யிடித்துத் துணியில் வடிகட்டிய தூள்,
இவை வகையொன்றுக்கு ~~…~~ 1/2 பலம். சீனிச் சர்க்
கரை 3 பலம்.

<u>செய்முறை</u>:- சர்க்கரையைப் பாகு செய்து
பாகு பதத்தில் மேற்படி தூட்களைச் சேர்த்து இளகத்தாவி
நன்குக் கிண்டி வைத்துக் கொள்ளவும்.

<u>அளவு</u>:- 1/2 - 1 - வராகனெடை, காலையில்
வெறும் வயிற்றில் சாப்பிடவேண்டும்.

<u>தீரும் நோய்கள்</u>:- இலகு பேதியாகும். இரைப்பையிலுள்ள
தூர் மலங்களை நீக்கி அதைப் பலப்படுத்தும். பசித்தீபனம் அதிகப்படும்.

ஆவாரை மாத்திரை

இலை, காம்பு முதலியவைகளை யாய்ந்த சுத்தமா வாரைத் தூள், மஞ்சட் கடுக்காய்த் தோல் தூள், சுக்குத் தூள் இவை வகையொன்றுக்கு 2½ வராகனெடை. விதை முதலியவைகளை நீக்கிச் சுத்தி செய்த கிராட்சைப் பழம் 30 வராகனெடை.

செய்முறை:- மேற்கண்ட எல்லா வற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கல்லுரலிலிடித்து வெண்ணெய் போலான பின் எடுத்துக் கல்வத்தி லிட்டுக் கொஞ்சம் நீர்தெளித்து இரண்டு மணிநேர மரைத்து இரண்டு வராகனெடை யுள்ள மாத்திரைகளாகச் செய்யவேண்டும்.

அளவு:- ~~1¼~~ 1 — 1¼ மாத்திரை காலை ஒருவேளை மட்டும் உபயோகித்தால் போதுமானது. நோய்க் கடுமையாயிருந்தால் காலை மாலை யிருவேளையும் பயன்படுத்தலாம். இவற்றுக்கு இரண்டு மாத்திரை உபயோகிக்கவும் நேரிடும். அதனையாற்று உபயோகிக்கும் போல் உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள்:- மலக்கட்டு, மலச்சிக்கல், அதுவுண்டாகி மலம் இறுகும் வயிற்றுப் பொருமல் நீங்கும். மூத்திரக்கிரிச்ர நோய்

108.

உ

தீர்த்து பசித்தீபனம் அதிகப்படும்.

வெண்காரமாத்திரை.

கரியபோளம் 16 வராகனெடை, மிளகுத்தூள் 12 வராகனெடை, சுக்குத்தூள் 10½ வராகனெடை, வெண்காரம் 2 வராகனெடை, சோற்றுக்கற்றாழைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- கரிய போளத்தைத் தூளாக்கித் துணியில் வடிகட்டிக் கொள்ள வேண்டும். பிறகு எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து கல்வத்தி லிட்டுச் சோற்றுக் கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து அரைக் குன்றி யெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்ள வேண்டும்.

அளவு:- வாயு கோபங்களைத் தணிப்பதற் காக வேளையொன்றுக்கு ஒன்று மாத்திரையும் கொள்ள வேண்டும். மலக்கட்டை நீக்குவதற் காக வேளையொன்றுக்கு இரண்டு மாத்திரைகள் கொடுக்கலாம். அனுபானம் எதனாலும் சமயோசிதம் போல உடலியல்பிற்குத் தகுந்தபடியும் அது போகப்படியும் உபயோகித்துக் கொள்ளலாம்.

தீரும் நோய்கள்:- இரைப்பையிலுள்ள வாயுவைக் கண்டித்து அதனாலுண்டாகும் வயிற்று வலி முதலியவைகளைப் போக்கும். பசித் தீபனமுண்டாக்கும்.

செரிப்பு (ஜீரண) மாத்திரை:-

கருஞ்சீரகம், சுக்கு இவை வகைக்கு 1 பலம். (இவ்விரண்டையும் வறுத்துத் தூள்செய்து துணியால் வடிகட்டிக் கொள்ள வேண்டும்) பனைவெல்லம் 4 பலம், பசுவின் நெய் 1½ பலம், தேன் 1½ பலம்.

செய்முறை:- வெல்லத்தைப் பாகு செய்து அடுப்பேற்றி இளந்தீயாக வைத்து நன்கு கொதி வந்தவுடன் வடிகட்டி அதிலுள்ள தூசி முதலியவைகளை நீக்கிவிட்டு மறுபடியும் அடுப்பேற்றிக் காய்ச்சிப் பாகுபதத்தில் மேற்படி சூரணங்களைத் தூவிக் கிண்டிக் கிளறி நெய்யையும் தேனையும் சேர்த்துக் கலந்துப் பின் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

~~அளவு:- ½ வராகனெடை.~~

அளவு:- ½ - 1 வராகனெடை காலைமாலை யிருவேளையும் உபயோகிக்கலாம். உணவுகொண்ட பின் உபயோகிப்பது நல்லது.

<u>தீரும் நோய்கள்:-</u> உணவைச் சீராக்கச் செய்யும். இரைப்பையிலுள்ள வாயுவைக் கண்டிக்கும். செரிதிறனை அதிகப் படுத்தும்.

மஞ்சட் கடுக்காய்த் தோற்றூள், குச்சி, சோம்பு போன்றவைகளை நீக்கிச் சுத்தம் செய்த நில ஆவாரைத் தான் வகைக்கு 4 வராகனெடை, விதை, குச்சி இவைகளை நீக்கிய திராட்சைப்பழம் 2 1/2 வராகனெடை, மேற்றோல் நீக்கி யெடுத்துத் தணலில் வறுகட்டிய அக்ரோட்டான் 1 வராகனெடை, நாட்டுச் சர்க்கரை 5 வராகனெடை.

<u>செய்முறை:-</u> எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு மை போலரைத்து ஒவ்வொரு வராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

<u>அளவு:-</u> 1 மாத்திரை. இரவில் உறங்கப் போகும் போது சாப்பிட வேண்டும்.

<u>தீரும் நோய்கள்:-</u> மலச்சிக்கல், மலக்கட்டு ஆகியவைகளை நீக்கி [illegible] கிரமப் படுத்தும். மந்தாக்கினி நோயைக் கண்டித்து செரிதிறனைப்

உ

பெருக்கும். உட்கொண்ட ஆகாரங்களைச் செரிக்கச் செய்யும்..

காய மாத்திரை:

மேற்சொல்லச் சிவியழுத்துத் துணையில் வருகட்டிய சுக்கிறத்தான் 1 பலம். பொரித்த வெண்காரம் மஞ்சட் கடுக்காய்த் தோற்றான், திப்பிலி, பெருங் காயம் இவை வகை யொன்றுக்கு ½ பலம். இவைகளை வேப்பட்டைச் சாறு செல் விட்டுக அரை.

செய்முறை:- பெருங்காயத்தை ஆட்டுப்பாலில் பொரித்து மேற்படித் திராட்சையுடன் சேர்த்துக் கொண்டு அரைத்துக் கலந்து மேற்படி சாற்றைக் கொடுக்கத்து வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து நாலு குன்றிமணி யெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி ஈரமில்லாமல் நன்றாயுலர்த்திய பின்பு கொஞ்சம் நெய்யைத் தொட்டு இளஞ் சூடாக வறுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு:- 1-2 மாத்திரை. உணவிற்குப் பின் ~~இருவேளை கொள்ளலாம்~~ காலை மாலை யாக இருவேளையுமே கொள்ளலாம்.

தீரும் நோய்கள் :- இரைப்பை, மண்ணீரல் இவைகளை களைவுள்ள வாயுவைக் கண்டிக்கும். உட்கொண்ட உணவுகளைச் சீரணிக்கச் செய்யும். பசித்தீபனத்தைப் பெருக்கும். மாந்தம், செரியாமை, [illegible] [illegible] பேதி ஆகியவைகளைக் கண்டிக்கும்.

குறிப்பு

முருங்கை வேர்ப்பட்டை அகப்படாத காலங்களில் முருங்கைப் பட்டைச் சாற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். அதுவும் அகப்படாத காலத்தில் முருங்கையிலைச் சாற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

ஜீரணத் திரிபலாதி லேகியம்:

மஞ்சள் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிவற்றல், கருப்புப்பு, [illegible] காப்பு இவைகளை [illegible] துணியில் [illegible] தூள், இவை வகைக்கு ½ பலம். எலுமிச்சம் பழச்சாறு தேன் தக்க அளவு.

செய்முறை:- மேற்படித் தூள்களைக் கல்வத்திலிட்டு மேற்படிச் சாற்றைச் சிறுகச் சிறுகச் சேர்த்து இரண்டு சாம நேரம் அரைத்து மெழுகு பதமாக

னடை யுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலி
லுலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு:- 2 - 3 மாத்திரை. ~~நித்திரைக்குப்~~ உறங்கப்
போகும் போது இதனைக் கொண்டு கிழித்து
வெந்நீரருந்தி ~~[illegible]~~ புறங்கச் செல்ல வேண்டும்.
உடலியல்பை யறிந்து மாத்திரைகளை கூட்டியுங்
குறைத்துங் கொள்ளலாம்.

தீரும் நோய்கள்:- மலக்கட்டை நீக்கி மலத்தைத்
முறைப் படுத்தும். சீரணதிறனை யதிகப் படுத்தும்.

புதின மாத்திரை.

உலர்ந்த புதின விதைத்தூள், இந்துப்புத்தூள்,
சுக்கான் கீரை விதைத்தூள், மஞ்சட்கடுக்காய்த்தோல் தூள்,
சோம்புத்தூள், இவை வகையொன்றுக்கு 3 வராகனெடை,
மேற்றோல் நீவின சுக்குத்தூள், மிளகுத்தூள், அரிசித்
திப்பிலித் தூள், கொடிவேலி வேர்ப்பட்டைத்தூள்,
ஓமத்தூள், இவை வகையொன்றுக்கு $\frac{7}{8}$ வராகனெடை.
எலுமிச்சம் பழச்சாறு தேவைத் தக்க அளவு.

செய்முறை:- எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்துக்
கல்வத்திலிட்டு மேற்படி எலுமிச்சம் பழச்சாற்றைச்

இறுகச் சுருக வாற்றொது உடனே நேரமரைத்துக்
கால் வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்
செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

<u>அளவு</u>:- 1-2-3 மாத்திரைகள், காலை மாலையு
வேளையு உபயோகிக்கலாம். உணவை யுட்கொண்ட
பின்பும் உபயோகிக்கலாம்.

<u>தீரும் நோய்கள்</u>:- மந்தாக்கினி நோய், குன்ம
நோய், செரியாமை நோய், அஜீரணங்களைக்
கண்டிக்கும். பசித் தீபனத்தைப் பெருக்கும்.
புளித்த ஏப்பம், வாயுவினா லுண்டாகும் ஏப்பம்,
வயிறு உப்பிசம், வயிற்றி லுண்டாகும் வலிகள்.
இவைகளை நீக்கி இரைப்பையைப் பலப்படுத்தும்.

<u>வேறு</u>

கருப்புப்புத்தூள், சுக்கான் கீரை விதைத்தூள் இவை
வகையொன்றுக்கு 3 வராகனெடை, ஓமத்தூள் ½ வராகனெடை,
இலவங்கத் தூள், மிளகுத் தூள், இவை வகையொன்றுக்கு
¼ வராகனெடை, சுக்கான் கீரைச் சாறு அல்லது
எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு..

<u>செய்முறை</u>:- மேற்படி தூள்களைக் கல்வத்திலிட்டு

மேற்படிச் சாற்றைக் கிறுக்கி இறுகவராக்கிரண்டு
சாமை சோறமணைத்துக்கால் வராகனெடையுள்ள
மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ள
வேண்டும்.

அளவு:- 1-2 மாத்திரை. உணவுபுட்கொண்ட
பின் தேன் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள்:- பசித்தீயை அதிகப்படுத்தும்.
வயிற்றிலுள்ள உணவைச் சீரணிக்கச் செய்யும்.
மந்தாக்கினி நோயைக் கண்டித்து இரைப்பையைப்
பலப்படுத்தும்.

ஆமலை லேகம்.

அரிசித் திப்பிலித் தூள், மஞ்சட் கடுக்காய்த் தோற்
தூள், சிந்துப்புத் தூள், கறியுப்புத் தூள், கருப்
புப்புத் தூள், வாலீத் வெண்காரத் தூள், தூய்மை
செய்யப்பட்டது (சுத்தி) நல்லதாயகப்படாவிட்டால்
அதற்கு மருந்துக் கடைகளில் விற்கின்ற
சோடாவைச் சேர்த்துக் கொள்ளவும்) இவை
வகைக்கு 1/4 பலம், எலுமிச்சம் பழச்சாறு
1/4 படி, புளிப்பு மாதுளம் பழச்சாறு 1/4 படி.

செய்முறை:- மேற்படித் தூட்களை யெல்லாம் ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு மேற்படி எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு வெயிலில் வைக்க வேண்டும். அதில் தூசி முதலியவை விழாதபடி மெல்லிய துணியால் வேடு கட்டி வைக்க வேண்டும். நாள் தோறும் இரண்டொரு தடவை மூங்கிற் குச்சியால் அல்லது மர அகப்பையால் அல்லது பீங்கான் கரண்டியால் கலக்கி வர வேண்டும். அதிலுள்ள சாறெல்லாஞ் சுண்டின பின்பு புளிப்பு மாதுளம் பழச்சாற்றை விட்டு முன்போல் வெயிலில் வைத்துச் சுண்ட வைக்க வேண்டும்.

குறிப்பு

இப்பாகத்தில் எலுமிச்சம் பழச்சாறு புளிப்பு மாதுளம் பழச்சாறு இவை வகையொன்றுக் கொக்கால் படியென எழுதப்பட்டிருக்கிறது. அதனை அநுபவத்தில் வகைக்கு முக்கால் படிச் சாற்றில் தடவை யொன்றிற்கு மேற் கண்டபடி கால் கால் படிச் சாறாக மாற்றி மாற்றிச் சுண்ட வைத்துக் கொண்டால் அதிகச் சிறப்புக் குணத்தைத் தருகின்றது.

அளவு:- 1/4 வராகனெடை. இதனை வாயாற் போட்டுக் கொண்டு அதன் மேல் கொஞ்சம் வெந்நீரை அல்லது

இளைத்த நீரைப் பருகவேண்டும். காலை மாலையிரு வேளையும் பயன்படுத்தலாம். இல்லது உணவைச் சாப்பிட்ட பிறகும் உபயோகிக்கலாம்.

தீரும் நோய்கள்:- உட்கொண்ட உணவை செரிக்கச் செய்யும். பசித்தீபனத்தை அதிகப்படுத்தும். இரும நோய், பாண்டு நோய், ஆகியவைகளுக்கும் உபயோகமாம். வயிற்றிலுள்ள வாயுக்களைக் கண்டித்து குறைப்பையைப் பலப்படுத்தும்.

கடுக்காய் மாத்திரை

பிஞ்சுக் கடுக்காய்த்தூள் 2 பலம், திப்பிலிக் கிழங்குத் தூள், சோம்புத் தூள், இவை வகையொன்றுக்கு 1 பலம், பொரித்த வெண்காரத்தூள் 1/2 பலம்.

செய்முறை:- மேற்படி தூள்களைக் கல்வத்தி லிட்டுக். இளைத்த நீர் வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து அரை வராகனெடை எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:- பெரியவர்களுக்கு இரண்டு மூன்று சிறுவர்களுக்கு ஒன்று, அரை.

உ.

துணைமருந்து:- சீனிச் சருக்கரை, வெல்லம், வெந்நீ
ட பன்னீர், முலைப்பால் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- மலக்கட்டு, மலச்சிக்கல், ஆகியவை
களை நீக்கி மலத்தைக் கிளப்பும். இரைப்பை
யிலுள்ள வாயு, கபக்கட்டு, குளிர்ச்சி ஆகியவை
களை நீக்கி இரைப்பையைச் ~~சு~~ சுத்தப்படுத்தி அதனைப்
பலப்படுத்தும்.

குறிப்பு

இந்த மாத்திரையானது பாற்குடிக்கும்
குழந்தைகட்கும் உபயோகப்படுத்தக்கூடியது.
இதை வாரத்தில் இரண்டு மூன்று முறையல்லது
ஒன்றைவிட்டொருநாள் பால்குடிக்கும் குழந்
தைகட்கு உபயோகித்து வருவதால் வயிற்றில் பாற்
கட்டு, வாயுக்கட்டு, புளிப்பு, முதலியவைகள் சேராமல்
இரைப்பையைத் தூய்மை செய்து நல்ல நலத்தைக்
கொடுக்கும்.

இலவணாதி மாத்திரை.

லாகோருப்பு, இந்துப்பு, கடப்பைக்காரம்
கருப்புப்பு, சோடாவுப்பு, மஞ்சட் கடுக்காய்த் தோற்றூள்,
தான்றிக்காய்த் தோற்றூள், நெல்லிமுள்ளித்தூள்

சோம்புத்தூள், ஓமத்தூள், இவை வகையொன்றுக்கு 1 வராகனெடை, கருஞ்சீரகத்தூள், நற்சீரகத்தூள், கொடிவேலி வேர்ப்பட்டைத்தூள், [illegible] சீவியெடுத்துக் காய்ந்த தூள், மிளகுத்தூள், அரிசித்திப்பிலித்தூள், பொரித்த வெண்காரத்தூள், நவச்சாரம், இந்துப்பு, காசுக் முதலியவை சீக்கிரனைச் சேர்த்து சில ஆவாரைத் தூள், இவை வகைக்கு 1/2 வராகனெடை, பொரித்த பெருங்காயத்தூள் 1/4 வராகனெடை, எலுமிச்சம் பழச்சாறு 1/4 படி.

செய்முறை:- உப்புக்களை வெவ்வேறாகப் பொடித்து மற்ற திரவ்யங்களையும் சேர்த்துச் சூர்ணித்து நீராகாரத்துடன் கலந்து எலுமிச்சம் பழச்சாற்றை இருக்க இருக்க வார்த்து அரைத்துச் சாறெல்லாந் தீர்ந்த பின்பு திரள் பதத்தில் கால் வராகனெடை புன்னை மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு:- 1-2 மாத்திரை.

தீரும் நோய்கள்:- வாயுக்களைச் செம்மையாகக் கண்டிக்கும். உட்கொண்ட உணவைச் செரிக்கச் செய்யும், செரியாமைப்பேதி, மந்தபேதி

அருசியவைகளைக் கண்டிக்கும். இரைப்பையிலுள்ள குற்றங்களை நீக்கி யதைப் பலப் படுத்தும்.

இருப்பு

இதனை உணவிற்குப் ~~பின்~~பின்பும் சாப்பிடலாம். காலை மாலை யிருவேளையும் பயன்படுத்தலாம். ~~தேவை~~ தேவையான மற்ற நேரங்களிலும் உப யோகித்துக் கொள்ளலாம்.

இங்குவாதி மாத்திரை

உயர்தரமானப் பெருங்காயம், முசுட்டைக் காய்த் தோற்றூள், மேற்றோலைச் சீவியெடுத்த சுக்குத்தூள், கருப்புப்பு, வாய்விளங்கத்தூள், கொடிவேலி வேர்ப்பட்டைத்தூள், இவை வகை யொன்றுக்கு ½ பலம், பனைவெல்லம் 20 பலம்.

செய்முறை:- ~~பெரு~~ பெருங்காயத்தைப் பொரித்துச் சூரணித்து மற்றச் சூரணங்களையுஞ் சேர்த்து மைபோலரைத்துக் கொள்ளவும். வெல்லத்தைக் கொஞ்சம் நீரிற் கரைத்து அடுப்பேற்றிக் கொதிக்க வைத்தால் கொதி வந்தவுடன் வடிகட்டித் திப்பி தெளிவனவைகளை நீக்கி மறுபடியும் அடுப்பேற்றிக் காய்ச்சிக் கொட்டைப் பாகு பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு

மென் துணியிற் சேர்த்துத் தொடணி நேர முறைத்துப்
பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்த
வேண்டும்.

<u>அளவு</u>:- 1¼ - 1½ வராகனெடை. இதனை
காலையில் வெறு வேளை உட்கொண்ட தன்மேற்
சிறிது வெந்நீரைப் பருக வேண்டும்.

<u>தீரும் நோய்கள்</u>:- இரைப்பையைச் சுற்றியுள்ள வாயுக்கள்,
வயிற்றிரைச்சல், வயிற்றுப் பொருமல், வயிற்றுப்
புண்டாக்கும் சூத்தம், வாயுத் தொடர்பான
குன்ம நோய், கபத் தொடர்பான இரைப்பு நோய்
முதலியவைகள் தீரும்.

இலவணத் திச்சாரம்:

கறுப்புப்பு 5 பலம், மேற்சொற் சீவியெடுத்த
சுக்குத் தூள் 12 வராகனெடை, சீரகத் தூள், கொடி
வேலி வேர்ப்பட்டைத் தூள், வகைக்கு 7 வராக
னெடை, அரிசித் திப்பிலித் தூள், மஞ்சட் கடுக்
காய்த் தோற் றூள்: இவை வகையொன்றுக்கு
2 வராகனெடை, எலுமிச்சம் பழச்சாறு
தேவைக்குத் தக்க அளவு.

செய்முறை:- எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து 7 சாமம் நேரமரைத்து மையாயுலர்த்த வேண்டும். ஈரமில்லாமல் நன்குலர்ந்த பின்பு மறுபடியும் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போல் எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து 7 சாமம் நேரமரைத்து முன்போல் வெயிலிலுலர்த்த வேண்டும். மூன்றாம்முறையும் எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து முன்போலுலர்த்திப் பொடித்துப் புட்டியால் பத்திரப்படுத்தவும்.

பஸித்தீபன விதிமுறை.

மணகாயை வெய்யிலிலுலர்த்திப் பொடித்துத் தூள் ௧/௨ பலம், எலுமிச்சம் பழச்சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை:- மேற்படிச் சூரணத்தைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நாலு சாமம் நேர மரைத்து வெய்யிலில் வைத்துலர்த்த வேண்டும். மறுநாட் காலையில் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போல் எலுமிச்சம்

பழச் சாற்றைத் திருகத் திருக வரைந்து இன்
போளவாடு சாமமுறைத்து முன் போலுலர்த்த
வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி
அரைத்து வெளர்த்தியும் நாற்பது நாட் செய்தி
ரண்டு இருந்தி மணி நயமை யுள்ள மாத்திரை
களாகச் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்
படுத்தவும்..

அளவு:- ஒரு மாத்திரை. இஞ்சி யோடு
வெற்றிலையால் வைத்து மென்று சாப்பிடவேண்டும்.

தீரும் நோய்கள்:- அடங்காப் பசியை யுண்டாக்கும்.
நாம் பிறப்பதும், பாடாணம் பற்பம், செந்தூரங்களை
உபயோகித்து அடங்காப் பசியுண்டாவது
வழமை. நாம் ~~[illegible]~~ காண் தொற்றும் உயர்
பருத்தி வரும் இந்த ~~[illegible]~~ வினையானதைப் போக்க
மேற்கண்ட முறையாகப் பக்குவப் படுத்து
வதில் ~~[illegible]~~ மேற்படி வியாதிக்குக்
குணமுண்டாகி விடுவதால் இவ்வொன்றையும்
அதனதன் முறைப்படிப் பக்குவப் படுத்துவதின்
சிறப்புக் குணம் நன்கு விளங்கும்.

குறிப்பு

மேற்கண்ட விதமாக இதை நாற்பது நாள் அரைக்கச் சொற்பு படுபவர்கள் குறைந்த அளவு ஒருவாரமேனும் மேற்கண்ட முறையாகப் பக்குவப் படுத்திப் பயன் படுத்தினால் சொயரோக நோய், மந்தாக்கினி நோய், முதலியவைகள் தீரும். நெஞ்சுவேதிக்கு இதைப் பயன் படுத்திக் குணம் கண்டிருப்பதாக நமது நண்பர்கள் கூறுவதால் தெரிய வந்திருக்கின்றது. உண்மையில் அவ்விதக் குணமுண்டென்பதற்குச் சந்தேகமில்லை..

வேறு

மேற்றோல் நீக்கின சுக்குத்தூள் 1 பலம். சோம்புத்தூள் ½ பலம், வெருங்காயம் 1½ பலம். எலுமிச்சம் பழச்சாறு கொள்ளத் தக்க அளவு.

செய்முறை:- கல்வத்திற் வெருங்காயத்தைப் பொட்டுத்தூள் செய்து மேற்படிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துரைத்து வெண்ணெய் போலானபின்பு மற்றத்தூட்களையுஞ் சேர்த்து மேற்படிச்சாற்றையே சிறுகச் சிறுக வார்த்திரண்டு சாம நேர மரைத்து ஒரு வராக எடையுள்ள வில்லை மாத்திரை

காரகச் செய்திருப்புச் சட்டியைக் கனலடுப்பின் இளக்கக் காய்ச்சி யதன் மீது வைத்துப் பின்புகள் இவற்று பொனைப் பக்குவத்தில் வறுத்துப் பொடித்துப் புட்டியாற் பத்திரப் படுத்தி வைத்துக் கொள்ளவும்.

அளவு:— 1/4 – 1/2 வராகனெடை, இதனை யுட்கொண்டு மேலெக்கொரக்கம் வெந்நீர் பருகவும்.

தீரும் நோய்கள்:- இரைப்பையிலுள்ள வாயுக்கள், வயிற்றுப் பொருமல், வயிற்றிரைச்சல் இவையாகள் தீரும். வயிற்று நோய், மந்தாக்கினி நோய், சொயரணை நோய், தெலியவைகள் தீரும். மந்த பேதி, சௌரணை நோய், அசியவை களுங் குணமாம். இரைப்பையின் அக்கிர தேர்தை நீக்கிக் கிரமப் படுத்தியதைப் பலப் படுத்தும்.

ஏல மாத்திரை.

ஏலத்தூள் 1/2 பலம், கிராம்பு 1/2 பலம் கையாந்தகரைச் சாறு செல்லத்தக்க அளவு.

உ

செய்முறை:- இவ்விரண்டையுங் கல்வத்திலிட்டு மேற்படிச் சாற்றாற் சிறுகச் சிறுகவார்த்தொரு சாம நேர மரைத்துக் கல்வமாக னவுடன் மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

அளவு:- 2 - 3 மாத்திரைகள், பாண்டு நோயாளர்க்குக் கையாந்தகரைச் சாற்றி லரைத்துக் கொடுக்கலாம்.

தீரும் நோய்கள்:- சொயமை நோய், மந்தாக்கினி நோய், இவையாவைகள் நீங்கி ஜடராக்கினி யதிகப் படும்.

இரைப்பை நோய் மருத்துவம்.

கிராமப் பத்திரியிலை 1 பலம். தூய்மை செய்த பாலரசம் 1 வராகனெடை.

செய்முறை:- மேற்படி யிலையைக் கல்வத்தி லிட்டு ஒரு சாம நேர மரைத்து வெண்ணெய்ப் போலான பின்பு மேற்படி ரசத்தைச் சேர்த்திரண்டு சாம நேர மரைத்து ரசமானது சேர்மையாக மறைந்த பின்பு பீங்கான் ஜாடியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :- 1-2 - அரிசியெடை, காலையிலொருவேளை மட்டும் வெற்றிலையில் வைத்து மென்று சாப்பிட வேண்டும். ~~[illegible]~~ வெயிற்காலத்தில் ~~[illegible]~~. இருபது நாள் சாப்பிட்டால் போதுமானது. மழைக்காலமாயிருந்தால் நாற்பது நாள் சாப்பிட வேண்டும்.

தீரும் நோய்கள் :- இரைப்பையாலுள்ள நோய்கள் தீர்ந்து ~~[illegible]~~ பசி தீபன மதிக முண்டாகும். தாதுப்பெருக்கம், உடல்பலம் முதலியவை களுண்டாகும்.

குறிப்பு.

இரும்புப் பத்திர இலையானது சாதிப் பத்திரியைப் போலிருக்கும். சுவைத்தால் சாதிப் பத்திரியின் சுவையே இருக்கும். அதன் மணமும் சாதிப் பத்திரியின் மணமே மணக்கும். இது மலைப்பாங்கும் தென்னந் தோப்புகள் முதலிய இடங்களிலுண்டாகும். இந்த இலையான் பலத்தினை இரசமானது பற்றையா யிருக்கும் எவ்வித குற்றமு முண்டாகாது. நல்ல உடலினர்க்கும் பொருந்தும்.

மேற்படிவேறு.

ஆமம் தேவையான அளவு- சோற்றுக்

கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- ஓமத்தைப் புடைத்துக் கல் முதலியவைகளை யாய்ந்து தூய்மை செய்து ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டுச் சோற்றுக் கற்றாழைச் சாற்றை விட வேண்டும். இந்தச்சாறானது ஓமத்தின் மேலாக அங்குலம் வரையாவது நிற்க வேண்டும். இவ்விதம் ஒருநாளூற வைத்து மறுநாள் நன்றாகப் பிசறி வைத்துச் சாறெல்லாஞ் சுவறியபின்பு வெய்யிலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். ஈரமில்லாமல் உலர்ந்த பின்பு முன்போல் எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு ஓரிரவு ஊறவைத்து மறுநாள் வெயிலிலுலர்த்திக் கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி எலுமிச்சம் பழச்சாற்றில் 7 தடவைகள் ஊற வைத்துலர்த்திக் கொள்ள வேண்டும்.

அளவு:- 1/4 - 1/2 - 1. இதனை மென்று தின்று விட்டு மேலே கொஞ்சம் வெந்நீர் சாப்பிடலாம்.

தீரும் நோய்கள்:- மந்தாக்கினி நோய், செரியாமை நோய், வயிற்றுப் பிசம், வயிற்றுப் பொருமல் ஆகியவைகள் தீரும்.

சிறுவர்களுக்காயில் மேற்படி அளவிற் குறைந்த அளவாக வெடுத்துப் பொடித்துத் தேன் சீனிக்கரை முதலியவைகளிற் சேர்த்துப் பயோகிக்கலாம். பால்குடிக்கும் குழந்தைகட்கு தகுதின்றி மண்ணையை மேற்படித் தூளைப் பாலிற்கலந்து குடிப்பாட்டி வரப் பசித் தீபனம் அதிகமாயுண்டாகும். இரைப்பையில் பால் கட்டுப் பட்டு மந்தம் முதலியவைகள் உண்டாகா.

திரிகடுகுத் தூள்.

மேற்சொல் லீவின சுக்குத்தூள், மிளகுத்தூள் அரிசித்திப்பிலித்தூள், இவை வகையொன் றுக்கு 1 பலம்.

செய்முறை:- இவை யெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:- 3/4 - 1 1/2 வராகனெடை.

தீரும் நோய்கள்:- இரைப்பையாலுள்ள வாயுக் குணக் கண் டிக்கும், தீபாக்கினி யதிகப்படும். ~~[illegible]~~ சௌதிரதை யதிகப் படுத்தும்.

குறிப்பு

தேவையானால் மேற்கண்ட தூளுடன் சேர்ந்துபலம்

உ

இனிச் சருக்கரையைச் சேர்த்துச் சாப்பிடலாம். அல்லது சருக்கரையைப் பாகு செய்து அதிற் சூரணத்தைப் போட்டு இளகமாகச் செய்தும் உபயோகிக்கலாம். விரும்பினால் நெய், தேன் ஆகியவைகளை வகையொன்றுக்கு 1/2 பலம் வீதம் இளகமாகச் செய்தும் உபயோகிக்கலாம்..

சதுரச் சாங்கத் தூள்:

பெருலவங்கப் பட்டை, இலவங்கப் பத்திரி நாகப் பூ, ஏலரிசி, இவற்றின் தனித்தனித் தூள் வகையொன்றுக்கு 1 பலம். இனிச்சருக்கரை 4 பலம்.

செய்முறை:- இவையெல்லாவற்றையும் ஒன்றுசேர்க் கலந்து வைத்துக் கொள்வதேயாம்.

அளவு:- 1-2 - வராகனெடை, காலைமாலை யிரண்டு வேளையும் உபயோகிக்கலாம். உணவை யுண்ட உடனேயும் உபயோகிக்கலாம்.

தீரும் நோய்கள்:- இரைப்பையாலுண்டாகும் வாயுக் குணக் கண்டிக்கும். சாப்பிட்ட வுடனுண்டாகும். வயிற்று நோயைப் போக்கும். சாப்பிட்டவுடன்

உ

~~[illegible]~~ மலம் போவது இலேசிக்கு வழமை; அவ்விதக் கெட்ட வழக்கத்தையும் நீக்கும். இரைப்பையைப் பலப் படுத்தும். சௌந்திரத்தை யதிகப் படுத்தும்.

பஞ்சகோலச் சூரணம்.

மேற்றோல் நீவின சுக்குத்தூள், அரிசித் திப்பிலித்தூள், சித்திர மூல வேர்ப்பட்டைத்தூள், தான்றிக்காய்த் தோற்றூள், கண்டதிப்பிலித்தூள், இவை வகையொன்றுக்கு 1/2 பலம், சீனிச்சருக்கரை 1/2 பலம்.

செய்முறை:- இவையெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொள்வதேயாம்.

அளவு. 1-2-வராகனெடை

தீரும்நோய்கள்:- இரைப்பையிலுள்ள வாயு, கபக்கட்டு, அடங்கியவைகளைக் கண்டித்து நல்லபசித் தீபனத்தை யுண்டாக்கும்.

ஏரண்டத் தெண்ணெய்.

சிற்றாமணக்கு அல்லது பேராமணக்கு இலைச் சாறு 1/4 படி, சிற்றாமணக் கெண்ணெய் 1/4 படி

செய்முறை:- இரண்டையுஞ் சேர்த்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துச் சாறெல்லாஞ் சுண்டின பின் வடிகட்டி எண்ணெயை மட்டுமெடுத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:- 1/4 - 1/2 பலம். காலைமாலை இருவேளை மருந்து உபயோகிக்கவேண்டும். வயிற்றின் மீதும் மேற்பூச்சாகப் பூசலாம்.

தீரும் நோய்கள்:- வாயுத்தொடர்பினாலுண்டாகும் வயிற்று நோய், மலபந்தத்தினாலுண்டாகும் வயிற்று நோய் ஆகியவைகள் தீரும். மலக்கட்டு, மலச்சிக்கல் ஆகியவைகளும் தீரும். குன்ம நோய்க்கும் தரவும்.

சதகுப்பை எண்ணெய்.

சதகுப்பைக் கீரை பிழிச்சாறு அரைப்படி நல்லெண்ணெய் 1 ஆழாக்கு.

செய்முறை:- இவ்விரண்டையுங் கலந்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துச் சாறெல்லாஞ் சுண்டின பின் இறக்கி வடிகட்டி எண்ணெயை மட்டுமெடுத்துப் பத்திரப் படுத்தவும்.

அளவு:- 1/4-1/2 பலம். இதனை மேலுக்கும் மேற் பூச்சாகப் பூசலாம்.

தீரும் நோய்கள்:- ஜீரணத்தில் தொடர்பான வயிற்று நோய், வாயுவினாலுண்டாகும் வயிற்று நோய், ஆகியவைகள் தீரும். இன்னும் உடலிலுண்டாகும் வாயுத் தொடர்பான வலிகளுக்கு இதனைப் பூசித் தேய்ப்பதினால் குணமுண்டாகும்.

வேறு சூரணம்.

மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக் காய்த் தோல், நெல்லி வற்றல், மேற்றோல் நீக்கின சுக்கு, அரிசித் திப்பிலி, மிளகு, கண்டத் திப்பிலி, இக்கீழ்வாய் நெல்லி, கொடிவேலி வேர்ப் பட்டை, திருநாகப் பூ, இந்துப்பு ~~[illegible]~~, இவற்றின் தூள் வகையான் வகைக்கு அரைப் பலம், பெருங் காயம் அரைப் பலம். (இதனைப் பொடி பொரித்து வறுத்துக் கொள்ளவும்).

செய்முறை:- தூள்களையெல்லாமொன்றாகக் கலந்து வைத்துக் கொள்வதேயாம்.

அளவு :- 1-2 வராகனெடை

தீரும் நோய்கள் :- வயிற்று நோய், இருமல்நோய், சயரோக நோய், மந்தாக்கினி நோய், இவையாவைகள் நீங்கிப் பசித் தீபனம் அதிகப் படும்.

இந்நூலின் இறுதிவரைக் கிடைத்திலது.

எழுதியது.

புலவர் : வ. வெ. ராசதேவன்

எழுதக்கிடைத்த நூலில் பக்கம் 13 முதல் 60 வரை கிடையன் இல்லை. நூலில் 1 முதல் 144 வரைய பக்கங்களே இருந்தன. இறுதிவரை இல்லை.

9/4/75